# மனிதர்

அலீ (ரலி) அவர்கள் ஒழுக்கத்தில், ஒப்புரவில், வீரத்தில், விவேகத்தில் அதிகம் உயர்ந்திருந்தார்கள். ஆனால் உருவத்தில் அவர்கள் உயர்ந்து இருக்கவில்லை. சற்றுக்குள்ளமானவர்களாகவே அவர்கள் இருந்தார்கள். குள்ளமானவர்களில் பெரும்பாலார் வினய மானவர்கள் என்றும், உயரமானவர்களில் பெரும்பாலார் வெள்ளையானவர்கள் என்றும் சொல்லுவதுண்டு. ஆனால் இதற்கு அலீ (ரலி) அவர்களும் அபூபக்ர் (ரலி) அவர்களும் விதிவிலக்கு. குள்ளமானவர்களில் வெள்ளையானவர்கள் ஆவர் அலீ (ரலி) அவர்கள், உயரமானவர்களில் வினயமானவர்கள் ஆவர் அபூபக்ர் (ரலி) அவர்கள்.

தாம் குள்ளமாயிருப்பதையும், அபூபக்ர் (ரலி) அவர்களும், உமர் (ரலி) அவர்களும் உயரமானவர்களாயிருப்பதையும் வைத்து, அலீ (ரலி) அவர்கள் ஒரு சமயம் ஒரு விகடம் செய்தார்கள். ஒரு நாள் இளம் காலையில் அவர்கள் மூவரும் தெரு வழியே சென்று கொண்டிருந் தார்கள். அலீ (ரலி) அவர்கள் நடுவிலும், அபூபக்ர் (ரலி) அவர்களும், உமர் (ரலி! அவர்களும் அலீ (ரலி) அவர்களின் இருபுறங்களிலும் இருந்தனர். அப்பொழுது அவர்கள் மூவரின் நிழலும் முன்புறத்தில் விழுந்தது. அந்த நிழல் 'லனா' என்னும் அரபிச் சொல்லின் வடிவத் தில் இருந்தது. அலீ (ரலி) அவர்கள் குள்ளமாயும், அவர்களுக்கு இரு புறமும் வந்த அபூபக்ர் (ரலி) அவர்களும், உமர் (ரலி) அவர்களும் உயரமாயும் இருந்ததே அதற்குக் காரணமாகும். நிழலைப் பார்த் ததும் அலீ (ரலி) அவர்களின் மனத்தில் ஓர் எண்ணம் நிழலாடியது. அவர்கள் தம் இருபுறமும் இருந்தவர்களைப் பார்த்து, ''நான்

இல்லாவிட்டால் நீங்கள் இல்லை!'' என்றார்கள். அதைக் கேட்டு அவர்கள் இருவரும் திகைத்தனர். அப்பொழுது அலீ (ரலி) அவர்கள் தம் முகத்தில் முறுவல் மலரக் கூறினார்கள். 'லனா என்னும் சொல்லின் நடுவில் குள்ளமாயிருக்கும் 'நூன்' நான். அதாவது உங்கள் இருவருக்கும் நடுவில் இருக்கும் நான். நூன் என் நிழல் ஆகும். அந்நிழலில் நான் இல்லாவிட்டால் அது 'லா' என்ற வடிவத்தில் விழும். 'லா' என்பதன் பொருள் இல்லை என்பதாகும். அதாவது நான் இல்லாவிட்டால் நீங்கள் இல்லை!'' என்று.

இப்படி எதற்கும் அறிவான விளக்கம் அளிக்கும் திறன் அலீ (ரலி) அவர்களிடம் அதிகம் அமைந்திருந்தது. அறிவு தலையில்தான் இருக்கிறது என்பது எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்படும் ஒன்று. அவர்களின் தலையில் அறிவு நிறைந்திருந்தது. ஆனால் உரோமம் குறைந்திருந்தது. பெரும்பாலும் அவர்கள் அந்தத் தலையில் தலைப் பாகை அணிந்திருப்பார்கள். சில சமயங்களில் தொப்பியும் அணிவார்கள்.

அவர்களுக்கு அழகான முகம் அமைந்திருந்தது. அவர்களை இன்னார் என அறியாதவர்கள் கூட அவர்களுடைய முகத்தைப் பார்த்ததும் அந்த முகத்திற்குச் சொந்தக்காரர் பெருந்தன்மையுள்ள ஒரு பெரு மகர் என்று கூறிவிடுவர். அவர்களின் அழகிய முகத்தை அழகு படுத்தியது அதில் எப்பொழுதும் இருந்து கொண்டிருக்கும் இளமுறுவல். அந்த இளமுறுவலை அழகுபடுத்தியது முகத்தில் இலங்கிக் கொண்டிருந்த களை.

அவர்கள் கரிய, பெரிய கண்களைப் பெற்றிருந்தார்கள். அவர் களின் பார்வையில் அளவற்ற கருணையும் இருந்தது. கனிவும் இருந்தது. அதனால் அவர்களின் உடல் உறுப்புகளில் மிகவும் அழகா னவை, மிகவும் சிறப்பானவை அவர்களின் கண்களே என்று கூடக் கூறப்படுகிறது. அந்த அழகிய இரு கண்களுக்கும் இடையே நேரான மூக்கு இருந்தது. அந்த நேரான மூக்குக்குக் கீழே அழகான வாய் இருந்தது. அவர்கள் அடர்த்தியான நீண்ட தாடியைப் பெற்றிருந் தார்கள். ஆனால் அது நரைத்திருந்தது. கடைந்தெடுத்த தந்தம் போல் கழுத்திருந்தது. அந்தக் கழுத்தில் அமைந்திருந்த கண்டம் வழியே வந்த குரலில் கனிவும் இருந்தது. கம்பீரமும் இருந்தது. அவர்களின் விரிந்த மனத்திற்கு வெளிப்படையான அடையாளம் போல் அவர் களுக்கு விரிந்த மார்பு இருந்தது. அவர்களின் வீரத்திற்கு



வெளிப்படையான அடையாளம் போல் அகன்ற மார்பில் உரோமம் அடர்ந்திருந்தது. ஆண்மகனுக்குத் திறம்தாம் முக்கியம். நிறம் அல்ல. அவர்கள் தாம் உணவாக உண்ட கோதுமையின் நிறத்தையே உடலிலும் கொண்டிருந்தார்கள்.

அழகு நிறைந்த தம் உடலுக்கு அவர்கள் என்றும் ஆடம்பர ஆடைகளை அணிவித்ததில்லை. இரண்டு துண்டுகளே அவர்களின் ஆடையாய் இருந்தன. ஒரு துண்டு மேலாடையாயும், மறுதுண்டு கீழாடையாயும் இருக்கும். மேல் துண்டு உடல் முழுவதையும் மறைக்க முடியாத அளவு சிறியதாய் இருந்தது. அவர்கள் உறங்கும் போது ஒரு போர்வையால் போர்த்துக் கொள்வார்கள். ஆனால் அதைக் கொண்டு தலையையும் காலையும் சேர்த்து மூட முடியாது. உடலுக்குப் பற்றாத ஆடைகளையே அவர்கள் அணிவது பற்றி மக்கள் அவர்களிடம் கேட்டபோது, ''இதனால் மனம் தாழ்ச்சியுற் றிருக்கும். மற்றவர்களும் என்னைப் பின்பற்றிக் குறுகலான ஆடை களை அணிய விரும்புவார்கள். அதனால் ஏழைகளின் மனம் மகிழும்!'' என்று அவர்கள் கூறினார்கள். அவர்கள் கலீபாவாக இருந்த போது மூன்று திர்ஹங்களுக்கு ஒரு சட்டை வாங்கினார்கள். அதில் ஒரு கை அளவுக்கு மேல் அதிக நீளமாயிருந்தது. அதைக் கிழித்து வைத்துக் கொண்டு, ''இந்தச் சட்டையை அளித்த இறை வனுக்கே எல்லாப் புகழும்!'' என்று கூறினார்கள். அவர்கள் மிகவும் மலிவான, மிகவும் கடினமான ஆடைகளையே விரும்பி அணி வார்கள். அந்த ஆடையும் அவர்களின் ஆயுளில் இரண்டிற்கு மேல் இருந்ததில்லை. அவர்களின் ஆடைகள் பெரும்பாலும் பிய்ந்தவை யாகவும், பிய்ந்தபின் ஒட்டுப் போட்டவையாகவுமே இருக்கும். தம் ஆடைகள் கந்தல் கந்தலாகும் வரை அவற்றை அவர்கள் அணிந்து கொண்டிருப்பார்கள். அவர்களின் இந்தக் கிழிந்த ஆடைகள் அவர்களின் ஊழியர் ஆடையினும் கீழானவையாய் இருக்கும். அவர்கள் தம் சட்டையிலிருக்கும் ஓட்டைகளைப் பற்றி ஒரு நாள் கூறினார்கள். ''அவற்றால் மனிதனுடைய மனம் மென்மை அடை கிறது!'' என்று. பழையதாய்ப் போன ஆடைகளை அகற்றி விடும்படி அவர்களிடம் அம்ர் பின் கைஸ் ஆலோசனை கூறியபோது, அவ்வித ஆடைகள் அணியும் போது அடக்கம் ஏற்படுகிறது என்றும் கர்வம் அகலுகிறது என்றும், இது பிறராலும் பின்பற்றத் தகுந்தது என்றும் அவர்கள் கூறினார்கள். உடை விஷயத்தில் இந்த எளிய உணர்வு அவர்களுக்கு ஏற்படக் காரணம் இரண்டு : ஒன்று, அவர்களிடம்

இயற்கையிலேயே இருந்த அடக்கம். மற்றொன்று. அவர்கள் அடைந்த இந்த அனுபவம். அந்த அனுபவத்தை அவர்களே கூறுகிறார்கள்: ''அல்லாஹ்வின் தூதர் அவர்கள் எனக்குப் பட்டுத் துணி (ஒன்று) அன்பளிப்புச் செய்தார்கள். அதனை நான் அணிந்து கொண்டேன். (அதைப் பார்த்ததும்) அல்லாஹ்வின் தூதர் முகத்தில் கோபத்தை நான் கண்டேன். அதனை என் (உறவினர்) பெண்களுக்குக் கிழித்துக் கொடுத்து விட்டேன்.''

எளிமை அவர்களின் ஆடையில் மட்டும் இருக்கவில்லை, படுக்கையிலும் இருந்தது. பரிதாபப்படத்தக்க ஏழைமை நிலையில் இருக்கும் போதும் பார் புரக்கும் கலீபாவாக ஆனபிறகும் அவர்களின் படுக்கை ஆடம்பரமானதாய் அமைந்திருக்கவில்லை. ஒரு நாள் அவர்களைக் காண ஒரு தோழர் வந்தார். அப்பொழுது அவர்கள் பழைய பாய் ஒன்றில் அமர்ந்திருந்தார்கள். அவர்களைப் பார்த்து அவர், ''அமீருல் முஃமினீன் அவர்களே! அரசராகவும் அதிகாரியாகவும் நீங்கள் இருக்கிறீர்கள். அரசாங்கக் கருவூலம் உங்கள் கரத்தில் உள்ளது. வெளி நாடுகளிலிருந்து தூதுவர்கள் உங்களிடம் வருகிறார்கள். இந்த நிலையில் உங்களிடம் இந்தப் பழைய பாயைத் தவிர்த்து வேறு ஒன்றுமில்லையே!'' என்று கூறி வருந்தினார். அவரைப் பார்த்து அவர்கள், ''இந்த வீட்டை விட்டுச் சென்று விட வேண்டும். என் கண்களுக்கு நிரந்தரமான வேறொரு வீட்டின் காட்சி தென்பட்டுக் கொண்டே இருக்கிறது!'' என்று கூறினார்கள். ஆட்டுத் தோல் ஒன்று அவர்களிடம் இருந்தது. அதுதான் முக்கியமானவர்கள் வந்தால் அமர்வதற்காக விரிக்கப்படும். அதுபற்றி ஒருவர் அவர்களிடம் குறிப்பிட்டபோது, ''அறிவுள்ள மனிதன் தான் இறுதியில் விட்டுவிட்டுப் போகும் வீட்டில் அதிகப் பொருள்களை வைத்துக் கொள்ள மாட்டான்!'' என்று அவர்கள் கூறினார்கள்.

அவர்களின் உடை போன்று அவர்களின் உணவும் எளிமையானதாகத்தான் இருந்தது. அவர்களின் உணவில் உப்போ, உறைப்போ அதிகம் இராது. அதனால் அது எப்பொழுதும், 'சப்' என்றுதான் இருக்கும். பெரும்பாலும் அவர்கள் தோல் நீக்கப்படாத பார்லீ மாவில் செய்த ரொட்டியைத்தான் சாப்பிடுவார்கள். ஒரு கோப்பைப்பாலைக் கொண்டும் அவர்கள் தம் பசியைத் தீர்த்துக் கொள்வதுண்டு. அவர்களின் உணவில் சில சமயங்களில் காய்கறிகள் இடம்பெறும். கறி அறவே இடம் பெறாது. ஈதுல் அல்ஹா பெருநாள்



அன்று மட்டும் அவர்கள் கறி சாப்பிடுவார்கள். மதீனாவில் இருக்கும் போதுதான் இப்படி உண்டார்கள். வளம் பொருந்திய கூபாவில் இருக்கும் போதாவது உயர்ந்த உணவுகளை வயிறார உண்டார்களா? இல்லை. கூபாவிலிருக்கும் போது அவர்களின் உணவு தண்ணீரில் கரைத்த ஒரு பிடி பொரி மாவுதான். கூபாவிலிருக்கும் போதும் அவர்கள் மதீனாவிலிருந்து வரும் உணவைத்தான் உண்டு வந்தார்கள். அதற்குக் காரணம் மதீனாவின் உணவு வகைகள் எளிமையானவையாய் இருந்ததாகும்.

உயர்ந்த உணவுகளை அவர்கள் அதிகம் வெறுத்தார்கள். அவற்றை உண்டால் அது பழக்கமாகிப் போய்விடும் என்று அவர்கள் அதிகம் பயந்தார்கள். ஒரு கோடை நாளில் அவர்களுக்கு சர்பத் வழங்கப்பட்டது. அதனை அவர்கள் அருந்த மறுத்துவிட்டுக் கூறினார்கள். ''அல்லாஹ் இந்தப் பானத்தை மனிதர்களுக்கு விலக்கா விட்டாலும் நான் தவிர்ந்து கொள்வது அவ்விதச் சிறந்த உணவு உண்டு பழக்கமாகிவிடக்கூடாது என்னும் பயத்தால்தான்!'' என்று.

அவர்கள் உயர்ந்த உணவுகளை இப்படிக் கட்டோடு வெறுத்து ஒதுக்கியதற்கு இன்னும் இரு காரணங்கள் இருந்தன. ஒன்று, அல்லாஹ்வின் தூதர் அவர்கள் அருந்தாத ஒன்றைத் தாம் அருந்தக் கூடாது என்பது. இரண்டாவது, உயர்ந்த உணவுகள் தம்மை நரகிற்கு இட்டுச் சென்றுவிடும் என உறுதியாக நம்பியது.

ஒரு நாள் அவர்களுக்குப் பலூதா என்னும் பானம் வழங்கப்பட்டது. அதை அருந்த அவர்கள் மறுத்து விட்டார்கள். ''அது விலக்கப்பட்ட உணவா?'' என அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கேட்டபோது, ''அல்ல'' எனப் பதில் அளித்துவிட்டு அவர்கள் கூறினார்கள், ''அல்லாஹ்வின் தூதர் அவர்கள் அருந்தாத ஒரு பொருளின் மீது என் மனம் கவர்ச்சி கொண்டு விடக்கூடாது என விரும்புகிறேன்!'' என்று.

அவர்கள் உண்ட சாதாரண உணவைப் பார்த்து ஒருவர், ''இவ்விதச் சாதாரண உணவைக் கொண்டு தாங்கள் உயிர் வாழ முடியுமா?'' என்று கேட்ட போது, அவர்கள் கூறினார்கள், ''இவ்வித உணவுகளே என் வயிற்றை முறையாக நிறைக்கின்றன. உயர்ந்த உணவுகள் உண்ணாமல் அல்லாஹ் என்னைக் காப்பற்றட்டும்! அவ்வித உணவுகள் ஒருவனை நரகிற்கு இட்டுச் செல்வது உறுதி!'' என்று.

அவர்களுக்கு வழங்கப்பட்ட சாதாரண உணவைப் பார்த்து ஒருவர், அவர்களின் பணிப் பெண் பிதாவிடம், அமீருல் முஃமினின் அவர்களின் முதிய வயதின் மீது அனுதாபப்படும்படியும் அவர்களுக்குச் சத்தான உணவு கொடுக்கும் படியும் சொன்னதைக் கேட்டதும் அவர்கள் கூறினார்கள்: ''இந்தக் காய்ந்த ரொட்டிகள் எனக்குப் போதுமானவை. இவ்வித உணவைத்தான் அல்லாஹ்வின் தூதர் அவர்கள் அருந்துவது வழக்கம். உயர்ந்த உணவு உண்டு பழக்கமாகி விட்டால் சுவர்க்கம் செல்லலாம் என்றும், அங்கு அல்லாஹ்வின் தூதருடன் வாழலாம் என்றும் எப்படி நம்ப முடியும்?'' என்று.

ஒரு ஈதுப் பெருநாளின் போது அவர்களைக் காண அப்துல்லாஹ் பின் அபீராபிஃ வந்தார். அப்பொழுது அவர்கள் ஒரு தோல் பையை அவிழ்த்துக் கொண்டிருந்தார்கள். அதில் காய்ந்த வாற்கோதுமை ரொட்டித் துண்டுகள் சில இருந்தன. அவற்றை எடுத்து அவர்கள் அருந்த ஆரம்பித்தபோது, ''என்ன, இந்தக் காய்ந்த ரொட்டித் துண்டுகளையா சாப்பிடுகிறீர்கள்?'' என்று அப்துல்லாஹ் பின் அபீராபிஃ கேட்டார். ''ஆம், நான் இவற்றைப் பத்திரமாக முத்திரையிட்டு வைக்கப் போகிறேன். ஏனெனில் வீட்டிலுள்ளவர்கள் இவற்றில் எண்ணெய்யைக் கலந்து விடுவர் என அஞ்சுகிறேன். எண்ணெய் போட்டு மென்மைப் படுத்தினால் அவை ஆடம்பர உணவாக ஆகிவிடும்!'' என்று அவர்கள் அவருக்குப் பதில் பகர்ந்தார்கள்.

அவர்கள் உரைத்ததை உறுதி செய்கிறது இந்தச் சம்பவம். ஒரு நாள் அவர்களுடன் மாலை உணவு அருந்த உமர் பின் ஹரீஸ் வந்தார். அப்பொழுது முத்திரை இடப்பட்ட பை ஒன்று அவர்களிடம் கொண்டு வந்து கொடுக்கப்பட்டது. அதன் முத்திரையை அவர்களே உடைத்தார்கள். அதற்குள் கல்லைப் போல் கடினமான காய்ந்த ரொட்டிகளின் மேற்புறங்கள் இருந்தன. அந்த உணவைப் பார்த்ததும் உமர் பின் ஹரீஸ், பணிப் பெண் பிதாவைக் கண்டித்தார். ''அமீருல் முஃமினீன் அவர்களுக்கு இவ்வித மோசமான உணவைப் பரிமாற நீ வெட்கமுற வில்லையா?'' என்று கேட்டார். அதற்கு அவள், '' என் எசமானருக்கு நல்ல உணவை நான் எளிதாகத் தயாரித்து விடுவேன். ஆனால் அவர்கள் தமக்கு அத்தகைய உணவு ஒரு போதும் தயாரிக்கக் கூடாது என ஆணையிட்டிருக்கிறார்கள். என் எசமானர் காய்ந்த ரொட்டித் துண்டுகளையெல்லாம் சேர்த்துப் பைக்குள் போட்டு



வைத்துள்ளார்கள். நான் புதிதாய்த் தயாரித்த ரொட்டிகளையும் அவர்களுக்குத் தெரியாமல் பைக்குள் போட்டு விடுவதுண்டு. அதை அறிந்து கொண்டு அவர்கள் தாமே காய்ந்த ரொட்டிகளின் மேல் புறங்களைச் சேர்த்து இந்தப் பைக்குள் போட்டு முத்திரையிட்டு விட்டார்கள். அப்படிச் செய்தால்தான் எவரும் அதில் நல்ல ரொட்டிகளைப் போட மாட்டார்கள் என்று அவர்கள் கருதினார்கள்!'' என்று கூறினாள்.

அந்தக் காய்ந்த ரொட்டிகளின் மேற்புறங்களைத் தண்ணீரில் தோய்த்து, மென்மைப்படுத்தி, உப்பு தெளித்து உண்டு விட்டுத் தமக்கு உணவு தந்த அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவது அவர்கள் வழக்கம்.

பாலைவன அரபி ஒருவர் தமக்கு ஆதரவாக இருந்த ஒட்டகை ஒன்று இறந்து விடவே அரசாங்கப் பொது நிதியிலிருந்து ஓர் ஒட்டகை பெற்றுச் செல்லலாம் என மதீனா வந்தார். அவர் கலீபா அவர்களின் வீட்டிற்கு வந்த போது அவர்கள் வெளியே சென்றிருந்தனர். அவர்களின் புதல்வர் ஹுஸைன் (ரலி) அவரை வரவேற்று, பள்ளிக்கு அழைத்துச் சென்று, அங்குத் தங்க வைத்து விட்டு வீட்டிற்கு வந்து விருந்தாளியாகையால் நல்ல உணவு தயாரித்து அதனைப் பள்ளிக்கு எடுத்துச் சென்றனர். அதனை அவர்கள் அந்தப் பாலைவன அரபி முன் வைத்து அருந்தக் கூறிய போது அவர், ''முடியாது,'' என அடம் பிடிக்க ஆரம்பித்தார். ''அதோ பள்ளியின் வெளித் திண்ணையில் காய்ந்த ரொட்டியைத் தண்ணீரில் நனைத்து உண்டு கொண்டிருக்கிறாரே, அந்த மனிதரையும் என்னுடன் உட்கார வைத்தால்தான் நான் உண்பேன்!'' என்றார், அந்தப் பாலைவன அரபி. அதைக் கேட்டு ஹுஸைன் (ரலி) அவர்கள், 'அவர்கள்தாம் என் தந்தை அலீ. அவர்கள்தாம் முஸ்லீம்களின் கலீபா. அதுதான் அவர்கள் வழக்கமாய் உண்ணும் உணவு. அதற்கு மாற்றமாய் இந்த உயர்ந்த உணவை அவர்கள் அருந்தவே மாட்டார்கள்!'' என்று கூறினார்கள். அவர்கள்தாம் அமீருல் முஃமினீன் என அறிந்ததும், அவர்கள் அருந்தும் உணவைக் கண்டதும், ''இப்படியும் இருக்க முடியுமா?'' என ஆச்சரியமுற்றார் அந்தப் பாலைவன அரபி. அவருக்குக் கலீபா, அவர் கோரியபடி, ஒட்டகை ஒன்று கொடுத்து உதவினர்.

ஒரு நாள் அப்துல்லாஹ் பின் ஜரீர், அலீ (ரலி) அவர்களுடன் சேர்ந்து உணவு உண்டார். உணவு மிகவும் சாதாரணமானதாக இருந்தது. அதுகண்டு அவர், ''அமீருல் முஃமினீன் அவர்களே!

நீங்கள் பறவைக் கறி மீது பிரியப்படுவதில்லையா?'' என்று கேட்டார். அதற்கு அவர்கள், ''கலீபா தமக்கும், தம் குடும்பத்திற்கும் போதுமான அளவுதான் முஸ்லிம் பொது உடைமையில் உரிமையுள்ளவர்!'' என்று பதில் கூறினர்.

அவர்களின் உணவு மட்டுமல்ல, அலீ (ரலி) உறையுள்ளமும் எளிமையானதாகத்தான் இருந்தது. அவர்கள் மதீனாவில் பச்சைச் செங்கற்களால் கட்டப்பட்ட குடிசையில்தான் வதிந்தார்கள். கூபாவில் கலீபாவாக இருக்கும் போதும் சிறிய வீட்டில்தான் வாழ்ந்தார்கள். அவர்கள் தம் ஆயுளில் தமக்கென ஒரு வீடு கட்டிக் கொண்டதில்லை.

இவ்வித எளிமையுடன் அவர்கள் இருந்ததற்குக் காரணம் அவர்களின் மனத்தில் அளவிறந்த இறையச்சம் அமைந்திருந்ததாகும். அளவிறந்த இறையச்சம் அவர்களிடம் அமைந்திருந்ததற்குக் காரணம் அவர்கள் இறைவனைப் பற்றி அறிந்தவர்களாய் இருந்ததாகும். ''இறைவனைப் பற்றி அறிந்து கொண்டவர்கள் அவனுக்கு அஞ்சு கிறார்கள். அவனை வணங்குகிறார்கள். அவர்களே சிறந்த படித்தரங் களைப் பெறுகிறார்கள்!'' என்று அவர்கள் கூறினார்கன்.

ஐவேளைத் தொழகையையும், அதற்கு அதிகமான தொழுகை களையும் அவர்கள் மிகவும் அச்சத்துடனும், அதிகப் பேணுதலு டனும் நிறைவேற்றினார்கள். தொழுகை நேரம் வந்து விட்டால் அவர்களின் உடல் நடுங்க ஆரம்பித்துவிடும். அவர்களின் முகம் மஞ்சள் நிறமாகிவிடும். ''தொழுகை நேரம் வந்தவுடன் உங்களின் நிலை இவ்வாறு ஆகிவிடுவதற்குக் காரணம் யாது?'' என்று ஒருவர் கேட்டபோது, அவர்கள் இவ்விதம் பதில் அளித்தார்கள்: ''அது ஓர் அடைக்கலப் பொருளை நிறைவேற்றும் நேரமாகும். அதனை வானம் பூமி மலை ஆகியவற்றின் மீது சுமத்தியபோது, அவை அதனை ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டன. நான் அதனை ஏற்றுக் கொண்டிருக்கிறேன். அந்தக் தொழுகை என்னும் அடைக்கலப் பொருளை என்னால் ஒழுங்காக நிறைவேற்ற இயலுமா என நான் அஞ்சுகிறேன்.''

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தொழும்போது, அவர்களின் உடலிற்குள்ளிருந்து கேத்தல் கொதிப்பது போல் சப்தம் கேட்டுக் கொன்டேயிருக்கும். அதே விதம் அலீ (ரலி) அவர்கள் தொழத் தொடங்கும்போது அவர்களின் உரோமங்கள் குத்திட்டு நிற்கும்,



அவர்களின் உடல் நடுங்கும், அவர்களின் வாய் இதை உரைக்கும்: ''வானங்களும், பூமியும் தாங்கிக் கொள்ள முடியாத அமானிதத்தை நிறைவேற்றும் நேரம் வந்திருக்கிறது.''

தொழும்போது அவர்கள் அழுவார்கள், கண்ணீர் உகுப்பார்கள், சில சமயங்களில் துக்கம் மேலிட்டு மயக்கமும் அடைந்து விடுவார்கள். ஒருநாள் அவர்கள் இப்படித்தான் மயக்கமுற்றுத் தொழுகைப் பாயில் விழுந்து கிடந்தார்கள். அப்பொழுது அங்குவந்த அபூதர்தாஃ (ரலி) அவர்கள், அவர்களைத் தொட்டுப் பார்த்தபோது, அவர்களின் உடல் குளிர்ந்திருந்தது. இறந்துதான் போய்விட்டார்கள் என எண்ணி அதை அவர்கள் பாத்திமா (ரலி) அவர்களிடம் அறிவித்த போது, ''இறைவன் மீதுள்ள அச்சத்தால் இப்படித்தான் என் கணவர் அடிக்கடி மயக்கமுற்று விடுவர்!'' என அவர்கள் கூறினர். அபூதர் தாஃ (ரலி) அவர்கள் அழுது சொண்டே அலீ (ரலி) அவர்களின் முகத்தைப் பார்த்தனர். அப்பொழுது அவர்களுக்கு மயக்கம் சற்றுத் தெளிந்திருந்தது, ''ஏன் அழுகிறீர்கள்?'' என அவர்கள் அபூதர்தாஃ (ரலி) அவர்களைப் பார்த்துக் கேட்டுவிட்டு, ''இந்த நிலையில் என்னைப் பார்த்தும் கண்ணீர் உகுக்கிறீர்கள். அமரர்கள் என்னை இறைவன் முன் இழுத்துச் செல்லும் பொழுது, என் செயல்களுக்குக் கணக்குக் காட்டும்படி கேட்கும் போது, எனக்கு என்ன நேரும் என்பதை எண்ணிப் பாருங்கள். அமரர்கள் என்னை இரும்புத்தளை களால்கட்டி இறைவன் முன் நிறுத்துவார்கள். அதைப் பார்க்கும் என் நண்பர்கள் எனக்கு உதவி செய்யாதிருப்பர். அவர்கள் என் நிலைகண்டு வருந்துவர். ஆனால் அந்நாளில் இறைவனைத் தவிர்த்து வேறு எவராலும் எனக்கு உதவி செய்யமுடியாது!'' என்று கூறினர்.

தொழும்போது அவர்கள் தம்மையே மறந்துவிடுவார்கள். உஹதுப் போரின் போது அவர்களின் உடலில் அம்பொன்று பாய்ந்து நன்கு புதைந்து கொண்டு விட்டது. அதனை எடுக்க அவர்கள் எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. நண்பர்களிடம் அதனை எடுக்கக் கூறினார்கள். அவர்கள் எடுக்க முயன்றபோது பொறுக்க முடியாத வலி ஏற்பட்டது. எனவே நண்பர்கள் அதனை எடுக்காமல் விட்டுவிட்டார்கள். அவர்கள் படும் அவதியை நண்பர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் வந்து கூறி இதற்கு என்ன செய்யலாம் என்று கேட்டார்கள். உடனே அவர்கள், ''அலீ தொழுது கொண்டிருக்கும் போது அதனைச் செய்யுங்கள்!'' என்று கூறினர். அவ்விதமே

நண்பர்கள் செய்தனர். அலீ (ரலி) அவர்கள் தம் உடலில் புதைந் திருந்த அம்பு எடுக்கப்பட்டதைத் தொழுது முடித்தபிறகே தெரிந்து கொண்டார்கள்.

ஒரு நாள் அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு விரிப்பு ஒன்று அன்பளிப்பாக வந்தது. ஒரு போட்டி வைத்து, அதில் வெல்பவருக்கு அதனை வழங்க அவர்கள் முடிவு செய்தார்கள். இரண்டு ரக் அத்தொழுகையை எவர் இவ்வுலக நினைப்பை அறவே அகற்றி விட்டுத் தொழுகிறாரோ அவருக்கு அவ்விரிப்பு அளிக்கப்படும் என்று அவர்கள் அறிவித்தார்கள். அபூபக்ர் (ரலி) , உமர் (ரலி), உதுமான் (ரலி), அலீ (ரலி) ஆகிய நெருங்கியதோழர்களும், மற்ற வர்களும் உடனே உளூசெய்து தொழத் தொடங்கினர். உதுமான் (ரலி) அவர்களுக்கு 'தக்பீர்' கட்டியதுமே ஏதோ ஓர் உலக நினைப்பு ஏற்பட்டு விட்டது. அபூபக்ர் (ரலி) ஓர் ரக் அத்தான் தொழுதார்கள். அதற்குள் ஏதோ எண்ணம் அவர்களுக்கும் உண்டாகிவிட்டது. உமர் (ரலி) அவர்களுக்கும் இரண்டு ரக்அத் தொழுவதற்குள் ஏதோ ஓர் எண்ணம் உதித்து விட்டது. உலக நினைப்பு ஒரு சிறிதும் இன்றி இறை நினைவில் இலயித்து இரண்டு ரக் அத்களை முடித்து ஒரு பக்கம் சலாம் கொடுத்தார்கள் அலீ (ரலி) அவர்கள். மறுபக்கம் சலாம் கொடுப்பதற்குள் விரிப்பு நமக்குத்தான் கிடைக்கும் என்னும் எண்ணம் அவர்களுக்கு ஏற்பட்டு விட்டது. ஏமாற்றத்துடன் அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் சமுகம் வந்தார்கள். நிகழ்ந்ததைக் கூறினார்கள். மற்றவர்களும் தங்களின் அனுபவங்களைக் கூறி னார்கள். முதல் சலாம் கொடுக்கும் வரையிலாவது உலக நினைப்பை விலக்கி வைத்திருந்தவர்கள் அலீ (ரலி) அவர்கள் மட்டுமே. ஆதலால் அவர்களுக்கு விரிப்பு வழங்கப்பட்டது.

இரவில் அவர்கள் அதிகப்படியான தொழுகைகளையும் அழுது கொண்டே தொழுவார்கள். அதற்குக் காரணம் அவர்களுக்கு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் புரிந்த இந்த அறிவுரையாகும்: ''அலீயே! இரவில் தொழுபவர்க்கு இம்மை, மறுமை இரண்டிலும் ஒளி உண்டாகும். மறுமையில் சுவனத்தின் ஒட்டகை ஒன்றின்மீது அவர் அழைத்துவரப் படுவார். அவருடைய வலக்கையில் சுவனம் நுழைவதற்கான பட்டோலை கொடுக்கப்படும். அலீயே! இரவு நேரத்தில் தொழுபவர்க்கு ஒவ்வொரு ரக் அத்துக்கும் சுவனத்தில் மாளிகை அளிக்கப்படும்... அத்தகைய தொழுகைக்காக அல்லாஹ் அவரை நேசிப்பதோடு மக்களிடமும் நேசத்தை ஏற்படுத்தித் தருவான். அன்றியும் அவருக்கு நல்ல சுகத்தை அருளுவான், நற்பேறுகளை அருளுவான்.''



தொழும் போது மட்டுமல்ல, அவர்கள் எப்பொழுதுமே துக்கத்தில் தோய்ந்தவர் போலவேதான் இருப்பார்கள். ஒருநாள் அவர்கள் பஜ்ர் தொழுகையை முன்னின்று நடத்தினார்கள். அவர் களுக்குப் பின்னால் முஸ்லிம்கள் அணிவகுத்து நின்று தொழுதனர். தொழுகை முடிந்ததும் அவர்கள் வலப்புறம் திரும்பினார்கள். அப்பொழுது அவர்களின் முகம் பின் புறம் இருந்தவர்களுக்கு நன்கு தெரிந்தது. அதில் ஆழ்ந்த வேதனையின் குறி இருந்ததைப் பலரும் பார்த்தனர். நல்லவர்கள், ஒழுக்கமானவர்களின் அடையாளத்தை அவர்கள் ஒரு முறை இவ்விதம் கூறினார்கள். நல்லவர்கள், ஒழுக்க வான்கள் என்றால் யார் தெரியுமா? அவர்களின் முகம் வெளிறிப் போயிருக்கும்; அவர்கள் உறக்கத்தை வெறுத்ததால். அவர்களின் கண்கள் ஒளி குன்றிப்போயிருக்கும்; அவர்கள் எப்பொழுதும் இறைவனை நினைந்து அழுது கொண்டிருந்ததால். அவர்களின் உதடுகள் காய்ந்து போயிருக்கும்; அவர்கள் தொடர்ந்து நோன்பிருந் ததால்.''

அலீ (ரலி) அவர்களின் உளப்பாங்கை அவர்களின் உரை உறுதி செய்கிறது. அதை ளர்ரார் இப்னு மிரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார் கள் : ''அலீ அவர்கள் உலகத்தை விட்டும் அதன் ஆசாபாசங்களை விட்டும் மனச்சார்பு அற்றவர்களாகவே இருந்தார்கள். இராப் பொழுதைக் கொண்டும், அதன் இருட்டைக் கொண்டும் மனத் திருப்தி கொண்டவர்களாகவே இருந்தார்கள். அதற்குச் சான்றாக நான் கண்ட நிகழ்ச்சி இது : ஓர் இரவு இருள் எங்கும் படர்ந்து விட்டது. நட்சத்திரங்களும் கூட மறைந்து கிடந்த (அந்த) அந்தகார இருட்டில் அலீ அவர்கள் படுக்கையை விட்டு எழுந்து, கவலையும் துக்கமும் கொண்டவர்களாய்த் தங்களின் தாடியைக் கையால் பிடித்துக் கொண்டு, நோயாளி பிணியால் நலிவுற்று அழுவது போல் குமுறி, அழுதழுது, 'உலகமே! என்னையா மயக்க நினைக்கிறாய் ? உன்கை வரிசை என்னிடம் செல்லாது. அதற்கு வேறு ஆளைப்பார்த்துக் கொள்! என்னை மாட்டவா நினைக்கிறாய்? அந்த வித்தைக்கெல்லாம் நான் மசியமாட்டேன். உன்னைத் தீண்டியும் பாரேன். இதோ உனக்கு முத்தலாக்குத் தந்து விட்டேன். உன்னுடைய தொடர்பை நீக்கிக் கொண்டேன். உன் ஆயுளோ மிகவும் சுருக்கம். உன் சபைக் கூட்டமோ மிகவும் அற்பம். உன் சங்கடங்களோ அனந்தம். அந்தோ!

மறுமைக்குரிய கட்டமுதை வேண்டிய அளவு கட்டிக்கொள்ளாமல் அலட்சியமாகவும், இறை சமுகம் நெருங்காமல் தூரப்பட்டும், மறுமையின் பாதையில் மனச்சார்பு கொள்ளாமலும் கிடக்கக் கூடியவர்களின் கைசேதத்தை என் சொல்வேன்!' என்று சொல்லிக் கொண்டிருந்ததைக் கண்ணாரக் கண்டேன், காதாரக் கேட்டேன்.''

அலீ (ரலி) அவர்கள் ரமலான் மாதத்தில் மட்டுமல்லாது மற்ற நாட்களிலும் நோன்பு நோற்பார்கள். அதனால்தான் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள். ''எனக்குத் தெரிந்தவரை அலீ அதிகமாக நோன்பு நோற்பவரும் வணக்கம் புரிபவரும் ஆவார்!'' என்று. போர்களின் போது கூட அவர்கள் நோன்பு வைப்பதை விடுவதில்லை. நோன்பு வைத்துக் கொண்டு வெறும் வயிற்றுடன், வரண்ட நாவுடன் போர் செய்த சம்பவம் அவர்களின் வாழ்வில் பல உண்டு. நோன்பை வெறும் தண்ணீருடன் திறந்துவிட்டு மறுபடியும் வெறும் தண்ணீர் அருந்தி அவர்கள் பல முறை நோன்பு வைத்திருக்கின்றனர். இப்படிக் கஷ்டப்பட்டுத் தாம் வைக்கும் நோன்பு கூட இறைவனால் ஏற்றுக் கொள்ளப்படுமா என்னும் அச்சம் அவர்களுக்கு இருந்து கொண்டிருந்தது. ஒரு சமயம் அவர்கள் ரமலான் நோன்பு முழுவதையும் பிடித்து முடித்த பின் அழுதுகொண்டிருந்தார்கள். அதைப் பார்த்து ஒருவர், ''ஏன் அழுகிறீர்கள்?'' என்று கேட்ட போது, ''என் நோன்பு ஏற்கப்படுமா என எண்ணி அஞ்சி அழுகிறேன்!'' என்று அவர்கள் பதில் கூறினார்கள்.

ஐம்பெரும் கடமைகளில் ஒன்று ஜகாத் என்பதையும், அதையும் தொழுகையையும் அல்லாஹ் தன் திருமறையில் அதிக இடங்களில் சிலாகித்துக் கூறியிருப்பதையும் அவர்கள் அறிவார்கள். அதனால் தான் அவர்களும், ''நம்பிக்கையாளர் ஒருவரின் சிறந்த செயல் அனைத்திலும் அல்லாஹ்வுக்கு இணக்கமானது ஜகாத்!'' என்று அறிவித்தார்கள். ஆனால் அவர்களால் ஜகாத் கொடுக்க இயலவில்லை. அவர்களை, ஜகாத் வசூலிப்பதிலிருந்தும் தவிர்க்க வேண்டியிருந்தது. அதற்குக் காரணம் அவர்களிடம் பொருளோ உடைமைகளோ இருந்ததில்லை, இருந்தவற்றையும் உடனே பிறர்க்கு ஈயாமல் இருந்ததுமில்லை. ''ஒருவர் இறந்து விட்டால் அவருடைய உறவினர்கள் அவர் எவ்வளவு சேர்த்து விட்டுச் சென்றிருக்கிறார் என்று வினவுவர். அமரர்களோ, அவர் அல்லாஹ்வின் பாதையில் எவ்வளவு கொடுத்திருக்கிறார் என்றே பார்ப்பர்!'' என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள்.



அண்ணல் நபி (ஸல்) அவர்களுடன் சேர்ந்து அவர்கள் பத்து ஹஜ்ஜுகள் செய்திருக்கிறார்கள்.

இவ்விதம் அவர்கள் ஐம்பெரும் கடமைகளைப் பிழையறப் புரிந்ததற்கும் அவற்றை அதிகமாய் ஆற்றியதற்கும் காரணம் அவர்களிடம் இருந்த இறை பக்தியாகும். உமையாக் கலீபா உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்களிடம், ''இந்த உலகத்தில் மிகப் பெரிய பக்திமான் என்று தாங்கள் யாரைக் கருதுகிறீர்கள்?'' என்று கேட்கப்பட்டபோது, அவர்கள் அக்கணமே அளித்த பதில், ''பக்தியில் அலீ மனித இனத்தை மிஞ்சுகிறார்!'' என்பதாகும்.

இவ்வித இறைபக்தி இருந்ததால் அவர்கள் எதனையும் அல்லாஹ்வுக்காகவே புரியவேண்டும் என்னும் கொள்கையைக் கொண்டிருந்தார்கள். அதனை எண்பிக்கக் கீழ்வரும் அவர்களின் சொல்லும் செயலும் ஆதாரங்களாகும். ஒருமுறை அவர்கள் கூறினார்கள் : ''ஒருவன் பூமியிலுள்ள பொருள்களையெல்லாம் ஈட்டி மக்களில் பெரிய செல்வந்தனாய் இருந்த போதினும், அதனை அவன் அல்லாஹ்வுக்காக ஈட்டியிருப்பானாயின், அவன் உலகை விரும்பாத ஸாஹித் ஆவான். ஒருவன் எல்லாவற்றையும் வெறுத்து விட்டிருந்த போதினும், அப்படி வெறுத்தது அல்லாஹ்வுக்காக என்றில்லாவிடில், அவன் ஸாஹித் அல்ல.''

ஒரு போரின் போது அவர்கள் பகை வீரன் ஒருவனுடன் கடும் போர் புரிந்தனர். அப்பொழுது அவன் அவர்களைத் தன் நீண்ட வாளால் தாக்கினான். அந்தத் தாக்குதலைத் தடுத்து அவர்கள் அவனுக்கு மறுஅடி கொடுத்தார்கள். அந்த அடி அவனைக் கீழே விழவைத்தது. அவனைக் கொல்ல அவர்கள் தம் வாளை ஓங்கினார்கள். அப்பொழுது அவன் அவர்களின் முகத்தில் எச்சிலை உமிழ்ந்தான். உடனே அவர்கள் தம் வாளை உறையுள் இட்டார்கள். அவனை விட்டு விலகித் தம் முகத்தில் வழிந்த எச்சிலைத் துடைத்தார்கள். அதைக் கண்டு அந்தப் பகைவீரன் வியப்படைந்தான். அதன் பின் அவனை அவர்கள் ஒன்றுமே செய்யவில்லை. அவன் ஆச்சரியத்துடன் கேட்டான். ''உம் முகத்தில் உமிழ்ந்த பிறகும் என்னை ஏன் சும்மா விட்டீர்?'' என்று. அதற்கு அவர்கள் பின்வரும் பதிலை அமைதியோடு அளித்தார்கள் : ''நண்பரே! நீர் உமிழ்ந்த மறுகணம் நான் ஆத்திரப்படவே செய்தேன். ஆனால் உம்மைத் துன்புறுத்த எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்பதை உணர்ந்தேன்.

ஏனெனில் அவ்விதம் நான் உம்மைத் துன்புறுத்துவது எனக்குத் தனிப்பட்ட முறையில் நீர் செய்த தீங்கிற்குப் பழி வாங்குவதாகி விடும். எங்களிடம் அல்லாஹ் ஒப்படைத்திருக்கும் மார்க்கத்தைக் காக்க நாங்கள் உயிரைக் கொடுக்கவோ எடுக்கவோ ஆயத்தமாயிருக் கிறோம். ஆனால் எங்களுக்குத் தனிப்பட்ட முறையில் செய்யப்படும் தீங்கிற்காக நாங்கள் ஒருவருடைய உரோமத்தைக் கூடத் தொடத் தயாராயில்லை. நீர் என் மீது எச்சிலை உமிழ்ந்த பிறகு உம்மை நான் கொன்றால் அது எனக்காகச் செய்ததாக ஆகிவிடும். அல்லாஹ்வின் பெயரைச் சொல்லிப் போரைத் துவக்கிவிட்டு எனக்குச் செய்யப் பட்ட பாதகத்திற்காகப் பழி தீர்த்துக் கொள்வது இஸ்லாமிய வீரமாகாது.''

இறை மீது இருந்த பக்திக்கு அடுத்தபடியாக அவர்களிடம் இறைதூதர் மீது அன்பிருந்தது. ஒருவர் அவர்களைப் பார்த்து, ''அல்லாஹ்வின் தூதர் மீது தாங்கள் கொண்டிருக்கும் அன்பு எத்தகையது?' என்று கேட்டார். அவர் அவ்விதம் கேட்டதும், அவர்கள் தம் கண்களில் நீர் கசியக் கூறினார்கள். ''அல்லாஹ் மீது ஆணையாக, என் தாய், தந்தை, மனைவி, மக்கள், சொத்து சுகம்- ஏன், என் உயிருக்கும் மேலாக நான் அல்லாஹ்வின் தூதர் அவர்களை நேசிக்கிறேன். கடுமையாகச் சுட்டுப் பொசுக்கும் வெய்யில் காலத்தில் குளிர்ந்த நீரை நாம் எவ்விதம் நேசிப்போமோ, அதையும் விட அதிகமாக நான் அவர்களை நேசிக்கிறேன்.''

இறைதூதர் மீது அதிக மதிப்பும் அவர்களுக்கு இருந்தது. அதனால் அவர்கள் இறைதூதர் அவர்களை அப்படியே பின் பற்றுபவர்களாக இருந்தார்கள். ஒரு சமயம் அவர்கள் தம் குதிரை மீது ஏறினார்கள். அங்க வடியில் கால்வைத்தவுடன் அவர்கள், ''பிஸ்மில்லாஹ்'' என்றார்கள். குதிரை மீது சரியாக அமர்ந்தவுடன் ''அல்ஹம்துலில்லாஹ்'' என்று கூறினார்கள். அதன் பின், ''எங் களுக்கு இதனை வசமாக்கித் தந்தானே அவன் தூயவன். மேலும் அதற்குச் சக்தியுள்ளவர்களாக நாங்கள் இருக்கவில்லை. இன்னும் நாங்கள் எங்களின் ரப்பின்பால் மீளுகிறவர்கள்!'' என்று கூறினார்கள். அதன்பின் மூன்றுமுறை இறைவனைப் புகழ்ந்து தக்பீர் சொன் னார்கள். அதன் பின், ''உன்னைத் தவிர நாயன் இல்லை. என் நப்ஸுக்கே நான் தீங்கிழைத்துக் கொண்டேன். ஆதலின் என்னை மன்னிப்பாயாக! நிச்சயமாக உன்னைத் தவிர்த்துப் பாவங்களை மன்னிப்பவர் வேறு இல்லை!'' என்று கூறிவிட்டுச் சிரித்தார்கள்.



அப்பொழுது அவர்களிடம், ''தங்களைச் சிரிக்கச் செய்தது எது?'' என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள் இவ்விதம் பதில் கூறினார்கள்: 'இப்பொழுது நான் செய்தது போலவே அல்லாஹ்வின் தூதர் அவர்கள் செய்யக் கண்டுள்ளேன். நான் சொன்னது போலவும் (அவர்கள்) சொன்னார்கள். பின்னர் சிரித்தார்கள். அப்பொழுது நாங்கள், 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! ஏன் சிரித்தீர்கள்?' என்று கேட்டோம். அவர்கள் பதில் கூறினார்கள். உன்னைத் தவிர்த்து நாயன் இல்லை. என்னை மன்னிப்பாயாக! உன்னைத் தவிர்த்துப் பாவங்களை மன்னிப்பவர் இல்லை என்று தன் அடியான் சொல்வதால் நம் ரப்பு ஆச்சரியமடைந்து, 'என்னைத் தவிர உள்ளவர், பாவங்களை மன்னிக்க முடியாது என அடியான் அறிந்து கொண்டான் எனக் கூறுகிறான்,'' என்றார்கள்.

அலீ (ரலி) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் அவர்களை ஒரு சமயம் அப்படியே பின்பற்றவில்லை. அதில் ஒரு சிறுமாற்றம் இருந்தது. அதற்கும் அவர்களுக்கு அல்லாஹ்வின் தூதர் மீதிருந்த அதிக மதிப்புதான் காரணம். கௌதுல் அஃலம் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்கள் மக்களுக்கு முதல் முறையாக உபதேசம் செய்ய முற்பட்டபோது அவர்களுக்கு அதிகம் தயக்கமாக இருந்தது. அப்பொழுது அண்ணல் நபி (ஸல்) அவர்கள், கௌதுல் அஃலம் (ரஹ்) அவர்கள் முன் தோன்றி, அவர்களின் வாயில் தம் உமிழ் நீரை ஏழுமுறை உமிழ்ந்து, ''அன்பு மகனே! மக்களுக்கு மார்க்க உபதேசம் செய்யும்!'' என மொழிந்தனர். அடுத்து அலீ (ரலி) அவர்கள் கௌதுல் அஃலம் (ரஹ்) அவர்கள் முன் தோன்றி அவர்களின் வாயில் தம் உமிழ் நீரை ஆறுமுறை உமிழ்ந்து மக்களுக்கு மார்க்க உபதேசம் புரியும்படி பணித்தனர். அப்பொழுது கௌதும் அஃலம் (ரஹ்) அவர்கள் அலீ (ரலி) அவர்களைப் பார்த்து, ''அல்லாஹ்வின் தூதர் அவர்கள் ஏழுமுறை உமிழ்ந்தனர். தாங்கள் ஆறுமுறைதானே உமிழ்ந்தீர்கள்?'' என்று கேட்ட போது, ''அல்லாஹ்வின் தூதர் அவர்களுக்கு மரியாதை கொடுக்க!'' என்று அலீ (ரலி) அவர்கள் பதில் கூறினர்.

இறை தூதர் அவர்களுக்கும் அலீ (ரலி) அவர்கள் மீது அதிக அன்பிருந்தது. அதை அவர்கள் தம் சொற்கள் மூலமாகவும், செயல்கள் மூலமாகவும் வெளிப்படுத்தியிருக்கின்றனர். ஒரு முறை அவர்கள், ''எவர் அலீக்கு வருத்தம் உண்டாக்குகிறாரோ அவர் எனக்கு மனவருத்தம் உண்டாக்குகிறார். எவர் எனக்கு மனவருத்தம்

உண்டாக்குகிறாரோ அவர் அல்லாஹ்வுக்கு வருத்தம் உண்டாக்குகிறார்!'' என்று கூறினார்கள். உஹதுப் போரின் போது அலீ (ரலி) அவர்கள் காயம் அடைந்து விட்டதால் அவர்களின் கை பிடித்திருந்த கொடி விழுந்துவிட்டது. அப்பொழுது அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கொடியைத் தம் இடக்கையால் பிடிக்கும்படி கட்டளையிட்டு விட்டு, ''அவர் (அலீ) இவ்வுலகிலும், மறு உலகிலும் எனக்குக் கொடி பிடிப்பவராய் இருக்கிறார்!'' என்று சொன்னார்கள். திருகுர் ஆனிலுள்ள பரா அத் அத்தியாயம் மதீனாவில் வைத்து இறங்கிய பொழுது அதனை மக்காவுக்குச் சென்று அங்குத் திரண்டிருக்கும் யாத்திர்களிடம் அறிவிக்கும் பொறுப்பை அலீ (ரலி) அவர்களிடமே ஒப்படைத்தார்கள்.

ஒரு சமயம் உஸாமா (ரலி) அவர்கள் அலீ (ரலி) அவர்களைப் பார்த்து, ''நீங்கள் என்னுடைய மௌலா அல்ல. என்னுடைய மௌலா அல்லாஹ்வின் தூதர் அவர்கள்தாம்!'' என்று கூறினர். உஸாமா (ரலி) அவர்கள் உரைத்ததை அறிந்த அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ''நான் எவருக்கு மௌலாவாக இருக்கிறேனோ அவருக்கு அலீயும் மௌலாதான்!'' என அறிவித்தார்கள். மௌலா என்னும் சொல்லிற்குத் தலைவர், உபகாரி, உதவியாளர், நேசர் எனப் பல பொருள்கள் உண்டு.

இன்னொரு சமயம் அலீ (ரலி) அவர்கள் கலீபாவாகக் கூபாவில் இருக்கும் போது, அவர்களைக் காண வந்த ஒரு கூட்டத்தினர் அவர்களை, ''அஸ்ஸலாமு அலைக்கும், யாமௌலானா!'' எனக் கூறி வாழ்த்தினார்கள். அதைக் கேட்டு அலீ (ரலி) அவர்கள், ''நீங்கள் அரபிகளாய் இருக்கிறீர்கள். நான் எப்படி உங்களுடைய மௌலாவாக இருக்க முடியும்?'' என்று கேட்டனர். அதற்கு அந்த மக்கள், ''நான் எவருக்கு மௌலாவாக இருக்கிறேனோ அவருக்கு அலீயும் மௌலாவாக இருக்கிறார்'' என அல்லாஹ்வின் தூதர் அவர்கள் சொல்ல நாங்கள் செவியுற்றிருக்கிறோம்!'' என்று பதில் கூறினார்கள். அந்த மக்கள் மதீனத்து அன்சாரிகளாய் இருந்தனர். அவர்களில் ஒருவர் அபூ ஐயூப் அன்சாரி (ரலி).

அண்ணல் நபி (ஸல்) அவர்கள், அலீ (ரலி) அவர்களைத் தம் குடும்பத்தில் ஒருவராகக் கொண்டிருந்தார்கள். ஒரு சமயம் மக்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களைப் பார்த்து ''அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தங்களுடைய உறவினர்கள் யார்? அவர்கள் மீது நாங்கள்



அன்பு கொள்வது எங்கள் மீது கடமையாக ஏற்பட்டிருக்கிறதா?'' என்று கேட்டனர். அப்பொழுது அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ''அலீயும் பாத்திமாவும் என் இரு புதல்வர்களும் (ஹஸனும், ஹுஸைனும்)!'' என்று கூறினார்கள். இன்னொரு சமயம் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் அலீ (ரலி) அவர்கள் வந்து, ''என் மீது மக்கள் பொறாமை கொள்கின்றனர்!'' எனக் கூறி முறையிட்டனர். அப்பொழுது அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ''நால்வரில் நான்காமவராக நீர் இருப்பதையும், சுவர்க்கம் புகுபவர்களில் முதலாவதாக நானும், நீரும், ஹஸனும், ஹுஸைனும், நம்முடைய மனைவிமார்கள் நமக்கு வலப்புறமும், இடப்புறமும், நம் சந்ததியினர் நம் மனைவிமார்களுக்குப் பின்னாலும் இருப்பதையும் நீர் பொருந்திக் கொள்ளவில்லையா?'' என்று கேட்டார்கள்.

ஹம்ஸா (ரலி) அவர்களின் மகளை, ''நான்தான் அவளை வளர்ப்பேன். நான்தான் அவளை வளர்ப்பேன்!'' என அலீ (ரலி) அவர்களும் அவர்களின் சகோதரர் ஜஃபர் (ரலி) அவர்களும் சண்டையிட்டுக் கொண்டனர். அந்தப் பொறுப்பு தமக்குத்தான் தரப்பட வேண்டும் என ஜைத் இப்னுஹாரிதா (ரலி) அவர்களும் தர்க்கித்தனர். இந்தச் சண்டை முற்றுப் பெறாமல் முற்றிக் கொண்டு செல்வதைக் கண்ட அண்ணல் நபி (ஸல்) அவர்கள், அலீ (ரலி) அவர்களிடம், ''நீர் நம்மைச் சேர்ந்தவர். நாம் உம்மைச் சேர்ந்தவர்!'' என்று கூறினர். அதைக் கேட்டதும் அலீ (ரலி) அவர்கள் தமக்கு ஏற்பட்ட குதூகலத்தில் குதித்தே விட்டார்கள்.

ஒரு முறை அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ''நானும் நீரும் இந்த உம்மத்தின் தந்தையராவோம்!'' என அறிவித்தார்கள்.

இவ்விதம் தமக்கும் அலீ (ரலி) அவர்களுக்கும் இடையே இருக்கும் உறவால் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் உயர்வை உரைத்த அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பின்வரும் உரைகளால் உறுதி செய்தனர் : ''உலகில் விடிவெள்ளி எவ்வளவு ஒளியுடன் காணப்படுகிறதோ அவ்வளவு ஒளியுடன் சுவர்க்கத்தில் அலீ காணப்படுவார்!'' என்று அவர்கள் ஒரு முறை கூறினர். ''கண் இமைக்கும் நேரம் கூடப்பாவம் செய்யாதவர்கள் உலகில் மூன்றே மூன்று பேர்கள் தாம். அவர்கள் சூரா யாசீனில் வரக்கூடிய ஹபீபுனைஜ்ஜார், மூஸா (அலை) அவர்கள் மதலையாக இருக்கும் போது அவர்களை வைத்து ஆற்றில் விடுவதற்குப் பெட்டி செய்து கொடுத்த கிஜ்பீல் என்னும்

தச்சர், மூன்றாமவல் அலீ இப்னு அபூதாலிப்!'' என்று இன்னொரு முறை இயம்பினர்.

''இப்ராஹீம் (அலை) அவர்களைப் பார்க்க விரும்பின் அபூபக்ரைப் பாருங்கள்! மூஸா (அலை) அவர்களைப் பார்க்க விரும்பின் உமரைப் பாருங்கள் ! ஈஸா (அலை) அவர்களைப் பார்க்க விரும்பின் அலீயைப் பாருங்கள்!'' என்றும் அவர்கள் அறிவித்தார்கள்.

இவ்விதம் அல்லாஹ்வின் நேசராகவும், அவன் தூதரின் நேசராகவும் இருந்த அவர்கள், அல்லாஹ்வாலும், அவன் தூதராலும் பாராட்டப்பட்ட அவர்கள், அல்லாஹ்வின் அரசை இவ்வையகத்தில் ஏற்படுத்த முயன்றார்கள். அவர்களுக்கு மட்டும் அமைதியும், அவகாசமும் அளிக்கப்பட்டிருந்தால் அவர்கள் வானத்தைக் கொண்டு வந்து இந்த வையகத்தில் வைத்திருப்பார்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

## அறிவு

அலீ (ரலி) அவர்களிடம் ஏற்றமிகும் தன்மைகள் எத்தனையோ இருந்தன. அவற்றில் பிரதானமானவை மூன்று. அவை : அறிவு, வீரம், தாராளம். அவர்களிடம் இருந்த அறிவு அதிசயிக்கத்தக்கதாய் இருந்தது. இந்த அறிவை அவர்கள் கற்றும் பெற்றிருக்கலாம். அல்லாஹ்வால் உணர்த்தப்பட்டும் அடைந்திருக்கலாம். ''இந்த அறிவையெல்லாம் அவர்கள் கற்றுத் தெரிந்திருக்க முடியாது. அது அவர்களுக்கு அல்லாஹ்வால் உணர்த்தப்பட்டது. அது 'இலமே லதுன்னி' அதாவது உணர்த்தப்பட்ட அறிவு. அதனை அல்லாஹ்வுடைய தூதர்களாலும், அல்லாஹ்வுடைய நேசர்களாலுமே அடைய முடியும்!'' என்கிறார்கள் இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள். அவர்கள் உரைப்பதை உண்மை என்றே ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது. அலீ (ரலி) அவர்கள் அறிந்திராத கலைகளே இல்லை என்று கூடக் கூறலாம். தஸவ்வுஃப் என்னும் ஞான மார்க்கம் தஃப்ஸீர் என்னும் திருமறை விளக்கம், சட்டம், கணிதம், மருத்துவம், மொழி இயல், இலக்கணம் ஆகியவையெல்லாம் அவர்களுக்குக் கை வந்த கலைகளாக இருந்தன. வன்மை மிக்க நாவையும், பொன்மொழிகளை' உதிர்க்கக் கூடிய வாயையும் அவர்கள் பெற்றிருக்கிறார்கள்.



''ஓர் எழுத்தை எனக்குக் கற்றுத் தந்தவராயினும் அவருக்கு நான் அடிமை!'' என்று அவர்கள் கூறினார்கள். அண்ணல் நபி (ஸல்) அவர்களை மிகவும் இள வயதிலிருந்தே அகலாதிருந்த ஒருவர் ஆவார்கள் அவர்கள். முப்பது ஆண்டுகள் அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களை நிழலினும் நெருக்கமாக அணைந்து இருந்திருக்கிறார்கள். இந்த அரிய வாய்ப்பு அறிவை வளர்த்துக்கொள்ள அவர்களுக்கு அதிகம் உதவியிருக்கும். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்விடமிருந்து அறிவைப் பெற்றார்கள். அலீ (ரலி) அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடமிருந்து அறிவைக் கற்றார்கள். அதனால்தான் அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ''என்னைப் பின்பற்றியோரில் அறிவில் அலீ எல்லோரையும் மிஞ்சுகிறார். அறிவு பத்துப் பாகமாக்கப்பட்டால் ஒரு பாகம் உலகிற்கும் ஒன்பது பாகம் அலீக்கும் இருக்கும்!'' என்று கூறினர். ''நான் அறிவு என்னும் பட்டணமாவேன். அலீ அதன் தலைவாயில்!'' என்றும் அறிவித்தனர்.

அலீ (ரலி) அவர்களை 'இரண்டாம் சுலைமான்' என்று குறிப்பிடுவதுண்டு. நபி சுலைமான் (அலை) அவர்களுக்கு அல்லாஹ் எல்லாக் கலைகளையும் கற்றுக் கொடுத்ததால் அவர்களுக்குப் பின் ஒருவர் அவர்களைப் போன்ற அறிஞர் என்றால் அது அலீ (ரலி) அவர்கள்தாம் என்னும் பொருளில்தான் அவர்கள் இவ்விதம் குறிப்பிடப்பட்டார்கள்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் திருமறை வசனங்களைக் கூற அவற்றை எழுதுபவர்களாய்ச் சில சமயங்களில் அவர்கள் இருந்திருக்கின்றனர். அதனால் அவர்களுக்குத் திருமறையின் வசனங்கள், அதன் அத்தியாயங்கள் எப்பொழுது வெளியாயின, ஏன் வெளியாயின என்னும் விவரங்களெல்லாம் மிகவும் தெளிவாகத் தெரிந்திருந்தது. ''திருகுர் ஆனின் ஒவ்வொரு வசனத்தையும் அது ஏன் வந்தது, எப்பொழுது வந்தது என்று என்னால் கூற இயலும்!'' என்று அவர்கள் கூறியிருக்கின்றனர். அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் மட்டுமே இந்த விஷயத்தில் அலீ (ரலி) அவர்களுக்கு நிகரானவர் ஆவர். அலீ (ரலி) அவர்களே திருமறையின் அத்தியாயங்களை அவை வெளிவந்த காலப் பிரகாரம் வரிசைப்படுத்தியவர்கள் என்றும் கூறப்படுகிறது. கலீபா அபூபக்ர் (ரலி) அவர்கள் ஆட்சியின் ஆரம்ப காலத்தில் அப்பணிக்காக அவர்கள் ஆறு மாதங்களை அர்ப்பணித்தார்கள்.

திருகுர் ஆனுக்கு விளக்கம் பகர்வதிலும் அவர்கள் விற்பன்னராக விளங்கினார்கள். அவர்கள் அளித்த விளக்கங்கள் எவர் உரைத்த விளக்கங்களையும் விட ஆதார பூர்வமானவையாய்க் கருதப்படுகின்றன. காரிஜிகள் புதிய விளக்கம் புரிந்தபோது அவற்றை அவர்களால் ஏற்றுக் கொள்ள இயலவில்லை. அதற்குக் காரணம் அவர்களுக்குச் சரியான விளக்கம் தெரிந்திருந்ததாகும். தஃப்ஸீர் என்னும் திருகுர்ஆன் விளக்கக் கல்வியை உண்டு பண்ணியவர்களே அவர்கள்தாம் என்று கூறப்படுகிறது. திருகுர் ஆனின் முதல் வசனத்தின், முதல் சொல்லின் முதல் எழுத்தை அவர்கள் ஓர் இரவு முழுவதும் விளக்கினார்கள். அப்படியும் அவர்களால் முழுதும் விளக்க முடியவில்லை. அடுத்த நாள் காலையில், ''நான் அவர்களுடன் இருந்தது புயல் உழக்கும் கடலின் அருகில் ஒரு சிற்றெறும்பு இருப்பதை ஒத்திருந்தது!'' என்று அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறினர். அலீ (ரலி) அவர்களும் ஒரு முறை கூறினர். ''நான் 'பிஸ்மில்லாஹ்' என்பதிலுள்ள முதல் எழுத்தான 'பே'யின் பொருளை விளக்கி எழுதினால் அது எண்பது ஒட்டகைச் சுமை இருக்கும்!'' என்று. திருகுர் ஆனுக்கு விளக்கம் கூறுவதில் அவர்களுக்கு அவ்வளவு திறமை இருந்ததால்தான் அபுல் அஸ்வத் அத்துஅலி, அபூஅப்துர் ரஹ்மான் அஸ்ஸுலமி, அப்துர்ரஹ்மான் அபீலைலா போன்ற அறிஞர்களெல்லாம் அவர்களிடம் பாடம் கேட்டனர்.

அலீ (ரலி) அவர்கள் திருகுர்ஆன் முழுவதையும் மனனம் செய்த ஹாபிஸாகவும் இருந்தனர். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் திருகுர்ஆன் வசனங்களைக் கூறியதும் அவற்றை மனனம் செய்து விடும் அற்புத நினைவாற்றல் அவர்களுக்கு அமைந்திருந்தது. திருகுர்ஆன் முழுவதும் மனனம் இருந்ததால் அவர்கள் தொழுகையில் நீண்ட சூராக்களை ஓதுவார்கள்.

அத்துடன் அவர்கள் திருகுர் ஆனின் வசனங்களை ஓதுவதனால் ஏற்படும் அற்புதப் பலன்களையும் அறிந்திருந்தார்கள். ''எவர் தபாரகல்லதீ சூராவை ஓதி வருகிறாரோ அவர் மறுமை நாளில் நபி யூசுப் (அலை) அவர்களைப் போன்று அழகிய முகம் கொண்டவராக அமரர் களின் சிறகுகளின் மீது உலா வருவார்!'' என்று அவர்கள் கூறினார்கள்.

அவர்களே ஹதீஸ் கலையை உண்டு பண்ணியவர்கள் என்றும் கூறப்படுகிறது. அண்ணல் நபி (ஸல்) அவர்களுடன் முப்பது



ஆண்டுகள் இருந்தது, இந்தக் கலையில் தேர்ச்சி பெற அவர்களுக்கு உதவியது. அண்ணல் நபி (ஸல்) அவர்கள் சமூகம் அகலாதிருந்த ஒருவராதலால் அவர்கள் மூலம் வெளிப்பட்ட ஹதீஸ்கள் அனைத் தும் ஆதார பூர்வமாய்க் கருதப்படுகின்றன. அவர்கள் மூலம் 586 ஹதீஸ்கள் வெளியாகியுள்ளன. அண்ணல் நபி (ஸல்) அவர்கள் சொல்லாத ஒன்றைச் சொன்னதாகக் கூறியவர் நரக வாயிலில் இடம் பெற நேரிடும் என்பதை அறிவார்களாதலால் அவர்கள் மிகுந்த அச்சத்துடன்தான் ஹதீஸ்களை அறிவிப்பார்கள். அரிதாகத்தான் தம் பேச்சிற்கிடையில் ஹதீஸ்களைப் பயன்படுத்துவார்கள். ஆனால் அவர்கள் உண்மையில் ஹதீஸ் கலையில் சிறந்த அறிஞராக இருந்து கொண்டிருந்தார்கள். ''மதீனா நகரில் இஸ்லாமிய மார்க்கக் கடமைகள் பற்றிய கலையை அலீ அவர்களைப் போல் அறிந்தோர் தூதரின் தோழர்களில் எவரும் இல்லை!'' என அப்துல்லாஹ் பின் மஸ்வூத் (ரலி) அவர்கள் கூறினர்.

'தஸவ்வுஃப்' என்னும் ஞானமார்க்கத்திற்கு அடிப்படை அமைத்துக் கொடுத்தவர்கள் அவர்களே. அதனால்தான் இஸ்லாமிய சூஃபிதத்துவத்தின் தந்தை என்றும் அவர்கள் கருதப்படுகின்றனர். ஞான மார்க்கத்திற்குப் பக்தியும், பரித்தியாகமும் அவசியமான வையாகும். அலீ (ரலி) அவர்களிடம் அளவிறந்த பக்தி இருந்தது. அதனால்தான் அவர்களுக்குப் பக்தர்களின் தலைவர் என்று பொருள் படும் 'இமாமுல் முத்தக்கீன்' என்னும் பெயரே ஏற்பட்டிருந்தது. பரித்தியாகம் புரிய எப்பொழுதும் ஆயத்தமானவர்களாகவே அவர்கள் இருந்தார்கள். ஒருவர் வந்து அவர்களிடம் உபதேசம் புரியுமாறு வேண்டிக் கொண்டார். அவர்கள் கூறினார்கள்: ''உம் முடைய மனைவியும், மக்களும் உம்முடைய பிரதான கவலையாக இருக்க வேண்டாம்! ஏனெனில் அவர்கள் அல்லாஹ்வின் நேசர்களாய் இருந்தால் அல்லாஹ் தன் நேசர்களைக் கவனித்துக் கொள்வான். அவர்கள் அல்லாஹ்வின் விரோதிகளாய் இருந்தால் ஏன் நீர் அல்லாஹ்வின் விரோதிகளைக் கவனிக்க வேண்டும்?''

இவ்வித அர்ப்பண உணர்வு இருந்ததால்தான் நபி மூஸா (அலை) அவர்கள் நபிஷுஐப் (அலை) அவர்களின் மகனை இக்கட்டான நிலையில் அல்லாஹ்வின் பொறுப்பில் விட்டார்கள். நபி இப்ராஹீம் (அலை) அவர்கள் ஹாஜிரா அவர்களையும், குழந்தை இஸ்மாயீல் அவர்களையும் அல்லாஹ்வின் பொறுப்பில் பாரான் பள்ளத்தாக்கில் விட்டார்கள். இவ்விதம் நபிமார்கள் தம் மனைவி,

மக்கள் மீது கவலை வைக்காமல், அவர்களை அல்லாஹ் வின் பொறுப்பில் விடுபவர்களாய் இருந்தார்கள்.

வலிமார்களின் அரசர் என்று பொருள்படும் 'ஷாஹெ அவ்லியா' என்றும் அலீ (ரலி) அவர்கள் வர்ணிக்கப்படுகின்றனர். அவர்களின் தலையீடு இன்றி எவரும் வலியாக வர முடியாது என்று கூறப் படுகிறது. அதனால்தான் சூஃபிகள் என்னும் ஞான மேதைகளின் மத்தியில் அலீ (ரலி) அவர்களின் அந்தஸ்து மிகவும் அதிகமானதாய் இருக்கிறது. ஜுனைதுல் பகுதாதி (ரஹ்) அவர்கள் கூறுகின்றனர், அலீ அவர்களே எங்களின் ஷைகு என்று. ஜுனைதிய்யா தரீக்காவும், பாயஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்களின் துபூரிய்யா தரீக்காவும் அலீ (ரலி) அவர்களையே தம் மூலவராகக் கொண்டிருக்கின்றன.

'ஃபிக்ஹ்' என்னும் இஸ்லாமிய மார்க்கச் சட்ட அறிவிலும் அலீ (ரலி) அவர்கள் அதிகம் தேர்ந்திருந்தனர். 'இஜ்திஹாத்' என்னும் சட்டப் பிரிவில் அவர்களுக்கு இணை அவர்களே என்று கூறப்படு கிறது. ''அலீயே நம் எல்லோரிலும் மிகப் பெரிய சட்ட நிபுணரா கவும், நீதிபதியாகவும் இருக்கிறார்!'' என உமர் (ரலி) அவர்களே உரைத்தனர். உமர் (ரலி), உதுமான் (ரலி), ஆயிஷா (ரலி) ஆகியோர் களெல்லாம் இஸ்லாமியச் சட்டப் பிரச்சினைகளில் அலி (ரலி) அவர்களிடம்தாம் ஆலோசனை கேட்பதுண்டு. அவர்களின் பரம விரோதியான முஆவியா (ரலி) அவர்கள் கூடப் பிரச்சினைகள் ஏற்பட்டால் அதுபற்றி அலீ (ரலி) அவர்கள் என்ன கூறியிருக்கிறார்கள் என்று கவனிப்பதுண்டு, இந்த அரிய திறன் அப்படி எளிதாக அடைந்து விடக் கூடியதன்று. அதற்கு இயற்கையிலேயே நுண்ணறிவு இருக்க வேண்டும். அடுத்த படியாகத் திருகுர்ஆன், ஹதீஸ் பற்றிய பரந்த அறிவு அமைந்திருக்கவேண்டும். இவ்வறி வுகள் அலீ (ரலி) அவர்களிடம் குறைவில்லாமல் குடிகொண்டி ருந்தன.

தௌராத், இன்ஜீல், சபூர் ஆகிய வேதங்களையும் அவர்கள் அறிந்திருந்தார்கள்.

மொழிக்குப் பிரதானம் இலக்கணம். அது ஏனோ பிரதான மொழியான அரபிக்கு இருக்கவில்லை. அலீ (ரலி) அவர்களே அரபி மொழிக்கு இலக்கண விதிகளை வகுத்தவர்கள் ஆவர். அதனால்தான் அவர்கள் 'அரபி இலக்கணத்தின் தந்தை' எனவும் அழைக்கப்படு கின்றனர். அவர்களிடம் இலக்கணப் பாடம் கேட்டவர்களில் ஒருவர்



அபுல் அஸ்வத்துஅலீ. அவர் ஒரு நாள் அவர்களிடம் வந்த பொழுது அவர்கள் ஆழ்ந்த சிந்தனையில் இருந்து கொண்டிருந்தார்கள். அவர்களைப் பார்த்து அவர், ''என்ன விஷயம்? ஏன் இப்படி உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள்?'' என்று கேட்டார். ''ஊரில் உயிர் எழுத்துக்கள் தவறாக உச்சரிக்கப்படுவதைக் கேட்டேன். அதனால் அரபி மொழியின் விதிகள் பற்றி ஒரு நூல் எழுதுவது சம்பந்தமாய்ச் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்,'' என்று அவர்கள் கூறினர். அந்த முயற்சியில் உடனே ஈடும்படி அபுல் அஸ்வத்து அலீ அவர்களை ஊக்கினார். சில நாட்கள் சென்றன. அவர்கள், அவரிடம் எழுதப் பட்ட சில இதழ்களைக் கொடுத்தனர். அதுவே அரபி இலக்கணத்தின் ஆரம்பமாகும்.

கவின் மிக்க கவிதைகளும் வசனமும் எழுதும் திறனையும் அவர்கள் கைவரப் பெற்றிருந்தார்கள். கவிதையின் தரத்தை உயர்த் திய பெருமையும் அவர்களுக்கு உண்டு. அரபிக் கவிஞர்களின் கவிதைகள் அரசர்களையும் அவர்களின் பாரம்பரியத்தையும் புகழு பவையாகவும், காதலியையும் அவளின் அங்க அழகையும் வர்ணிப் பவையாகவும்தான் இருந்தன. அதில் ஒரு மாற்றம் ஏற்படுத் தியவர்கள் அலீ (ரலி) அவர்கள்தாம்.

அவர்களிடம் அமைந்திருந்த கவியாக்கும் திறனுக்கு ஓர் உதாரணமாகும் இது : அவர்களிடம் ஒருவர் உதவி கோரி வந்தார். அவர் முகம் மாறுபட்டிருந்தது. அவர் வெட்கம் அடைந்திருக்கிறார் என்பதை அறிந்து கொண்டு, ''நான் கோரிக்கையின் தாழ்மையை உம் முகத்தில் காணாதிருப்பதற்காக நீர் உம் விருப்பத்தை நிலத்தில் எழுதிக் காட்டும்!'' என்று கூறினார்கள். அவர் எழுதிக் காட்டிய பாடல் இது.

**லம்யப்கலீ ஷெய்வுன் யுபாவு பிதிர்ஹமின்**
**துக்னீக ஹாலத்து மன்ளரீ அன்முக்பிரீ**
**இல்லா பிகிய்யத்த மாயி வஜ்ஹின் சுன்துஹூ**
**அன்லாயு பாஅ வனிஃம அன்தல் முஷ்தரீ**

**இதன் பொருள் :** ''ஒரு காசுக்கு விற்கவும் என்னிடம் எவ்விதப் பண்டமுமில்லை. நான் சொல்லவில்லை. என் முகம் சொல்லும். விற்காமல் நான் காத்து வந்த முகத்தின் தண்ணீரையும் நான் இன்று விற்க வந்தேன். வாங்குகிறவர்களில் நீர் மிகவும் நல்லவராய் இருக்கிறீர்.

அவர் நிலத்தில் எழுதிய இந்தப் பாடலைப்பார்த்ததும் அலீ (ரலி) அவர்களின் உள்ளத்தில் இந்தப் பாடல் உருவானது, அதை அவர்களும் நிலத்தில் எழுதினார்கள்.

ஆஜல்தனா பஅதாக அஜிலு பிர்ரினா
குல்லன் வலவ் அம்ஹல்த்தனாலம் நக்தரீ
பகுதில் கலீல் வகுன்த அன்னகலம் தபிஃ
மஸ"ன்தஹூ" வக அன்னனாலம் நஷ்தரீ

இதன் பொருள் : ''நீர் நம்மிடம் அவசரப்பட்டு விட்டீர். நம்முடையஅவசரமான நன்றி உமக்குக் கொஞ்சமாக வருகிறது. நீர் அவகாசம் தந்திருந்தால் நாம் அதைக் குறைத்திருக்கமாட்டோம். எனவே நீர் எதைக் காத்து வந்திரோ அதை, கொஞ்சத்தைக் கொண்டு விற்காதவர் போல் இருப்பீராக ! நாமும் வாங்காதவர் போல இருக்கிறோம்.

அவர்களே அரபி உரை நடைக்கும் அடிக்காலிட்டவர் என்று கூறப் படுகிறது. அவர்கள் உயர்ந்த உரை நடை எழுதக் கூடியவர் களாய் இருந்தார்கள். அவர்களின் கடிதங்களும், கட்டளைகளும் அற்புத உரை நடையில் அமைந்திருந்தன. வன்மை மிக்க நடை, அழகு மிகுந்த கருத்து, நளினம் நிறைந்த நயம் இவற்றுடன் அவற் றில் அமைந்திருந்த அறிவு அடர்ந்திருந்த செறிவு அவர்களுடைய உரை நடையை ஈடிணையற்றவையாய் ஆக்கியிருந்தன. அதனால் தான் அவர்கள் எழுத்துக்கள் உலகின் நாகரிக மொழிகள் அனைத்திலும் மொழியெர்க்கப்பட்டிருக்கின்றன.*

அவர்களின் கையெழுத்தும் அழகானதாயிருந்தது. அதனைப் பார்க்க அரபு அவனியின் தொலைதூர மாநிலங்களில் இருந்தெல்லாம் மக்கள் கூபா வருவதுண்டு.

கணிதம், மருத்துவம் ஆகியவற்றிலும் அவர்களுக்குத் தேர்ச்சி இருந்தது.

★ அலீ (ரலி) அவர்கள் கலீபாவாக இருந்த போது ஆளுநராயிருந்த மாலிக் அஷ்தர் நஹ்சீக்கு, 'ஆட்சி நடத்துவது எப்படி?' என்பதை விளக்கி ஒரு கடிதம் எழுதினர். அந்தக் கடிதத்தைப் பாகிஸ்தான் அரசுமொழி பெயர்த்துப் பல்லாயிரம் பிரதிகள் அச்சிட்டு அந்நாட்டின் அரசு அதிகாரிகள், நீதிபதிகள், அமைச்சர்கள், அரசியல்வாதிகள் ஆகியோருக்கெல்லாம் அனுப்பி வைத்தது.



அவர்களுக்குச் சிறந்த நாவன்மை அமைந்திருந்தது. அவர்களின் நாவன்மையைப் புகழ்ந்த ஒருவர், அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ''தூதத்துவத்திற்கு நான் அல்லாஹ்வால் தேர்ந்தெடுக்கப்பட்டேன். வீரத்திற்கும், நாவன்மைக்கும் அலீ என்னால் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்!'' என்று அவர்கள் கூறினர். அலீ (ரலி) அவர்களால் எந்த விஷயம் பற்றியும் முன் தயாரிப்பின்றிப் பேச முடியும். அரபி ஒருவர் 'அலிப்' தான் அரபி மொழியில் அதிகம் பயன்படுத்தப்படும் எழுத்து என்று கூறினார். உடனே அவர்கள் அது பற்றி நீண்ட சொற் பொழிவு ஒன்று செய்தார்கள். அது இன்றும் சிறந்த சொற்பொழிவு எனச் சிலாகிக்கப்படுகிறது.

அவர்கள் நூற்றுக்கணக்கான பொன் மொழிகளையும் உதிர்த் திருக்கிறார்கள். அவற்றைப் படிப்போர் அவர்களின் அறிவு ஆழம் கண்டு வியப்பதுடன் அவர்கள் அறியாத விஷயம் என்று ஒன்று கிடையாது என்று உரைப்பர். உலகம் கண்ட அறிஞர்க்கறிஞர்கள் உதிர்த்ததாகக் கூறப்படும் பொன்மொழிகளுக்கு அலீ (ரலி) அவர்கள் உரைத்ததாகக் கூறப்படும் பொன்மொழிகள் எவ்வகையிலும் இளைத்தவையாய் இருக்கவில்லை. அவை உலகின் நாகரிக மொழிகள் பலவற்றிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

அவற்றில் சில இவை :

'' மனிதனுடைய ஒவ்வோர் மூச்சும் மண்ணறையை நோக்கி எடுத்து வைக்கும் எட்டு.''

''எந்த மனிதன் அல்லாஹ்வின் விதியை (தக்தீர்) பொருந்திக் கொள்கிறானோ அவனுக்குப் பொருந்திக் கொண்டதற்கான கூலி கிடைக்கும். எந்த மனிதன் விதி (தக்தீர்) மீது திருப்தி கொள்ள வில்லையோ அவனுடைய அமல் வீணாகிவிடும்.''

''பாக்கியத்தின் ஓரங்கள் உங்களுக்குக் கிடைத்தால் குறைவாக நன்றி செலுத்துவது கொண்டு அதன் இறுதி எல்லை உங்களுக்குக் கிடைக்காமல் துரத்தி விடாதீர்கள்!

''பொருளில் புதியது நல்லது. நட்பில் பழையது நல்லது.''

''தேள் கொட்டுவதனால் ஏற்படும் வேதனையைவிட உறவினர் களின் பகைமையினால் ஏற்படும் வேதனை மிகவும் கடுமையான தாகும்.

''ஒவ்வொரு பொருளுக்கும் சகாத் உண்டு. அறிவின் சகாத் மடையர்களின் பேச்சைக் கேட்டுப் பொறுமையாய் இருப்பது.''

''அறிவுள்ளவனின் நாவு அவன் இதயத்தில் இருக்கும். அறிவற்றவனின் இதயம் அவன் வாயில் இருக்கும்.''

''அறிவு அதிகரிக்குமானால் பேச்சு குறைந்துவிடும்.''

''கால் தவறினால் காயம் வரும். சொல் தவறினால் வம்பு வரும்.

''பேச்சு மருந்துக்கு நிகரானது. அதை அளவோடு பயன்படுத்தினால் அது பயன்தரும். அளவை மீறினால் ஆபத்து வரும்.''

அவர்களின் வாயிலிருந்து வந்தவை அனைத்துமே அறிவு நிறைந்தவையாய்த்தான் அமைந்திருக்கின்றன. அளித்த தீர்ப்புகளையும் படிக்கும் போது இவ்வளவு அறிவை அவர்கள் எப்படிப் பெற்றார்கள் என்னும் வியப்பு எழாமல் இராது. அதற்கு விளக்கம் அவாகளே அளிக்கிறார்கள்: ''நான் இரண்டு விதமான அறிவுகளைக் கண்டேன். ஒன்று, இயற்கையாகக் கிடைத்தது. மற்றொன்று, கேட்டுப் பெற்றது. முந்தையது இல்லை என்றால் பிந்தையது பயன் படாது. விழிகளில் ஒளி இல்லாத போது கதிர் ஒளி பயன்படாதது போல்.''

அறிஞர்க்கறிஞரான அவர்கள் அறிவைப் பற்றியும் அறிஞர்களைப் பற்றியும் பல முறை பாராட்டிப் பேசியிருக்கிறார்கள்.

ஒரு சமயம் அவர்களிடம் அறிஞர்கள் சிலர் வந்து ஒரு கேள்வியைக் கேட்டு அதற்குப் பல்வேறு பதில்கள் அளிக்குமாறு வேண்டினர். அறிஞர்கள் கேட்ட கேள்வி, ''அறிவு செல்வத்தை விடச் சிறந்ததா?'' என்பதாகும். அதற்கு அவர்கள் அளித்த பதில் இது:

''அறிவு செல்வத்தை விடச் சிறந்தது. ஏனெனில் அறிவு இறை தூதர்களின் வாரிசுகளுக்காக வைக்கப்படுவது. செல்வம் ஃபிர் அவ்னிடமிருந்து பெறப்படுவது.

''அறிவு செல்வத்தை விடச் சிறந்தது. ஏனெனில் நீங்கள் செல்வத்தைக் காக்கிறீர்கள். அறிவு உங்களைக் காக்கிறது.



''அறிவு செல்வத்தைவிடச் சிறந்தது. ஏனெனில் செல்வருக்குப் பல பகைவர்கள் இருப்பர். அறிஞர் பல நண்பர்களைப் பெற்றிருப்பர்.

''அறிவு செல்வத்தைவிடச் சிறந்தது. ஏனெனில் அறிவு வழங்கப்பட வளர்கிறது. செல்வம் கொடுக்கப்படக் குறைகிறது.

''அறிவு செல்வத்தைவிடச் சிறந்தது. ஏனெனில் செல்வன் சில சமயங்களில் கருமியாகி விடுகிறான். அறிஞன் எப்பொழுதும் தாராளத் தன்மையுடன் இருக்கிறான்.

''அறிவு செல்வத்தைவிடச் சிறந்தது. ஏனெனில் செல்வத்தைப் போல் அறிவைத் திருட முடியாது.

''அறிவு செல்வத்தைவிடச் சிறந்தது. ஏனெனில் நியாயத் தீர்ப்பு நாளின் போது செல்வத்தைப் பற்றியே கேட்கப்படும், அறிவைப் பற்றியல்ல.

''அறிவு செல்வத்தைவிடச் சிறந்தது. ஏனெனில் அறிவு காலத்தால் அழியாது. செல்வம் அழியும்.

''அறிவு செல்வத்தைவிடச் சிறந்தது. ஏனெனில் அறிவால் மனம் ஒளிர்கிறது. செல்வத்தால் அறிவு கெடுகிறது.

''அறிவு செல்வத்தைவிடச் சிறந்தது. ஏனெனில் அல்லாஹ்வின் தூதர் அவர்கள் பூரண அறிவு கொண்டு புகன்றார்கள், ''உன்னை நாங்கள் வணங்குகிறோம் : உன் அடியார்களாய் இருப்பதால்!'' என்று. ஆனால் ஃபிர்அவ்னும், பிறரும் தங்களிடம் செல்வம் இருந்ததால் சொன்னார்கள், 'நாங்களே இறைவன்' என்று

அறிஞர்களைப் பற்றி அவர்கள் கொண்டிருந்த மேலான கருத்தை அவர்களின் இந்தச் சொற்கள் எண்பிக்கின்றன, ''அறிவு பெற்றவர்களைத் தவிர்த்து மற்றவர்களுக்குப் பெருமை கிடையாது. நல்வழியைத் தேடிக் கொண்டிருப்பவர்களுக்கு அவர்கள் ஒளி காட்டுகிறார்கள். ஒரு மனிதனை அவனுடைய மனப்பண்பை வைத்துத்தான் கணிக்க வேண்டும். அறியாதவர்கள் அறிஞர்களைப் பகைவர் என்று கருதுகின்றனர். அறிவுத் துறையில் எப்படியாவது வெற்றி அடைந்து விடு! அதை வைத்துக் கொண்டு நீ காலமெல்லாம் வாழலாம். உண்மையில் பாமரர்கள் பிரேதங்களுக்கு நிகரான வர்களே. உயிருள்ளவர்கள் யார் தெரியுமா? அறிஞர்கள்தாம்.

அறிவுள்ளவன் தன்னை அறிவுள்ளவன் என எண்ணி மேன்மை அடைகிறான். அறிவற்றவன் தன்னைப் பெரியவன் என எண்ணித் தாழ்மைப்படுத்திக் கொள்கிறான்.''

''இரவெல்லாம் நின்று வணங்கிப் பகலெல்லாம் நோன்பு நோற்று வாணாளெல்லாம் மார்க்கப் போருக்குப் போகிறவனை விட அறிஞர் மேலானவர். அறிஞர் ஒருவர் இறந்தால் இஸ்லாமிய மார்க்கத்தில் ஓர் ஓட்டை விழுந்துவிடும். மற்றோர் அறிஞர் வந்தால் ஒழிய அந்த ஓட்டை அடைபடாது.

''அறிஞர் ஒருவர் இறந்தால் அவருக்காக வானமும் பூமியும் அழும்.''

கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவர்கள் அளித்த பதில்களும் வினவப்பட்ட விஷயங்களுக்கு அவர்கள் அளித்த விளக்கங்களும் அவர்களின் அறிவு ஆழத்தை உணர்த்த ஓரளவு போதுமானவை யாகும்.

ஒருமுறை அவர்கள் ஈராக் நாட்டில் பயணம் செய்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது சிலர் ஆடை, அணிகலன்களால் தங்களை அலங்கரித்துக் கொண்டிருப்பதைக் கண்டு, ''இங்கே என்ன விசேஷம்?'' என்று கேட்டார்கள். ''இன்று அவர்களுக்குப் பெரு நாள்!'' என்று கூறப்பட்டதும் அவர்கள், ''அல்லாஹ்வின் கட்ட ளைக்கு மாறு செய்யாத ஒவ்வொரு நாளும் நமக்குப் பெருநாளே!'' என்று கூறினார்கள்.

ஒருவனுக்கு அவர்கள் மீது பகைமை இருந்து கொண்டிருந்தது. ஆனால் அவன் அதனை மறைத்துக் கொண்டு அவர்களைப் புகழ்ந்தான். அவன் இதயத்தில் இருப்பதை அறிந்து கொண்டு அவர்கள், ''நீ உன் நாவினால் நவிலுகிறாயே, அதற்கு நான் மிகவும் குறைந்தவன். நீ உன் மனத்திற்குள் வைத்திருக்கிறாயே, அதற்கு நான் மிகவும் அதிகமானவன்!'' என்று கூறினார்கள்.

ஒருவன் அவர்களிடம் வந்து, ''ஒரு வீட்டில் ஒருவனை அடைத்து சந்தோ, வழியோ இல்லாமல் சுவர் (வைத்து) மூடிவிட்டால் அவனுக்கு உணவு எவ்வழியாக வரும்?'' என்று இடக்காகக் கேட்டான். அடுத்த கணமே அவர்கள், ''இறப்பு எவ்வழியாக வருமோ அவ்வழியாக!'' என்று பதில் கூறினார்கள்.



ஒருவன் அவர்களைப் பார்த்து, ''கோழை என்றால் யார்?'' என்று கேட்டான். ''தான் செய்த காரியம் பற்றி வீணாகக் கர்வம் கொள்கிறானே, அவன் தான்!'' என்றார்கள் அவர்கள். ''எப்படி?'' என்று அவன் கேட்டான். ''முடியாத காரியம் ஒன்றைத் தான் முடிக்கும் போதுதான் ஒருவன் கர்வம் அடைகிறான்!'' என்றார்கள் அவர்கள். ''அப்படியானால் தான் செய்யும் இபாதத்தின் மீது கர்வம் கொள்வதும் தவறு தானே?'' என்று அவன் கேட்டான். ''தவறுதான். ஏனெனில் இப்லீஸும் தன் இபாதத்தின் மீது கர்வம் கொண்டிருந்தான். அதே போல் நாம் அவனைப் பின்பற்றுவது எனக்குப் பிடிக்கவில்லை!'' என்று அவர்கள் பதில் கூறினார்கள்.

ஒரு யூதன் அவர்களிடம் வந்து, ''ஹஸனின் தந்தையே! உங்களின் நபி இறந்து இருபத்தைந்து ஆண்டுகள்தாம் ஆகியுள்ளன. அதற்குள் நீங்கள் ஒருவரை ஒருவர் வெட்டிமாய்த்துக் கொள்கிறீர் களே?'' என்று இடக்காகக் கூறினான். அதைக் கேட்டு அவர்கள், ''ஆம், நீர் கூறுவது உண்மைதான். நாங்களாவது இருபத்தைந்து ஆண்டுகள் பொறுமையாக இருந்தோம். ஆனால் நீங்களோ செங்கடலைக் கடந்து உங்களின் கால்களிலிருந்த நீர் உலருமுன்னர் உங்களின் நபியை நோக்கி, 'எங்களுக்கு உருவச் சிலைகள் உண்டு பண்ணித் தாருங்கள், நாங்கள் வணங்குவதற்கு!' எனக் கேட்கத் தொடங்கி விட்டீர்களே!'' என்று கூறினார்கள்.

ஒருவர் அவர்களிடம் வந்து தமக்கு நினைவாற்றல் குறைவா யிருப்பதால் தவறு ஏற்பட்டு விடுகிறது என்று கூறினார். அவரிடம் அவர்கள், ''நீர் உம்மனைவியிடம் செல்வீரா?'' எனக் கேட்டார்கள். ''ஆம்'' என்றார் அவர். ''அவ்வாறாயின் அவளின் மகர்ப்பணத் திலிருந்து இரண்டு திர்ஹம்கள் நல்ல மனத்துடன் தருமாறு கேட்டுப் பெற்று அதைக் கொண்டு பாலும் தேனும் வாங்கி அதை மழைத் தண்ணீருடன் கலந்து அதிகாலையில் அருந்தும். உமக்கு நினை வாற்றல் ஏற்படும்!'' என்று கூறினார்கள். அவ்விதம் அவர்கள் கூறியதற்குக் காரணத்தை ஹஸன் இப்னு பஸ்லு (ரஹ்) அவர்கள் இவ்விதம் விளக்கினார்கள். ''வானத்திலிருந்து முபாரக்கான நீரை இறக்கினோம்' என மழை நீரைப் பற்றியும், 'பருகுபவருக்குத் தாராளமாக சுத்தமாக' எனப் பாலைக் குறித்தும், 'அதில் மக்களுக்கு சொஸ்தம் இருக்கிறது' எனத் தேனைப் பற்றியும், 'அதை நீங்கள் கவலையின்றிப் புசியுங்கள்' என மகரைப் பற்றியும் கூறப்பட்டி

ருக்கிறது. எனவே பரக்கத்தும் சொஸ்தமும் சுத்தமும் வருத்தமின்மையும் ஒன்று சேர்ந்தால் அது பயன் அளிப்பதில் ஆச்சரியம் என்ன?''

ஒருவர் அவர்களிடம் வந்து, ''இவ்வுலகைப் பற்றி எங்களுக்கு விளக்குங்கள்!'' என்று கேட்டார். ''இவ்வுலகைப் பற்றி நான் எவ் விதம் விளக்குவது?'' என்று கேட்டு விட்டு அவர்கள் கூறினார்கள். ''இவ்வுலகில் எவர் ஆரோக்கியத்துடன் வாழ்ந்தாரோ அவர் (மறு உலகில்) நோயாளியாக ஆவார். இவ்வுலகில் எவர் நிம்மதியாக வாழ்ந்தாரோ அவர் மறு உலகில் வருந்துவார். இவ்வுலகில் எவர் தேவையுள்ள ஏழையாக வாழ்ந்தாரோ அவர் மறு உலகில் தேவையற்றவராக வாழ்வார். இவ்வுலகில் எவர் சீமானாக வாழ்ந் தாரோ அவர் மறு உலகில் பல சோதனைகளுக்கு உள்ளாக்கப் படுவார். இவ்வுலகில் ஹலாலான பொருள்களைப் பயன்படுத்தியவர் களுக்கு இறைவனிடத்தில் கேள்வி கணக்கு இருக்கிறது. ஹராமானதைப் பயன்படுத்தி விட்டவர்களுக்கு இறைவனிடத்தில் தண்டனை இருக்கிறது. இவ்வுலகில் ஹலாலா, ஹராமா என்னும் சந்தேகத்திற்குரிய பொருள்களைப் பயன்படுத்தியவர்களுக்கு மறு உலகில் கண்டனம் இருக்கிறது.''

ஒருவர் பல குற்றங்கள் புரிந்துவிட்டுத் தமக்கு மறுமையில் கிடைக்கும் தண்டனையை நினைந்து நடுங்கிக் கொண்டிருந்தார். தமக்கு அல்லாஹ்வின் மன்னிப்புக் கிடைக்கவே கிடைக்காது என்றும் அவர் அஞ்சிக் கொண்டிருந்தார் அவரே அவ்விதம் கருதும் விதம் அவர் அவ்வளவு பாவங்கள் செய்திருந்தார். அவரை அலீ (ரலி) அவர்கள் காண நேர்ந்தது. அவரின் மன நிலையை அறிந்து கொண்டு அவர்கள், ''நீர் இறையருளைக் குறித்து நம்பிக்கை இழந்து போயிருக்கிறீர். இறைவனின் மன்னிப்பு உமக்குக் கிடைக்காது என்று எண்ணுகிறீர். இப்படி எண்ணுவது நீர் செய்த குற்றங்கள் எல்லாவற் றையும் விடக் கொடிய குற்றம்!'' என்று கூறினார்கள்.

இறைவனின் மன்னிக்கும் தன்மையை மனத்திற் கொண்டு அவரிடம் இவ்விதம் கூறிய அவர்கள் ஒரு சமயம் சொன்னார்கள்: ''ஒரு மனிதன் குற்றம் புரிகிறான். அந்தக் குற்றத்தை இறைவனும் மறைத்து விடுகிறான். உலகிலேயே இவ்வாறு காப்பாற்றிய இறைவன் மறுமையிலும் காப்பாற்றவே செய்வான்.''

பிறிதொரு சமயம் அவர்கள் பகர்ந்தார்கள் : ''இறைவனின் பேரன்பு குறித்து மக்களை நம்பிக்கை இழக்கச் செய்து விடக் கூடாது.



அதே சமயத்தில் இறைவனின் தண்டனை பற்றிய அச்சத்தையும் அவன் இதயத்தில் பதியச் செய்ய வேண்டும்.''

ஒரு முறை அவர்களிடம் ஒருவர் வந்து, ''அல்லாஹ்வின் தூதர் அவர்கள், ''பாவ மன்னிப்புக் கோருபவன் இறைவனின் நண்பன் எனக் கூறியிருக்கிறார்களே, அதன் பொருள் என்ன?'' என்று கேட்டார். அதற்கு அவர்கள், ''ஒரு நண்பன் தன் நண்பன் விரும் பாததை எக்காரணம் கொண்டும் செய்ய முன் வர மாட்டான். அதே போன்று பாவ மன்னிப்புக் கோருபவன் தன் நண்பனான இறைவன் விரும்பாததை எக்காரணம் கொண்டும் செய்ய முன்வரக்கூடாது!'' என்று பதில் கூறினார்கள்.

இவ்விதம் பதில் அளித்த அவர்கள் பாவமன்னிப்பு பற்றி இந்த விளக்கம் வழங்கியிருக்கிறார்கள். ''பாவ மன்னிப்புக் கோருவதில் குறிப்பாக இரு பயன்கள் இருக்கின்றன. ஒன்று, பாவ மன்னிப்புக் கோருவதால் குற்றம் செய்தவன் குற்றம் செய்யாதவனாக மாறுகிறான். இரண்டாவது, இறையன்மையைப் பெறுவதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கிறது. அதனால் அவன் இறைவனின் நண்பனா கிறான்.''

ஒரு முறை அவர்களிடம் ஒருவர் வந்து, ''பாவ மன்னிப்பு என்பது என்ன?'' எனக் கேட்டார். அவருக்கு அவர்கள், ''பாவ மன்னிப்பு என்பது ஆறு விஷயங்களுக்குக் குறிப்பிடப்படுகிறது. ஒன்று, செய்த பாவத்திற்காக வருந்திக் கண்ணீர் விடுதல். இரண் டாவது, தவறிப் போன பர்லான கடமைகளைத் திரும்பச் செய்து நிறைவேற்றுதல், மூன்றாவது, அநியாயமாக எடுத்தவற்றைத் திரும்பக் கொடுத்தல், நான்காவது நஃப்ஸைப் பாவத்தில் வளர்த்தது போல் அதனை வணக்கத்தில் கரைத்தல், ஐந்தாவது, பாவத்தில் இன்பத்தைச் சுவைக்கச் செய்தது போல் வணக்கத்தின் கைப்பையும் சுவைக்கச் செய்தல். ஆறாவது, சிரித்த ஒவ்வொரு சிரிப்பிற்காகவும் அழுதல்.''

இவ்விதம் பதில் பகர்ந்த அவர்கள் பாவமன்னிப்பு பற்றி இந்த விளக்கத்தையும் ஈந்திருக்கிறார்கள்: ''மனிதர்கள் எல்லா நேரங் களிலும் இறைவனோடு தொடர்பு கொண்டிருக்க வேண்டும். ஒவ்வொரு செயலையும் இறை நினைப்புடனேயே செய்ய வேண்டும். ஏதேனும் தவறு செய்து விட்டால் உடனே இறைவனி டம் பாவமன்னிப்புக் கோர வேண்டும். 'இறைவனே! நான் தவறி

ழைத்து விட்டேன். என்னை மன்னித்தருள்!'' என இறைஞ்ச வேண்டும். பின்னர், 'ஏகனே! உணர்ச்சியைக் கட்டுப்படுத்தி, உள்ளத்தைத் தூய்மைப்படுத்தும் ஆற்றலைத்தந்தருள்!' எனப் பிரார்த்திக்க வேண்டும். அதில் வெற்றி கண்டு விட்டால், 'நாயனே ! நான் புரியும் நன்மையான காரியங்கள் அனைத்தையும் ஏற்றுக்கொள்!' என மன்றாடவேண்டும்.

ஒரு சமயம் அவர்களிடம் நாத்திகன் ஒருவன் வந்து, 'மறுமை என்பது இல்லவே இல்லை!'' என வாதிட்டான். அவன் கூறியதை யெல்லாம் கேட்டுவிட்டு அவர்கள், ''மறுமை இல்லை என்று நீ வாதிப்பது போல் மறுமை இல்லாதிருந்தால் நீயும் தப்பித்துக் கொள்வாய். நானும் தப்பித்துக் கொள்வேன். நான் சொல்வது போல் மறுமை இருந்து விட்டால் நான் தப்பித்துக் கொள்வேன். நீ மாட்டிக் கொள்வாய்!'' என்று கூறினார்கள். அவர்களின் அறிவார்ந்த இந்த விளக்கத்தைக் கேட்டதும் நாத்திகன் மறுமையை நம்புவதே நல்லது என்னும் முடிவிற்கு வந்தான்.

ஒரு நாள் அவர்களிடம் ஒருவர் வந்து, தாம் ஒரு வீடு வாங்கப் போவதாயும் அதற்குக் கிரயப்பத்திரம் அவர்கள்தாம் எழுதித்தர வேண்டும் என்றும் கோரினார். அவரிடம் அவர்கள், ''நான் சொல்கிறேன். (அதை) முதலில் நீர் கேட்டுக்கொள்ளும்! ஏமாற்றமடைந்த ஒருவன் ஏமாற்றமடைந்த ஒருவரிடமிருந்து நிரந்தரமில்லாததும் உரிமையில்லாததும் நிரந்தரமில்லாதவனுடையதுமான வீட்டை வாங்கினான். அதுவோ அசட்டையாளர்களின் வீதியில் இருக்கிறது. அதன் முதல் எல்லை மௌத், இரண்டாவது எல்லை கப்ரு, மூன்றாவது எல்லை ஹஷ்ர், நான்காவது எல்லை சுவர்க்கமா, நரகமா என அறியப்படாத நிலை!'' என்று கூறினார்கள். இதைக் கேட்டதும் அந்த மனிதர் வீடு வாங்கும் எண்ணத்தை விட்டுவிட்டு அழுது கொண்டே அங்கிருந்தும் அகன்றார்.

ஒருநாள் அவர்கள் குமைல் என்பவருடன் சென்று கொண்டிருந்தார்கள். அவர்கள் சென்ற வழியில் கப்ருஸ்தான் ஒன்று காணப்பட்டது. அதைக் கண்டதும் அவர்கள் கப்ராளிகளைப் பார்த்து, 'மனித சஞ்சாரமற்ற உலகில் வாழ்பவர்களே! வெறுமையும், தனிமையும் உடையவர்களே! உங்களின் நிலைமை என்ன? உங்களுக்குப் பின் உங்களின் நிலங்கள் பங்கிடப்பட்டு விட்டன. உங்களின் குழந்தைகள் அநாதைகளாகி விட்டனர். உங்களின் மனைவிமார்கள் வேறு ஆடவர்களை மணந்து கொண்டு விட்டனர். உங்களின் செய்தி என்ன? உங்களின் நிலைமையை எங்களுக்குத் தெரிவியுங்கள்!'' என்று கூறினார்கள். அதன் பின் குமைலைப் பார்த்து, ''அவர்கள் கூற இயன்றிருக்குமாயின் இதைத்தான் கூறியிருப்பார்கள் ; 'மறு உலகிற்கான கட்டுச் சோறு தக்வா என்னும் பத்திய வாழ்க்கையாகும். அமலின் பெட்டகம் கப்ர் ஆகும். அப்பெட்டகத்திற்குள் என்ன இருக்கிறது என்று இறப்பிற்குப் பிறகுதான் தெரியவரும்,' என்று கூறி அழுதார்கள்.



ஒருநாள் அவர்கள் நாள் முழுவதும் வேலை செய்து இரண்டு திர்ஹம் கூலி பெற்றுக் கொண்டு மாலையில் வீடு திரும்பினார்கள். அப்பொழுது அவர்கள் தம் வீட்டு வாயிலில் ஒரு பக்கீர் உட்கார்ந்திருப்பதைக் கண்டார்கள். அவர் தம்மிடம் உதவி எதிர்பார்த்து வந்திருக்கிறார் என்பதை உணர்ந்து கொண்டு அவர்கள் தம்மிடமிருந்த இரு திர்ஹம்களில் ஒரு திர்ஹத்தை எடுத்து அவரிடம் கொடுத்தார்கள். அதனைப் பெற்றுக் கொண்டு அவர் அதனைத் திருப்பித் திருப்பிப் பார்த்தார்கள். ''ஏதாவதொன்றை விற்றுப் பெற்றவர் போல் பார்க்கிறீரே! எதையாவது விற்றுவிட்டீரா?'' என்று அவர்கள் அவரைப் பார்த்துக் கேட்டார்கள். ''ஆம், என் இஸ்ஸத்தை (கௌரவத்தை) விற்றுவிட்டேன்!'' என்றார் அவர். உடனே தம்மிடமிருந்த அடுத்த திர்ஹத்தையும் எடுத்துக் கொடுத்துவிட்டு, அவர்கள், ''உம் இஸ்ஸத்திற்குத் தகுந்த விலை கொடுக்க என்னால் இயலவில்லை!'' என்றார்கள்.

ஒரு நாள் அவர்கள் வேகமாகத் தொழுகைக்குச் சென்று கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஒருவர் அவர்களை வழி மறித்து, ''குட்டி போடும் பிராணிகள் எவை? முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் பிராணிகள் எவை?'' என்று கேட்டார். ஓடும் ஓட்டத்திலேயே அவர்கள், ''எந்தப் பிராணிகளுக்குச் செவி வெளிப்புறமாக இருக்கிறதோ அவை குட்டிபோடும். எவற்றிற்குச் செவி உட்புறமாக இருக்கிறதோ அவை முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும்!'' என்று கூறிவிட்டுப் பள்ளிக்கு விரைந்தார்கள்.

ஒரு நாள் அவர்களிடம் அண்ணலின் தோழர்களில் ஒருவர், ''கிழக்கு மேற்கு இரண்டிற்கும் எவ்வளவு தொலை?'' என்று கேட்டார். அவருக்கு அவர்கள், ''ஒரு நாளில் கதிரவன் எவ்வளவு தொலை கடக்கிறதோ அவ்வளவு தொலை!'' என்று கூறினார்கள்.

ஒரு நாள் அவர்களிடம் ஒருவன் வந்தான். அவர்களால் பதில் சொல்ல முடியாத கேள்வி கேட்க வேண்டும் என்று எண்ணியோ என்னவோ, ''மனிதன் சுதந்திரமானவனா அல்லது சார்புள்ளவனா?'' என்று அவர்களைப் பார்த்துக்கேட்டான். ''உன்னுடைய ஒரு காலைத் தூக்கிக் கொண்டு நில்!'' என்று அவர்கள் அவனிடம் கூறினார்கள். அவ்விதமே நின்றான் அவன். ''உன்னுடைய மற்றொரு காலையும் தூக்கு!'' என்றார்கள் அவர்கள். ''அது எப்படி முடியும்?'' என்று கேட்டான் அவன். ''இதைப் போன்றதே சுதந்திரம் சார்பு என்பதற்கு விளக்கம்!'' என்று அவர்கள் கூறினார்கள்.

ஒரு நாள் அவர்களிடம் யூதன் ஒருவன் வந்தான். அவர்களின் அறிவுத்திறனைச் சோதிக்கவேண்டும் என்னும் ஆசையில் அவன் அவர்களிடம் இவ்விதம் சவால் விட்டான் : ''ஒன்று முதல் ஒன்பது வரையுள்ள எண்களினால் மீதமின்றி வகுபடக் கூடிய எண்ணை உம்மால் கூறமுடியுமா?'' அதைக் கேட்டதுமே அவர்கள், ''மாதத் தின் நாட்கள் எண்ணிக்கை 30. வாரத்தின் நாட்கள் எண்ணிக்கை 7. மாதங் களின் எண்ணிக்கை 12. இவற்றைப் பெருக்கினால் வரும் விடை எதுவோ அதுவே உன் கேள்விக்கான விடை,'' என்று கூறினார்கள்.

அவர்கள் கூறியபடி யூதன் பெருக்கிப் பார்த்தான். 2520 வந்தது. அதை ஒன்றாலும், இரண்டாலும், மூன்றாலும், நான்காலும், ஐந்தாலும், ஆறாலும், ஏழாலும், எட்டாலும், ஒன்பதாலும் வகுத்துப்பார்த்தான். அவர்களின் அறிவுக் கூர்மை கண்டு வியந்து அக்கணமே முஸ்லிமானான்.

ஒரு சமயம் பெண் ஒருத்தி அவர்களிடம் அலறிக் கொண்டு ஓடிவந்தாள். ''என் குழந்தைகளில் ஒன்று தண்ணீர்க்குழாய் மீது ஏறிக்கொண்டு விட்டது. நான் அழைத்தால் அது வர மாட்டேன் என்கிறது. அதை அப்படியே விட்டு விட்டால் அது கீழே விழுந்து விடுமோ என எனக்கு அச்சமாயிருக்கிறது. 'ஆபத்து, வந்து விடும்!' என்று கூறினால், அதைப் புரிந்து கொள்ளக் கூடிய வயதும் அதற்கில்லை. சைக்கினை காட்டினால் அதையும் அதனால் புரிந்து கொள்ள இயலவில்லை. பலமுறை நான் அதற்குப் பாலைக் காட்டினேன். அது தன் முகத்தைத் திருப்பிக் கொண்டு விடுகிறது. அல்லாஹ்வுக்கு வேண்டி இதற்கு ஒரு பரிகாரம் செய்யுங்கள்! அளவற்ற கவலையால் என்மனம் நடுங்கிக் கொண்டிருக்கிறது!'' என்று அழுது கொண்டே கூறினாள் அவள்.



அவளைப் பார்த்து அவர்கள், ''கூரைவரை இன்னொரு குழந்தையைக் கொண்டு செல்லுங்கள்! தன்னைப் போன்ற பிள்ளையைப் பார்க்கும் போது அந்தக் குழந்தை இந்தக் குழந்தையின் பக்கம் வந்துவிடும்!'' என்று கூறினார்கள். அவ்விதமே செய்யப் பட்டது. குழாய் மீது இருந்த குழந்தை இந்தக் குழந்தையைக் கண்டதும் கூரைக்குத் தவழ்ந்து வந்து விட்டது.

ஒரு நாள் அவர்கள் வெளியில் புறப்படுவதற்காகத் தம் கோவேறு கழுதை மீது ஏறப்போனார்கள். அப்பொழுது அங்கு ஒரு பெண் வந்தாள். ''என் உடன் பிறந்தவன் இறந்து விட்டான். அவன் இறக்கும் போது அறு நூறுதிர்ஹம் சொத்து விட்டுச் சென்றான். அதில் என் பங்கு ஒரு திர்ஹம்தானா?'' என்று அவள் கேட்டாள்.

உடனே அவர்களின் அறிவு மின்னலென வேலைசெய்தது. ஒருவனுக்குத் தங்கையான இவள் ஒரு திர்ஹம் பங்குபெற வேண்டு மானால் இவளுடன் யார் யார் பங்குதாரர்களாய் இருக்கவேண்டும் என ஊகித்துக் கொண்டு, அக்கணமே அவர்கள் இவ்விதம் பதில் அளித்தார்கள். ''உன் உடன் பிறந்தான் அறுநூறு திர்ஹம்களையும் இரு பெண் மக்களையும், தன் தாயையும், மனைவியையும், பன்னிரண்டு சகோதரர்களையும், உன்னையும் விட்டுச் சென்றான். அந்த அறுநூறு திர்ஹம்களில் இரண்டு பெண் மக்களும் அல்லாஹ் சொல்லிபபடி நானூறும், தாய்க்கு நூறும், மனைவிக்கு எழுபத்தைந்தும் சகோதரர்கள் பன்னிரண்டு பேர்களுக்கும் இருபத்து நான்கும், உனக்கு ஒரு திர்ஹமும் வருகின்றன!''

ஒரு நாள் சிலர் அவர்களிடம் வந்து, ''யானை ஒன்றின் எடையை அறிந்து கொள்ளவேண்டும். அதற்கு என்ன செய்யலாம்?'' என்று கேட்டனர். அவர்களிடம் அவர்கள், ''அந்த யானையைக் கப்பலில் ஏற்றுங்கள்! யானையை ஏற்றியதும் கப்பல் கடலில் எவ்வளவு அமிழ்ந்தது என்பதைக் குறித்துக் கொள்ளுங்கள்! பிறகு, யானையைக் கப்பலை விட்டும் இறக்குங்கள்! யானை கப்பலில் இருந்தபோது அமிழ்ந்த அளவு கப்பலில் கற்களைப் போடுங்கள். அந்தக்கற்களை நிறுத்துப் பாருங்கள்! அதுதான் யானையின் எடை!'' என்று கூறினார்கள்.

ஒரு நாள் அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு அன்பளிப்பாகப் பேரீத்தம் பழங்கள் வந்தன. தமக்கு அன்பளிப்பாக வரும் எதனையும் அங்கேயே பங்கிட்டுக் கொடுத்து விடுவது அவர்களின் வழக்கம்.

எனவே அவர்கள் தம் அருகில் அமர்ந்திருந்த மருகர் அலீ (ரலி) அவர்களிடம் அந்தப் பழங்களைப் பங்கிட்டுக் கொடுக்கும்படி கூறினார்கள். அலீ (ரலி) அவர்கள், ''அல்லாஹ் கொடுப்பது போல் கொடுக்கவா?'' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் கேட்டனர். ''அல்லாஹ் கொடுப்பது போல் கொடும்!'' என்று அவர்கள் கூறினார்கள்.

அடுத்த கணம் அலீ (ரலி) அவர்கள் அங்கிருந்தவர்களுக்குப் பழங்களைக் கொடுக்க ஆரம்பித்தார்கள். ஒருவருக்கு இரண்டு பழங்கள் கொடுத்தார்கள். அடுத்தவருக்கு ஐந்து பழங்கள் கொடுத்தார்கள். அடுத்திருந்தவருக்கு இருபது பழங்கள் கொடுத்தார்கள். அவருக்கு அடுத்திருந்தவருக்கு இருபத்தைந்து பழங்கள் கொடுத்தார்கள். இப்படியே எல்லாப் பழங்களையும் கொடுத்து முடித்து விட்டார்கள். இது அங்கிருந்தவர்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தி விட்டது. ''என்ன, அலீ இப்படி ஒருவருக்கு ஒருவிதமாய் மற்றவருக்கு மறுவிதமாய்ச் செய்துவிட்டார்!'' என்று ஒருவருக் கொருவர் பேசிக் கொள்ள ஆரம்பித்து விட்டார்கள். அண்ணல் நபி (ஸல்) அவர்களும், 'என்ன, இப்படிச் செய்து விட்டீர்?' என்று கேட்பதுபோல் அலீ (ரலி) அவர்களை ஏறிட்டுப் பார்த்தார்கள். அந்தப் பார்வையின் பொருளை அறிந்து கொண்டு அலீ (ரலி) அவர்கள், ''தாங்கள் தாமே அல்லாஹ் பங்கிடுவது போல் பங்கிடச் சொன்னீர்கள். அல்லாஹ் இவ்விதம் தானே பங்கிடுகிறான்!'' என்று கூறினார்கள்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் காலமானபின் யூதன் ஒருவன் கலீபா அபூபக்ர் (ரலி) அவர்களிடம் வந்து, ''அல்லாஹ் அறியாதது எது? அல்லாஹ்வுக்கு இல்லாதது எது? அல்லாஹ்விடத்தில் இல்லாதது எது? அவற்றை எனக்குக் கூறவேண்டும்!'' என்றான். அதைக் கேட்டதும் கலீபா அபூபக்ர் (ரலி) அவர்கள், ஆத்திர மடைந்து, ''இது இறை மறுப்பவனின் (சித்தீக்) பேச்சு!'' என்று கூறினார்கள். அங்கிருந்த முஸ்லிம்களில் சிலர் அந்த யூதனை அடிக்கக் கிளம்பினர். அவர்களை அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் தடுத்து, ''உங்களிடம் அவர் கேள்விக்குப் பதில் இருந்தால் சொல்லுங்கள்! இல்லையேல் அவருக்குப் பதில் பகரக் கூடியவரிடம் செல்லுங்கள்!'' என்று கூறினர். அத்துடன் அவர்கள் அல்லாஹ்வின் தூதர் அவர்கள் அலீ அவர்களின் இதயத்திற்குப் பலத்தையும், நாவிற்கு உறுதியையும் அளிக்குமாறு இறைஞ்சியதைத் தாம் கேட்டதாயும் அறிவித்தனர்.



கலீபா அபூபக்ர் (ரலி) அவர்களும் அங்கிருந்த முஸ்லிம்களும், அந்த யூதரும் அலீ (ரலி) அவர்களிடம் சென்றார்கள். அந்த யூதர் விடுத்த வினாக்களைச் சொன்னார்கள். அதைக் கேட்டு அலீ (ரலி) அவர்கள், ''யூதரே! அல்லாஹ்வின் புதல்வர் ஆவார் உஜைர் என்கிறீர் கள் நீங்கள். அல்லாஹ் அறியாதது தனக்கு ஒரு புதல்வர் இருப்பதை. அல்லாஹ்வுக்கு இல்லாதது, அவனுக்கு இணையானது. அல்லாஹ் விடம் இல்லாதவை அநியாயம், இயலாமை!'' என்று கூறினார்கள்.

உமர் (ரலி) அவர்கள் கலீபாவாக இருந்தபோது, ஒருவர் அவர்களிடம் வந்து, ''நான் பித்னாவை (குழப்பத்தை) நேசிக்கிறேன். ஹக்கை (உண்மையை) வெறுக்கிறேன். நான் பார்க்காத ஒன்றைப் பற்றிச் சாட்சியம் பகர்கிறேன்!'' என்றார். இது கலீபா உமர் (ரலி) அவர்களுக்கு மார்க்கத்திற்கு முரணான பேச்சாகத் தோன்றியது. அவரை அவர்கள் உடனே காவலில் வைத்து விட்டார்கள். இதை அறிந்ததும் அலீ (ரலி) அவர்கள், கலீபா உமர் (ரலி) அவர்களிடம் வந்தார்கள். ''அவரை நீங்கள் அநியாயமாகக் காவலில் வைத்திருக் கிறீர்கள்!'' என்றார்கள். ''எப்படி?'' என்று கலீபா உமர் (ரலி) அவர் கள் கேட்டனர். அதற்கு அலீ (ரலி) அவர்கள், ''அவர் பொருளையும், பிள்ளைகளையும் நேசிக்கிறார். 'உங்களுடைய பொருள்களும், பிள்ளைகளும் பித்னாதான்!' என அல்லாஹ் கூறுகிறான். அவர் இறப்பை வெறுக்கிறார். இறப்பு ஹக்கு (உண்மை) ஆனது. 'இறப்பின் மயக்கம் உண்மையைக் கொண்டு வந்து விட்டது' என அல்லாஹ் சொல்கிறான். மேலும் அவர் பார்க்காத ஒன்றைப் பற்றிச் சாட்சியம் பகர்கிறார். அல்லாஹ் ஒருவன் என அவர் சாட்சியம் பகர் கிறார். அவர் அல்லாஹ்வைப் பார்த்ததில்லை!'' என்று கூறினார்கள். அலீ (ரலி) அவர்கள் அளித்த இந்த அறிவார்ந்த விளக்கத்தைக் கேட்டதும் கலீபா உமர் (ரலி) அவர்கள் உடனே அந்த மனிதனை விடுவிக்கும்படி உத்தரவு இட்டு விட்டு, ''அலீ இல்லாதிருந்தால் உமர் அழிந்திருப்பார்!'' என உரைத்தார்கள்.

உமர் (ரலி) அவர்கள் கலீபாவாக இருந்தபோது, அவர்களிடம் ஒரு பெண் அழைத்து வரப்பட்டாள். அவள் மணம் புரிந்து ஆறுமாதம் ஆவதற்குள் பிள்ளை ஒன்றைப் பெற்றெடுத்திருந்தாள். 'அவளைக் கல் எறிந்து கொல்லுங்கள்!'' என உடனே உத்தரவிட் டார்கள், கலீபா உமர் (ரலி) அவர்கள். அதை அறிந்ததும் அலீ (ரலி) அவர்கள் கலீபா உமர் (ரலி) அவர்களைக் கண்டு அவர்களிடம் திருமறை வசனம் ஒன்றைக் கூறினார்கள். அதில் கருத்தரித்துக்

குழந்தை பெறும் காலம் இரண்டு ஆண்டுகளும் ஆறு மாதங்களும் என்னும் கருத்திருந்தது. அத்துடன் அலீ (ரலி) அவர்கள் திருமறை வசனம் இன்னொன்றையும் சொன்னார்கள். அதில் ஒரு பெண் தன் குழந்தைக்கு இரண்டு ஆண்டுகள் பால் கொடுக்க வேண்டும் என்னும் கருத்திருந்தது. இந்த இருவசனங்களையும் ஆதாரமாகக் கொண்டு அலீ (ரலி) அவர்கள் கருத்தரித்து இருக்கும் மிகக் குறுகிய காலம் எனக் கணக்கிட்டு அந்தப் பெண்ணைத் தகுந்த ஆதாரமின்றித் தண்டிக்கக் கூடாது என்று கூறினார்கள். அந்த விளக்கத்தை அக்கணமே ஏற்றுக் கொண்டு கலீபா உமர் (ரலி) அவர்கள், ''அலீ மட்டும் இல்லாதிருந்தால் உமர் அழிந்திருப்பார்!'' என உரைத்தார்கள்.

உமர் (ரலி) அவர்கள் கலீபாவாக இருக்கும் போது அவர்களிடம் கிறிஸ்தவ மத குருமார்கள் மூவர் வந்தனர். கலீபா உமர் (ரலி) அவர்களைப் பார்த்து, ''ஒரு புதைகுழி ஒரு பிரேதத்தைச் சுமந்து கொண்டு சுற்றித் திரிகிறது. இது என்ன? இதற்கு நீர் சரியான விடை அளிக்கவில்லையாயின் நாங்கள் அளிக்கிறோம். நீர் எங்களுடைய மார்க்கத்தை உண்மையான மார்க்கம் என ஏற்றுக் கொள்கிறீரா?'' என எகத்தாளமாகக் கேட்டனர்.

உடனே கலீபா உமர் (ரலி) அவர்களால் அதற்குச் சரியான விடை அளிக்க இயலவில்லை. அது பற்றி அவர்கள் சிந்தித்துக் கொண்டிருக்கும் போது அங்கு அலீ (ரலி) அவர்கள் வந்தார்கள். கிறிஸ்தவ மத குருமார்கள் கேட்ட கேள்வியைத் தெரிந்து கொண்டு, ''நல்லது, நான் உங்களின் வினாவுக்குச் சரியான விடை அளிப்பின் நீங்கள் எங்களின் மார்க்கத்தை உண்மையான மார்க்கம் என ஒப்புக் கொள்வீர்களா?'' எனக் கேட்டார்கள். அதற்குக் கிறிஸ்தவ மதகுருமார்கள் உடன்படவே, 'நபி யூனுஸ் (அலை) அவர்களையும், அவர்களைத் தன் வயிற்றில் சுமந்து திரிந்த மீனையுமே உங்களின் கேள்வி குறிக்கும்!'' என அலீ (ரலி) அவர்கள் கூறினார்கள். அதைக் கேட்டதும் மூவரில் இருவர் உடனே இஸ்லாத்தைத் தழுவினர். மூன்றாமவர் குகைவாசிகளைப் பற்றி வினவினர். அதற்கு அலீ அவர்கள் அளித்த விடையை அறிந்ததும் அவரும் இஸ்லாத்தில் இணைந்தார்.

ஒரு சமயம் அலீ (ரலி) அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்தனர். அவர்களைக் கண்டு உடல்நலம் கேட்க அவர்களின் வீட்டிற்கு



அபூபக்ர் (ரலி), உமர் (ரலி), உதுமான் (ரலி) ஆகிய மூவரும் வந்திருந்தனர். அவர்கள் அனைவருக்கும் அருந்துவதற்கு ஏதாவது அளிக்கவேண்டும் என அலீ (ரலி) அவர்களின் மனம் விரும்பியது. அப்பொழுது வீட்டில் கொஞ்சம் தேன் இருப்பது அவர்களின் நினைவிற்கு வந்தது. அதனை அவர்கள் ஒரு தட்டில் ஊற்றி அம்மூவர் முன் வைத்தார்கள். தேனில் எப்படியோ ஒரு முடிவிழுந்து அதில் மிதந்து கொண்டிருந்தது. அதைப் பார்த்து, ''சன்மார்க்கம் இந்தத் தட்டை விடப் பிரகாசமானது. இறைவனின் பெயரை ஜெபிப்பது தேனினும் சுவையானது. மார்க்க சட்டதிட்டங்களின் வரம்பு முடியினும் மிருதுவானது!'' என அபூபக்ர் (ரலி) அவர்கள் அறிவித்தார்கள். ''சுவர்க்கம் இந்தத் தட்டைவிடப் பிரகாசமானது. அதிலிருக்கும் சுகம் தேனை விட இனிமையானது. சிராத் என்னும் பாலம் முடியினும் மிருதுவானது!'' என உமர் (ரலி) அவர்கள் உரைத்தார்கள். ''திருமறை இந்தத் தட்டை விடப் பிரகாசமானது. அதனை ஓதுவது தேனைவிடச் சுவையானது. அதற்கு விளக்கம் செய்வது முடியினும் நுண்மையானது!'' என உதுமான் (ரலி) அவர்கள் சொன்னார்கள். உடல் நலம் குன்றியிருந்தாலும் அறிவு நலம் அணுவளவும் குன்றியிராத அலீ (ரலி) அவர்கள், ''விருந்தினர்கள் இந்தத் தட்டைவிடப் பிரகாசமானவர்கள். அவர்களின் சொற்கள் தேனைவிட இனிமையானவை. அவர்களின் உள்ளங்கள் முடியைவிட நுண்மையானவை!'' என்று கூறினார்கள்.

அது அலீ (ரலி) அவர்கள் கலீபாவாக ஆட்சி செய்து கொண்டிருந்த காலம். அப்பொழுது கிறிஸ்தவ சோதிடன் ஒருவன் இருந்தான். அவனுக்கு வருங்காலத்தை அறியும் திறன் உண்டு என்று மக்கள் நம்பினர். அவ்விதம் நம்பியவர்களில் முஸ்லிம்களும் இருந்தனர். இதைக் கலீபா அலீ (ரலி) அவர்கள் அறிந்தார்கள். அவனுக்கு அவ்விதத் திறன் கிடையாது என்பது அவர்களின் அபிப்பிராயம் அதை எண்பிப்பது எப்படி என்று அவர்கள் யோசித்தார்கள். உபாயம் ஒன்று அவர்களுக்கு உடனே தோன்றியது.

அவர்கள் ஒரு விருந்திற்கு ஏற்பாடு செய்தார்கள். அதற்கு அவனை அழைத்தார்கள். இஸ்லாமிய அரசின் கலீபா தம்மை விருந்திற்கு அழைத்ததில் அவனுக்கு அளவற்ற மகிழ்ச்சி. அது தன் திறனை அங்கீகரிப்பதற்கு அடையாளம் என அவன் எண்ணிக் கொண்டான். விருந்தில் ரொட்டி பரிமாறப்பட்டது. அங்கு ஒரு காலிப் பாத்திரம் வைக்கப்பட்டிருந்தது. விருந்தினர்கள் ரொட்டிகளைப்

பிய்க்க ஆரம்பித்தும் அலீ (ரலி) அவர்கள், ''ஒவ்வொருவரும் தம் தம் ரொட்டித் துண்டுகளை அந்தக் காலிப்பாத்திரத்தில் போடுங்கள்!'' என்று கூறினார்கள். அவ்வாறே எல்லோரும் செய்தனர். சோதிடனும் செய்தான். ''எதற்காகக் கலீபா இப்படிக் கூறினார்கள்?'' என எவருக்கும் தெரியவில்லை. ஆனால் அதில் ஏதோ விஷயம் இருக்கிறது என எல்லோர் மனமும் கூறியது.

இப்பொழுது அலீ (ரலி) அவர்கள் சோதிடனைப் பார்த்து, ''உன் ரொட்டித் துண்டை மட்டும் தனியாக எடு!'' என்று கூறினார்கள். சோதிடன் திகைத்தான். ''இவற்றில் என் துண்டு எது என்று எப்படி எனக்குத் தெரியும்?'' எனத் திக்கினான். இந்த சந்தர்ப்பத்தையே எதிர்பார்த்துக் கொண்டிருந்த அலீ (ரலி) அவர்கள், ''ஒரு ரொட்டித் துண்டு, அதுவும் உன் கையால் இப்பொழுது தான் வீசப்பட்டு இதோ இந்தப் பாத்திரத்தில் நிச்சயமாகக் கிடக்கிறது. அதையே கண்டு பிடிக்க முடியாத நீ இதுவரை தோன்றாத இனிமேல்தான் தோன்றக் கூடிய எதிர்காலத்தைப் பற்றியும், அதில் நிகழப் போவதைப் பற்றியும் தெரியும் என்று தம்பட்டம் அடித்துக் கொள்வது நியாயமா?'' என்று கேட்டு அவனை மட்டம் தட்டினார்கள்.

ஒரு நாள் அவர்கள் தம் ஊழியனை அழைத்து, ''பள்ளியருகில் இருக்கும் வீட்டில் ஓர் ஆணும், பெண்ணும் சதாசண்டை போட்டுக் கொண்டே இருக்கிறார்கள். அவர்களை அழைத்து வா!'' என்றார்கள். அவ்வாறே அவர்களை ஊழியன் அழைத்து வந்தான். அந்த ஆணைப் பார்த்து அலீ (ரலி) அவர்கள், ''ஏன் இரவு முழுதும் சண்டை போட்டுக் கொண்டிருக்கிறீர்கள்?'' என்று கேட்டார்கள்.

''அவளை நான் மணம் செய்து கொண்டேன். ஆனால் அவள் முகத்தைப் பார்த்ததிலிருந்து அவள் மீது எனக்கு (ஒரே) வெறுப்பாக இருக்கிறது. எனக்குச் சக்தியிருந்தால் அவளை விலக்கி விடுவேன்!'' என்றான் அவன். அந்தப் பெண்ணைப் பார்த்து அலீ (ரலி) அவர்கள், ''நீ இன்னார்தானே? இன்னார் மகள்தானே?'' என்று கேட்டார்கள். ''ஆம்,'' என்றாள் அவள்.

''ஒரு முறை நீ வெளியே சென்ற போது உன் சிறிய தந்தையின் மகன் உன்னை நெருங்கினான். அதனால் நீ கர்ப்பவதியானாய், ஒரு குழந்தையையும் பெற்றாய். அப்பொழுது அங்கு ஒரு நாய் வந்தது. அதனை விரட்ட நீ ஒரு கல்லை எடுத்து எறிந்தாய். அது குழந்தையின் தலையில் பட்டு இரத்தம் வந்தது. அந்த இடத்தை உன் முன்றானை



யால் கட்டினாய்!'' என்று அலீ (ரலி) அவர்கள் கூறி விட்டு, அந்த ஆளைப் பார்த்து, ''உன் தலைப்பாகையை அவிழ்!'' என்றார்கள். அவ்வாறே அவன் தலைப்பாகையை அவிழ்த்தபோது, அவன் தலையில் காயம் ஒன்றின் தழும்பு இருப்பது தெரிந்தது. அப் பொழுது அவர்கள் அவளைப் பார்த்து, ''அவன் உன் மகன். இன்னொரு பாவத்திலிருந்து இறைவன் உன்னைக் காத்தான்!'' என்று கூறினார்கள்.

ஒரு நாள் அபூபக்ர் (ரலி), உமர் (ரலி), அலீ (ரலி) ஆகிய மூவரும் தெருவழியே போய்க்கொண்டிருந்தனர். அவர்கள் போவதைப் பார்த்த அப்துல்லாஹ் இப்னு உபை தன் தோழர்களிடம், ''இதோ வருகின்ற மூடர்களுடன் நான் தந்திரமாகப் பேசி அவர்களுக்கு ஏற்படுகின்ற சந்தேகத்தை எப்படிப் போக்குகிறேன், பாருங்கள்!'' என்று புகன்றுவிட்டு, முதலில் அபூபக்ர் (ரலி) அவர்களின் கையைப் பிடித்துக் கொண்டு அவர்களை அதிகம் புகழ்ந்தான். பிறகு உமர் (ரலி) அவர்களின் கையைப் பிடித்துக் கொண்டு அவர்களை அவ்வாறே புகழ்ந்தான். பிறகு அலீ (ரலி) அவர்களின் கையைப் பிடித்துக் கொண்டு, அவர்களை அவ்விதமே புகழ்ந்தார்கள். அலீ (ரலி) அவர்கள் அவனுடைய நயவஞ்சகத்தைப் புரிந்து கொண்டு அவனிடம் இவ்விதம் கூறினர்: ''நீர் அல்லாஹ்வுக்கு அஞ்சிக் கொள்ளும்! நயவஞ்சகத்தனம் செய்யாதீர்! நயவஞ்சகம் செய்பவர் அல்லாஹ்வின் படைப்புகளில் மிகவும் கெட்டவர்.''

இவ்விதம் எந்தக் கேள்விக்கும் பதில் அளித்த அவர்கள் தம்மிடம் எவ்விதக் கேள்விகள் கேட்கப்படவேண்டும் என விரும்பினார்கள் என்பதற்கு இந்தச் சம்பவம் சான்று: ஒரு நாள் அவர்கள் கூபாப்பள்ளியில் குத்பாப் பேருரை நிகழ்த்தும் போது, ''எனக்கு அந்திம காலம் வந்து விட்டது. நீங்கள் கேட்க வேண்டியதை என்னிடம் கேட்டுக் கொள்ளுங்கள்!'' என்று கூறினார்கள். அவர்களின் அசாதாரண அறிவு எத்தனையோ முறை எண்பிக்கப் பட்ட பிறகும் ஒருவருக்கு அதில் ஐயம் வந்து விட்டதோ என்னவோ! கேட்டார் ஒரு கேள்வியை, ''என் தலையிலுள்ள உரோமங்கள் எத்தனை?'' என்று. அதைக் கேட்டதும் அவர்கள், ''நான் கூறினால் (அது சரிதானா என்று) அவற்றை உம்மால் எண்ணிப் பார்க்க இயலுமா?'' என வினவினார்கள். ''முடியாது'' என்று அவர் தலையை அசைத்ததைப் பார்த்து, ''நான் சொல்வது உண்மைதானா என்று சரிபார்க்க இயலாத கேள்விகளை என்னிடம் கேட்காதீர்கள்!'' என்று கூறினார்கள்.

அலீ (ரலி) அவர்கள் அளித்த தீர்ப்புகளும் அவர்களின் அறிவுத் திறனுக்கு ஆதாரமாய் இருந்து கொண்டிருக்கின்றன. அவர்களின் அறிவான தீர்ப்புகள் அண்ணல் நபி (ஸல்) அவர்களாலும் மற்றவர் களாலும் பாராட்டப்பட்டிருக்கின்றன. ''என் தோழர்களில் அலீயே சிறந்த நீதிபதி!'' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினர். ''அலீயின் முடிவுகள் மிகவும் ஆதார பூர்வமானவை!'' என்று அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத் (ரலி) அவர்கள் அறிவித்தனர். அலீ இல்லாதிருப்பின் நாம் மார்க்கத் தீர்ப்பு அளிப்பதில் தவறியிருப் போம் என்று பொருள்படும், ''லௌலா அலீ ஹலக்னாஃபீப(த்) தாவானா'' என்னும் பழமொழியே ஏற்பட்டது. முஆவியா (ரலி) கூட மிகவும் குழப்பமான சட்டப் பிரச்சினைகளை அலீ (ரலி) அவர்களிடமே கேட்பதுண்டு. ''அலீ அவர்களின் தீர்ப்பு (ஃபத்வா) கிடைத்து விட்டால் எனக்கு வேறொரு ஆதாரம் தேவைப்படாது!'' என்று அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறினர். இந்த அருந்திறன் அலீ (ரலி) அவர்களுக்கு எப்படி வந்தது என ஆச்சரியப் படலாம். இப்படித்தான் வந்தது என இந்த நிகழ்ச்சி இயம்புகிறது.

அலீ (ரலி) அவர்களை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் யமன் நாட்டிற்கு நீதிபதியாக அனுப்பிய போது அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களை நோக்கி, ''அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நீதிபதிப் பதவியை நான் அறியாதிருக்கும் போது இளைஞனான என்னை மக்களுக்கிடையில் நீதி பகரும்படி அனுப்புகிறீர்களே!'' என்று கூறினர். அதைக்கேட்டு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அலீ (ரலி) அவர்களின் நெஞ்சில் அடித்து அவர்களைச் சரியான முறையில் இயக்கும்படி இறைவனிடம் இறைஞ்சினார்கள். அத்துடன் இந்த அறிவுரையையும் கூறினார்கள். ''அல்லாஹ் உமக்கு வழி காட்டுவான். உம் பேச்சை ஆற்றலுள்ளதாய் ஆக்குவான். இரு மனிதர்களுக்கிடையே உள்ள ஒரு பிரச்சினையை நீர் தீர்மானிப் பதற்குமுன், இருதரப்பினர் கூறுவதையும் கேட்கும்வரை, எந்த முடிவிற்கும் வந்து விடாதீர். இது விஷயங்களில் சரியான முடிவிற்கு வர (உமக்கு) உதவும்.''

இந்த அறிவுரை அலீ (ரலி) அவர்களுக்கு அதிகம் உதவியது என்பதற்கு ஆதாரம் அவர்களின் இந்த உரை : ''அம்மணிமொழி யினைப் பெற்ற பிறகு நியாயம் வழங்குவதில் நான் ஐயுற்ற தில்லை.''



ஒருமுறை அலீ (ரலி) அவர்களிடம் வினோதமான வழக் கொன்று வந்தது. இரண்டு பிரயாணிகள் தங்களிடம் முறையே 5, 3 ரொட்டிகள் வைத்திருந்தனர். அவற்றை அவர்கள் உண்ணப்போகும் போது அவர்களுடன் இன்னொருவன் வந்து சேர்ந்து கொண்டான். அம்மூவரும் அந்த எட்டு ரொட்டிகளையும் சமமாகச் சாப்பிட் டார்கள். அவர்கள் பிரியும் போது மூன்றாம் மனிதன் தான் தின்ற ரொட்டிகளுக்காக 8 திர்ஹங்கள் கொடுத்தான். 5 ரொட்டிகள் வைத்திருந்தவன் 5 திர்ஹங்கள் தான் எடுத்துக் கொண்டு 3 ரொட்டிகள் வைத்திருந்தவனுக்கு 3 திர்ஹங்கள் கொடுத்தான். 3 ரொட்டிகள் வைத்திருந்தவன் தனக்கு 4 திர்ஹங்கள் தரவேண்டும் எனத் தாவா செய்தான்.

வழக்கைக் கேட்டு விட்டு அலீ (ரலி) அவர்கள் 3 ரொட்டிகள் வைத்திருந்தவனைப் பார்த்து 3 திர்ஹங்கள் பெற்றுக் கொள்ளும்படி கூறினார்கள். ஆனால் அவனோ தனக்கு 4 திர்ஹங்கள் தந்தே ஆகவேண்டும் எனத் தகராறு செய்தான். அலீ (ரலி) அவர்கள் இவ்விதம் தீர்ப்பு அளித்தார்கள். 3 ரொட்டிகள் வைத்திருந்தவன் 1 திர்ஹமும், 5 ரொட்டிகள் வைத்திருந்தவன் 7 திர்ஹங்களும் எடுத்துக் கொள்ளவேண்டும் 8 ரொட்டிகளைச் சமபாகத் துண்டுகளாகப் பிரித்தால் 24 துண்டுகள் வரும். மூவரும் ஆளுக்கு 8 துண்டுகள் வீதம் சாப்பிட்டுள்ளனர். 3 ரொட்டிகள் வைத்திருந்தவன் 9 துண்டுகளில் 8 துண்டுகள் சாப்பிட்டிருக்கிறான். ஒரு துண்டுதான் பாக்கி. 5 ரொட்டிகள் வைத்திருந்தவன் 15 துண்டுகளில் 8 துண்டுகள் சாப்பிட் டிருக்கிறான். 7 துண்டுகள் பாக்கி. மூன்றாமவன் 8 துண்டுகள் சாப்பிட்டுவிட்டு 8 திர்ஹங்கள் கொடுத்துவிட்டான். அதாவது ஒரு துண்டிற்கு ஒரு திர்ஹம் வீதம். எனவே 3 ரொட்டிகள் வைத்திருந்தவன் தான் தின்று விட்டு எஞ்சிய துண்டிற்கு 1 திர்ஹமும் 5 ரொட்டிகள் வைத்திருந்தவன் தான் தின்று விட்டு எஞ்சிய துண்டுகளுக்கு 7 திர்ஹங்களும் பெற்றுக் கொள்ள வேண்டும்.

ஒருமுறை அவர்களிடம் இப்படி ஒரு பிரச்சினை வந்தது. மூன்று பேர் 17 ஒட்டகைகளுடன் வந்து அந்த 17 ஒட்டகைகளில் இரண்டில் ஒரு பங்கு முதலாமவருக்கும் மூன்றில் ஒரு பங்கு இரண்டாம வருக்கும் ஒன்பதில் ஒரு பங்கு மூன்றாமவருக்கும் வருகிறாற் போல் பிரித்துத் தரும்படி கோரினார்கள். ஒட்டகைகளை வெட்டிக் கூறுபோட்டு விடக்கூடாது என்றும் கூறினார்கள்.

அலீ (ரலி) அவர்கள் அரசாங்கப் பொதுநிதியிலிருந்து ஓர் ஒட்டகை கொண்டு வரச்செய்து அதை அந்த 17 ஒட்டகைகளுடன் சேர்த்து நிறுத்தினார்கள். இப்பொழுது அங்கு 18 ஒட்டகைகள் இருந்தன. முதல் நபருக்கு இரண்டில் ஒரு பங்கு அதாவது 9 ஒட்டகைகள் கொடுக்கும்படி கூறினார்கள். இரண்டாம் நபருக்கு மூன்றில் ஒன்று அதாவது 6 ஒட்டகைகள் கொடுக்கச் சொன்னார்கள். மூன்றாம் நபருக்கு ஒன்பதில் ஒன்று அதாவது 2 ஒட்டகைகள் கொடுக்கும்படி கூறினார்கள். இவ்விதம் மூவரும் பெற்றுக்கொண்ட ஒட்டகைகள் 17. அரசாங்கப் பொதுநிதியிலிருந்து கொணரப்பட்ட ஒட்டகை திருப்பி அனுப்பப்பட்டது.

ஒரு முறை அவர்களிடம் இரு பெண்கள் வழக்கொன்று கொண்டு வந்தனர். அவர்கள் இருவருக்கும் ஒரே சமயத்தில் குழந்தைகள் பிறந்தன. ஒருத்தி, ''நான் தான் ஆண் குழந்தை பெற்றேன்!'' என்றாள். மற்றொருத்தி, ''நான் பெற்றதுதான் ஆண்குழந்தை!'' என்று தாவா செய்தாள். குழந்தைகள் மாறிப் போய்விட்டன என அவர்களுக்கு ஏற்பட்ட ஐயத்தால் விளைந்த குழப்பம் இது.

இருவரையும் தனித்தனிப் பாத்திரங்களில் சிறிதளவு பால் பீச்சிக்கொண்டு வரும்படி அலீ (ரலி) அவர்கள் கூறினார்கள். எவள் கொண்டுவந்த பால் சற்றுக் கெட்டியாக இருந்ததோ அவளே ஆண் குழந்தை பெற்றவள் என்றும், எவள் பால் சற்று இளகியதாக இருந்ததோ அவளே பெண் குழந்தை பெற்றவள் என்றும் அவர்கள் தீர்ப்புக் கூறினார்கள்.

ஒரு முறை அவர்களிடம் ஒரு பெண் வந்தாள். தன் சகக் கிழத்தி விபச்சாரம் செய்துவிட்டாள் எனக் குற்றம் சாட்டினாள். அதற்கு ஆதாரமாகச் சகக் கிழத்தியின் ஆடையிலிருந்த பிசுபிசுப்பைக் காட்டினாள்.

அவளைப் பார்த்து அவர்கள் பிசுபிசுப்பாக இருந்த பகுதியைக் கழுவிவிட்டு வரும்படி கூறினார்கள். அவ்வாறே செய்துவிட்டு அவள் வந்ததும், ''அது போய் விட்டதா?'' என்று கேட்டார்கள். ''ஆம்'' என்றாள் அவள். ''கசக்கிப் பிழிந்தபின் போனதா? சாதாரணமாகக் கழுவியதுமே போய் விட்டதா?'' என்று அவர்கள் கேட்டார்கள். ''சாதாரணமாகக் கழுவியதுமே போய் விட்டது,'' என்று அவள் கூறினாள். அது முட்டைப் பசை, விந்து அல்ல. விந்து பல முறை கழுவினால்தான் போகும்!'' என்று அவர்கள் கூறினார்கள்.



ஒரு சமயம் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் வழக்கொன்று வந்தது. அப்பொழுது அவ்விடத்தில் அலீ (ரலி) அவர்களும் இருந்தனர். வழக்குக் கூற வந்தவர்கள் இருவர். வாதியாக வந்தவர், பிரதிவாதியைச் சுட்டிக்காட்டி, ''அவரிடம் ஒரு மாடு இருந்தது. என்னிடம் ஒரு கழுதை இருந்தது. அவரின் மாடு என் கழுதையை முட்டி மோதியது. அதனால் என் கழுதை செத்துவிட்டது!'' என்று கூறினார்.

அது கேட்டு அங்கிருந்த ஒருவர், ''பிராணிகள் மீது என்ன குற்றம் இருக்கிறது?'' என்றார். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அலீ (ரலி) அவர்களைப் பார்த்தனர். உடனே அலீ (ரலி) அவர்கள், ''அந்தக் கழுதையும், மாடும் கட்டப்பட்டிருந்தனவா? அல்லது இரண்டில் ஒன்றுதான் கட்டப்பட்டிருந்ததா?'' என்று கேட்டார்கள். கழுதை தான் கட்டப்பட்டிருந்தது என்றும், மாடு கட்டப்படாமல் இருந்தது என்றும், அப்பொழுது அங்கு மாட்டுக்காரரும் இருந்தார் என்றும் கூறப்பட்டது. அக்கணமே அலீ (ரலி) அவர்கள், ''மாட்டுக்காரர் கழுதைக்காரருக்கு ஒரு கழுதை கொடுக்க வேண்டும்!'' என்று கூறினார்கள்.

ஒரு சமயம் கலீபா உமர் (ரலி) அவர்களிடம் வழக்கொன்று வந்தது. இருவர், ஒரு பெண்ணிடம் சில சாமான்களைக் கொடுத்து, அவற்றை அவர்கள் இருவரும் சேர்ந்து வந்து கேட்காதவரை கொடுக்கக்கூடாது என்று கூறிவிட்டுச் சென்றனர். சில ஆண்டுகள் சென்றபின் அவர்களில் ஒருவர் வந்து தம் நண்பர் இறந்து விட்ட தாகவும் அதனால் அந்தச் சாமான்களைத் தம்மிடம் தரும்படியும் கேட்டார். ஆனால் அந்தப் பெண் அவற்றை அவருக்குக் கொடுக்க மறுத்தாள். ''இருவரும் சேர்ந்து வந்தால் ஒழியக் கொடுக்க முடியாது!'' எனக் கூறினாள். சிலர் தலையிட்டு அந்தச் சாமான்களை அவரிடம் கொடுத்துவிடும்படி கூறினார்கள். அவளும் அவ்விதமே கொடுத்துவிட்டாள். சில நாட்கள் சென்றன. அடுத்த ஆள் வந்து அந்தச் சாமான்களைத் தம்மிடம் தரும்படி கேட்டார். அவள் நடந்தவற்றைக் கூறினாள்.

வழக்கு கலீபா உமர் (ரலி) அவர்களிடம் வந்தது. ''எப்படி நீ ஒருவரிடம் கொடுக்கலாம், இருவரும் சேர்ந்து வந்து கேட்கும் போதுதான் கொடுக்கவேண்டும் என்னும் உறுதியான நிபந்தனை இருக்கும்போது?'' என்று கலீபா கேட்டார்கள். அந்தப் பெண் தான்

நிரபராதி என்றாள். வழக்கு அலீ (ரலி) அவர்களிடம் சென்றது. அவர்கள் அந்த ஆளைப் பார்த்து, ''குற்றவாளியுடன் நீர் செய்து கொண்ட நிபந்தனை உங்கள் இருவரின் அமானிதமாக அந்தச் சாமான்கள் இருக்கவேண்டும். அவை நீங்கள் இருவரும் சேர்ந்து வந்து கேட்கும் போது கொடுக்கப்படவேண்டும், தனித்தனியாக வந்து கேட்கும்போது கொடுக்கப்படக் கூடாது என்பதுதானே?'' என்று கேட்டார்கள். ''ஆம்'' என்றார் அந்த மனிதர். ''கூட்டிக் கொண்டு வாரும் உம் நண்பரை, உங்கள் இருவரிடமும் அவற்றை ஒப்படைப்பதற்கு!'' என்று அவர்கள் கூறினார்கள். 'நண்பரை எங்கு போய்த் தேடிக் கண்டு பிடித்து அழைத்து வருவது,' என நினைந்து அவர் அங்கிருந்து மறுமொழி எதுவும் பகராமல் அகன்றார்.

இவ்விதம் அலீ (ரலி) அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் காலத்தில் வந்த வழக்குகளையும் தீர்த்திருக்கின்றனர். அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்குப் பின் கலீபாவாக வந்த அபூபக்ர் (ரலி) உமர் (ரலி) ஆகியோர் காலத்திலும் பிரதம காஜியாக இருந்து வழக்குகளில் தீர்ப்பு வழங்கியிருக்கின்றனர். ''அல்லாஹ்வைத் தவிர்த்து வேறு எவருக்கும் அஞ்சாதே!'' என்பதே அவர்கள் நீதி வழங்கும் போது கொண்டிருந்த கொள்கையாகும். அதனால்தான் அவர்களின் தீர்ப்புகள் நீதியினின்றும் இம்மியளவும் பிறழாமல் இருந்தன. உமர் (ரலி) அவர்களே உரைத்தார்கள், ''அக்துனா அலீ'' என்று. அதன் பொருள்: ''நம் எல்லோரிலும் மிகப் பெரும் நீதிபதி அலீ'' என்பதாகும். இப்படியும் உமர் (ரலி) அவர்கள் இயம்பினார்கள்! ''நாட்டில் ஏதாவதொரு சிக்கலான பிரச்சினை கிளம்பும்போது அலீ இல்லாமல் போகாது அல்லாஹ் காப்பாற்றட்டும்!'' என்று

**வீரம்**

அறிவிற்கு அடுத்தபடியாக அவர்களை அணைந்திருந்த இன்னொரு தன்மை வீரமாகும். அதில் அவர்கள் இணையற்றவ ராகவே இருந்தார்கள். அதற்கு ஆதாரங்கள் அவர்களின் வாழ்வு முழுதும் விரவிக் கிடக்கின்றன. வீரத்திற்கு வேண்டாற்பாலது அஞ்சா நெஞ்சம். அண்ணல் நபி (ஸல்) அவர்களை மக்கநகர்ப் பகைவர் கொல்லத் தீர்மானித்த அன்றைய இரவைப் போன்ற அபாய மிக்க இரவு உலக சரித்திரத்தில் உண்டா? எவரைக் கொல்ல எத் தனித்துப் பகைவர் அனைவரும் கொலை வாளுடன் கூடி நிற்கின் றனரோ அவருடைய படுக்கையில் அவருக்குப் பதிலாகப்



படுத்ததைப் போன்ற அஞ்சா நெஞ்சை உலக வரலாறு கண்டது உண்டா? அலீ (ரலி) அவர்களின் இந்தத் துணிச்சலை அகிலம் இன்றளவும் பாராட்டிக் கொண்டிருக்கிறது.

அகிலம் என்ன, அல்லாஹ்வே அதைப் பாராட்டியிருக்கிறான். அல்லாஹ் தன் அமரர்களான ஜிப்ரயீல் (அலை), மிக்காயீல் (அலை) ஆகிய இருவரிடமும், ''நான் உங்கள் இருவருக்கும் நடுவே பொதுவாக ஒருவருடைய ஆயுளை மிகவும் நீளமாக்கினேன். அந்த ஆயுளை உங்களில் ஒருவர் மற்றவருக்குக் கொடுப்பவர் யார்?'' என்று கேட்டான். அமரர் இருவரும் தமக்கே நீண்ட ஆயுள் வேண்டும் என விரும்பினர். அப்பொழுது அல்லாஹ், ''நீங்கள் அலீ செய்தது போல் செய்யவில்லை. நான் அவருக்கும், முகம்மதுக்கும் அன்பான சகோத ரத்துவத்தை ஏற்படுத்தினேன். அவர் அந்த நபிக்குத் தம் உயிரையே பலியாக்கத் துணிந்து விட்டார். அவர் (நபி) படுக்குமிடத்தில் படுத்தார். நீங்கள் இருவரும் உலகிற்குச் சென்று அவரைப் பகைவரி டமிருந்து பாதுகாருங்கள்!'' என ஆணையிட்டான். அதன் பிரகாரம் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் அலீ (ரலி) அவர்களின் தலைப்பக்கமும் மீக்காயீல் (அலை) அவர்கள் அலீ (ரலி) அவர்களின் கால்பக்கமும் நின்று கொண்டு, ''அபூதாலிபின் புதல்வரே! அல்லாஹுத் தஆலா தன் அமரர்களிடம் உம்மைப் பற்றிப் பெருமையாகப் பேசுகிறான்!'' என்று அறிவித்தனர். இது பற்றித்தான் ''அல்லாஹ்வின் (திருப்) பொருத்தத்தைப் பெறுவதற்காகத் தன்னுடைய உயிரையே தியாகஞ் செய்யக் கூடியவர்களும் மனிதர்களிலுண்டு. அல்லாஹ் (இத்தகைய) அடியார்கள் மீது மிகவும் கருணையுடையோன்!'' (2 : 207) என்னும் இறை வசனம் இறங்கியது.

அல்லாஹ்வுக்காக ஆருயிரை அர்ப்பணிப்பதை எவ்வளவு எளிதானதாக அலீ (ரலி) அவர்கள் கருதினார்கள் என்பதை எண்பிப்பது அவர்களின் இந்த உரை: ''படுக்கையில் நான் படும் மரண வேதனையைவிட எவன் வசம் என் உயிர் உளதோ அவன் மீது ஆணையாக வாளினால் ஆயிரம் முறை என்னை வெட்டுவது எனக்கு இலேசாகும்.''

இஸ்லாம் அதன் ஆரம்ப ஆண்டுகளில் உயிர் மரணப் போராட்டம் நடத்திய போது அது பொருத நேர்ந்த களங்களி லெல்லாம் அலீ (ரலி) அவர்கள் இதே அர்ப்பண உணர்வுடன் பெருவீரம் காட்டிப் போர் புரிந்திருக்கிறார்கள். உஹதுப் போரின்

போது அண்ணல் நபி (ஸல்) அவர்களின் ஆணையை மீறியதன் காரணமாக முஸ்லிம்கள் சிறுதோல்வியை அணைய நேரிட்டது. அப்பொழுது அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பகைவர் நடுவில் சிக்கிக் கொண்டுவிட்டார். அவர்கள் இருந்த இடத்தில் இல்லாததை அறிந்ததும் அவர்கள் இறந்து விட்டார்கள் எனப் பகைவர்கள் கதை கட்டி விட்டனர். அதை அவர்களின் தோழர்களும் நம்பி விட்டனர்.

சிலர் திக் பிரமை பிடித்தவர் போலாயினர். சிலர் களத்தை விட்டே ஓட்டம் பிடித்தனர். உமர் (ரலி) அவர்களோ, 'இனிப் போராடி என்ன பயன்?' என உட்கார்ந்து விட்டார்கள். அவ்வாறு தம் உடலையும் உள்ளத்தையும் உட்காரவிடாத ஒருவர் அலீ (ரலி) அவர்கள். உண்மையில் அரிமா வன்னவரையும் நிலை குலைய வைக்கும் அந்த நெருக்கடி நிலையில் அலீ (ரலி) அவர்கள் என்ன செயதார்கள் தெரியுமா? அதை அவர்களே கூறுகிறார்கள். ''பகைவர் முஸ்லிம்களை வளைத்துக் கொண்டவுடனேயே அல்லாஹ்வின் தூதர் அவர்கள் என் கண்களை விட்டும் மறைந்து விட்டார்கள். அவர்களை நான் தோழர்கள் மத்தியில் தேடினேன். அவர்களை நான் காணவில்லை. அப்பொழுது நான், 'அல்லாஹ்வின் தூதர் அவர்கள் களத்திலிருந்து ஒடியிருக்க முடியாது. அவர்களை அல்லாஹ், நம் பாவச் செயல் காரணமாக வானுலகிற்கு உயர்த்தியிருக்கலாம். இனி வாளைக் கையில் ஏந்திப் பகைவர் கூட்டத்திற்குள் நுழைந்து பகைவரால் கொல்லப்படும் வரை போராடுவதைத் தவிர்த்து (வேறு) சிறந்த வழி நமக்கு இல்லை,' என எண்ணி வாளை உருவிப் பகைவரை உருக்குலைத்துக் கொண்டே சென்றேன். அதற்குள் அல்லாஹ்வின் தூதர் அவர்கள் மீது என் பார்வை பட்டு விட்டது. அப்பொழுது நான் அவர்களை அல்லாஹ் வானவர்களைக் கொண்டு காப்பாற்றியிருக்கிறான் என எண்ணி அளவற்ற மகிழ்ச்சியுடன் அவர்கள் அருகில் சென்று பார்க்கும் பொழுது அவர்களைத் தாக்கப் பகைவரின் கூட்டம் (பாய்ந்து) வருவதைக் கண்டேன். 'அலீயே! அவர்கள் இங்கு வராமல் அவர்களை நீர் போய் மறித்து விடுவீராக!' என (எனக்கு) அல்லாஹ்வின் தூதர் அவர்கள் ஆணையிட்டார்கள். நான் தன்னந்தனியனாய்ப் பகைவர் மீது பாய்ந்து சிலரை வெட்டி வீழ்த்தி அவர்களை வந்த வழியாகவே போகச் செய்தேன். அதன் பின் ஒரு கூட்டம் அல்லாஹ்வின் தூதர் அவர்களைத் தாக்க முன்னேறி வந்தது. அப்பொழுது அல்லாஹ்வின் தூதர் அவர்கள் ஆணையிட, அக்கூட்டத்தினரை எதிர்த்துத் தாக்கினேன்.''



இதன்பின் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் அவர்களிடம் வந்து அலீ (ரலி) அவர்களின் துணிகரமான தாக்கு தலையும் அவர்கள் அல்லாஹ்வின் தூதர் அவர்களுக்கு ஆற்றிய உதவி யையும் பாராட்டிப் பேசினர். அப்பொழுது அல்லாஹ்வின் தூதர் அவர் கள், ''அவர் (அலீ) என்னைச் சேர்ந்தவர். நான் அவரைச் சேர்ந்தவன்!'' என்றார்கள். அது கேட்டு உடனே ஜிப்ரயீல் (அலை) அவர்கள், ''அவ்வித மாயின் நான் உங்கள் இருவரையும் சேர்ந்தவன்;'' என அறிவித்தனர்.

அகழ்ப்போரின் போது அலீ (ரலி) அவர்கள் ஆயிரம் வீரர்க்கும் அதிகமானவர்கள் என அரபு அவனி எங்கும் பேசப்பட்ட அம்ர் இப்னு அப்துவுத் என்பவருடன் பொருத நேர்ந்தது. அறியாமைக் காலத்தில் அவர் பொருள் பொதி கொண்டு சிரியாவுக்குச் சென்றார். அவரை ஆயிரம் கள்வர்கள் வழி மறித்தனர். அப்பொழுது அவரிடம் வாள் மட்டும் தான் இருந்தது. கேடயம் இல்லை. தம்மிடமிருந்த சமுக்காளத்தை மடித்துப் பிடித்துக் கொண்டு அவர் வாள் சுழற்ற ஆரம்பித்தார். அவர் வாளுக்குப்பட்டுக் கள்வர் பலர் வீழ்ந்தனர். அவர் சக்கரமாகச் சுழன்று வாள் வீசியதையும், அவர் வாளுக்குப் பட்டுப் பலர் வீழ்ந்ததையும் பார்த்ததும் அந்த ஆயிரம் கள்வர்களும், 'இனியும் நாம் இங்கிருந்தால் நம் அனைவரையும் இவன் கொன்று விடுவான்!' என அஞ்சி ஓட்டமெடுத்தனர். அப்பொழுது அங்கிருந்த உமர் (ரலி) அவர்கள், ''கள்வர்களைக் கண்டு நாங்களெல்லாம் அஞ்சி நடுங்கிக் கொண்டிருக்கும் போது அம்ர் இப்னு அப்துவுத் கள்வர் களை விரட்டி விரட்டி அடித்தார்!'' எனப் பிறிதொரு சமயம் அவர் வீரம் பற்றிப் பேச்சு எழுந்த போது கூறினர். அந்த மாவீரரைத்தான் அலீ (ரலி) அவர்கள் நேரடிப் போருக்கு இழுத்து ஒரே வெட்டில் வீழ்த்தினார்கள்.

கைபர் கோட்டையைப் பிடிக்கப் போன அபூபக்ர் (ரலி) உமர் (ரலி) ஆகியோரெல்லாம் அதை ஆற்ற இயலாது திரும்பியபோது அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அப்பணிக்கு அலீ (ரலி) அவர்களைத்தான் அனுப்பி வைத்தனர். அப்பொழுது அவர்கள் ஏழு பேர்களால் கூட அசைக்க முடியாத அக்கோட்டையின் கதவைக் கழற்றிக் கேடயமாகப் பிடித்துக் கொண்டு கடும் போர் செய்தனர். அதை அவர்கள் வீசி எறிந்த போது அது பல சாண்களுக்கு அப்பால் போய் விழுந்தது என்று கூறப்படுகிறது. அப்போரில்தான் அவர்கள் தம் வாணாளில் தோல்வி என்பதையே அறியாத மெஹ்ராப் என்னும் மாவீரனை ஒரே வெட்டில் வீழ்த்தி மண் கௌவச் செய்தனர்.

போர் ஒன்றின் போது அலீ (ரலி) அவர்களைப் பகை வீரன் ஒருவன் அணுகிக் கடுமையாகத் தாக்கத் தொடங்கினான். அப்பொழுது அவன் வாள் முறிந்து விட்டது. கள நடுவில் கையறுந்த நிலையில் அவன் நின்றான். அவனுடைய அவல நிலையைக் கண்டதும் அவர்கள் வாள் வீசுவதை நிறுத்தினார்கள். பகை வீரனின் பலவீனத்தைப் பயன்படுத்திக் கொண்டு அவன் தலையைத் தரிப்பது வீரமாகாது என அவர்கள் எண்ணினார்கள். அவன் அவர்களைப் பார்த்து, ''நான் ஓடிப் போக மாட்டேன். எனக்கு ஒரு வாள் கொடும்! நான் சண்டையைத் தொடர்கிறேன்!'' எனக் கூறினான். அக்கணமே அவர்கள் தம் வாளை அவனிடம் கொடுத்துவிட்டு வெறும் கையுடன் நின்றார்கள். இதைப் பார்த்து அவன் அடைந்த ஆச்சரியத்திற்கு அளவில்லை. பேச்சிழந்து சில கணங்கள் நின்று விட்டு அதன் பின் அவன் கேட்டான் : ''உம்முடைய பகைவனுக்கு இந்த அபாயகரமான அன்பளிப்பைச் செய்ய நீர் எப்படித் துணிந்தீர்?''

அதைக் கேட்டு அவர்கள் முறுவலுடன் மொழிந்தார்கள். ''இதைத் தவிர்த்து வேறு நான் எதைச் செய்வது? என்னிடம் ஒருவர் கேட்கும் கோரிக்கையை என்னால் மறுக்க முடியாது!'' இதைக் கேட்டு அவன் சொன்னான். ''இத்தகைய மனிதர் முகம்மதைப் பின்பற்றுபவராய் இருக்கும் போது அவரின் போதனைகளை அவமதிக்க நான் யார்? உம்முடைய விரோதிகள் மீது அல்லாஹ் வெற்றியை அருளட்டும்! உம்முடைய வீரத்திற்கும் மேன்மைக்கும் நான்தான் பணிகிறேன்.''

சில சமயங்களில் அவர்கள் போர்க்களங்களுக்குக் கோவேறு கழுதை மீதேறிப்போவதுண்டு. அவ்வாறு அவர்கள் ஒரு முறை சென்ற போது அவர்களைப் பார்த்து ஒருவன், ''ஏன் நீர் கோவேறு கழுதை மீதேறிச் செல்கிறீர்? கீழே விழுந்து விடுவோம் என்னும் அச்சம்தான் அதற்குக் காரணமா? ஒரு குதிரை இன்னும் வேகமாய் உம்மைக் கொண்டு செல்லுமல்லவா?'' என்று கேட்டான். அதற்கு அவர்கள், ''கோவேறு கழுதை மெதுவாகவும் அதே சமயம் நிதானமாகவும் நடக்கும். நான் களம் நடுவில் கடும் சண்டைக்கிடையிலிருக்கும் போது அது அமைதியாக நின்று கொண்டிருக்கும். நான் ஒரு போதும் பகைவருக்குப் புற முதுகிட்டு ஓடியது கிடையாது. ஓடும் பகைவனை நான் விரட்டிக் கொண்டும் செல்வதில்லை. ஏன் நான் கோவேறு கழுதைக்குப் பதிலாக ஒரு குதிரையைத் தேர்ந்தெடுக்க வேண்டும்?'' என்று பதில் கூறினார்கள்.



அலீ (ரலி) அவர்கள் தம் மார்பின் மீதுதான் கவசம் அணிந்திருப்பார்கள். முதுகுப்புறம் அணிந்திருக்கமாட்டார்கள். அவர்களைப் பார்த்து ஒருவர், ''பகைவர் பின்புறமிருந்த தாக்கிவிடுவர் என்னும் அச்சம் உங்களுக்கு இல்லையா?'' என்று கேட்டபோது, அவர்கள், ''ஒரு பகைவன் என்னைப் பின்புறமாகத் தாக்கக் கூடிய திறன் பெறுவானாயின் அந்த நாளை நான் காணும்வரை வாழாது அல்லாஹ் காப்பாற்றட்டும்!'' என்று கூறினார்கள்.

ஒரு சமயம் அவர்கள் கவசம் அணிந்திருந்ததைப் பார்த்து அவர்களின் புதல்வர் ஹுஸைன் (ரலி), ''இது வீரர்களுக்கு அழகல்லவே!'' என்றனர். அதைக் கேட்டு அவர்கள் கூறினர்: ''உம் தந்தை இறப்பின் மீது அவர் விழுகிறாரா, இறப்பு அவர் மீது விழுகிறதா என்பதை லட்சியம் செய்ய மாட்டார்.''

## தாராளத் தன்மை

அலீ (ரலி) அவர்கள் பிறந்ததும் வறுமையில் தான், வளர்ந்ததும், வாழ்ந்ததும் வறுமையில்தான். அவர்களின் தந்தை அபூதாலிப் அவர்களின் வறுமை நிலைகண்டு மனம் வருந்தி ஐந்து வயதுச் சிறுவராயிருந்த அவர்களை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தம் வீட்டிற்கு அழைத்து வந்து தம் அரவணைப்பில் வைத்துக் கொண்டனர். கதீஜா (ரலி) அவர்கள் உயிரோடு இருந்தவரை உணவுப் பிரச்சினை அவர்களுக்கு உண்டாகியிராது. அரவணைத்துக் கொண்ட அண்ணல் நபி (ஸல்) அவர்களே வறுமையுற்றுவிட்ட போது அவர்களின் நிலையும் அப்படித்தான் ஆகியிருக்கும். பாத்திமா (ரலி) அவர்களைத் திருமணம் செய்து கொள்ளப் போனபோது அவர்களிடம் இருந்ததெல்லாம் பத்ருப் போரில் அவர்களுக்குக் கிடைத் கவசம்தான்.

திருமணத்திற்குப் பிறகாவது அவர்களின் வாழ்வில் வளம் வந்ததா? இல்லை. அதன் பிறகும் அவர்கள் வறுமையில்தான் உழன்றார்கள். உழைத்தால்தான் உணவு என்னும் நிலையில் தான் அவர்கள் இருந்து கொண்டிருந்தார்கள். ஒரு நாள் அவர்கள் தாங்க முடியாத அளவு பசி அதிகரித்து விட்ட போது ஏதாவது வேலை கிடைக்காதா என்று வெளியே புறப்பட்டார்கள். ஒரு பெண் தன் தோட்டத்தில் தனக்குத் தண்ணீர் இறைத்துத் தரும்படியும் ஒரு வாளிக்கு ஒரு பேரீத்தம் பழம் வீதம் கூலி தருவதாயும் கூறினாள். அதற்கு இணங்கி அவர்கள் பதினாறு வாளித் தண்ணீர் இறைத்த

போது அவர்களின் கைகள் கொப்பளித்து விட்டன. அதற்கு மேல் ஒரு வாளி கூட அவர்களால் இறைக்க இயலவில்லை. அந்தப்பெண் கொடுத்த பதினாறு பழங்களையும் பெற்றுக் கொண்டு வீடுவந்த அவர்கள் அவற்றைத் தாம் ஈட்டியது எப்படி என்று அங்கிருந்த அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் அறிவித்தார்கள். அதன்பின் அந்தப் பழங்களை அவர்கள் அனைவரும் பங்கிட்டு அருந்தினர்.

உண்பதற்கு ஒன்றுமே இல்லாத நாள் ஒன்றில் தாம் அடைந்த அனுபவம் ஒன்றை அலீ (ரலி) அவர்களே கூறுகிறார்கள் : ''உண்பதற்கு எங்களிடம் எதுவும் இல்லை. அல்லாஹ்வின் தூதரிடத்திலும் ஒன்றுமில்லை. (இவ்வாறு) பல நாட்கள் கழிந்தன. ஒரு நாள் நான் நடந்து கொண்டிருந்தேன். பாதையில் ஒரு தீனார் (நாணயம்) கிடந்தது. அதை எடுப்பதா வேண்டாமா எனச் சிறிது நேரம் சிந்தித்தேன். முடிவில் (அதை) எடுத்துக் கொண்டேன்.

''அப்பொழுது நான் மிகவும் வறுமையில் இருந்தேன். கடைத் தெருவுக்குச் சென்று மாவு வாங்கி வந்து பாத்திமாவிடம் கொடுத்து ரொட்டி தயாரிக்கும்படி கூறினேன். அவர் மாவைப் பிசைந்த போது பசியி(ன் மயக்கத்தி)ல் தம் தலை முடிகளெல்லாம் மாவில் விழுவது கூட அவருக்குத் தெரியவில்லை. நான் அல்லாஹ்வின் தூதர் அவர்களிடம் சென்று இந்தச் சம்பவத்தைச் சொன்னேன். அதற்கு அவர்கள், 'அதைச் சாப்பிடுங்கள்! அல்லாஹுத் தஆலா அதை உங்களுக்கு 'ரிஸ்கா'கக் கொடுத்திருக்கிறான்!'' என்று கூறினார்கள்.

உடுத்துவதற்கு உடை இன்றிக் கூட அவர்கள் கஷ்டப்பட்டிருக்கிறார்கள். ஒருமுறை அவர்கள் தமக்கு ஆடை ஒன்று வாங்குவதற்காகத் தம் வாளை விற்கச் சென்றார்கள். அதை அறிந்த ஒருவர் வாளை விற்கவேண்டாம் என்றும் ஆடை வாங்கத் தாம் பணம் கடனாகத் தருவதாயும் கூறினார். அலீ (ரலி) அவர்களின் வாழ்வு இப்படிக் கஷ்டமானதாய் இருந்ததற்குக் காரணம் அவர்களின் வறுமை மட்டுமல்ல. வண்மையும் ஆகும். 'தனக்கே இல்லாதபோது தானமும், தர்மமுமா?' என்று கேட்கலாம். ஆம், அவர்கள் தமக்கே இல்லாத போதுதான் தானமும் தர்மமும் செய்தார்கள். ஒரு நாள் அவர்கள் ஒரு தோட்டத்தில் தண்ணீர் இறைத்து அதற்குக் கூலியாகக் கிடைத்த வாற் கோதுமையுடன் வீட்டிற்கு வந்தார்கள். கொண்டு வரப்பட்ட வாற்கோதுமை மூன்று பங்கு வைக்கப்பட்டு, ஒரு பங்கு மாவாக்கப்பட்டுக் கூழ் காய்ச்சப்பட்டது. அது தயாராகியதுதான்



தாமதம். விட்டு வாயிலில் ஓர் ஏழையின் குரல் கேட்டது. உடனே அலீ (ரலி) அவர்கள் அதை எடுத்து அந்த ஏழையிடம் கொடுத்து விட்டார்கள். அடுத்த பங்கை எடுத்து அரைத்துக் கூழ் காய்ச்சினர். அது காய்ச்சப்பட்டதும் வீட்டு வாயிலில் ஓர் அநாதை வந்து நின்று, ''அருந்துதற்கு ஏதாவது தாருங்கள்!'' என்றான். அக்கணமே அது அவனிடம் கொடுக்கப்பட்டது. பிறகு மூன்றாம் பங்கு அரைத்துக் கூழாக்கப்பட்டது. அப்பொழுது வீட்டு வாயிலில் ஒருவன் வந்து நின்றான். அவன் ஒரு முஸ்லிமல்லாதவன். அவனுக்கு அது எடுத்துக் கொடுக்கப்பட்டது.

அலீ (ரலி) அவர்கள் வறுமையைத் தாம் தாங்கிக் கொள்ளத் தயாராய் இருந்தார்கள். ஆனால் அதனைத் தம் பிள்ளைகள் தாங்குவரா எனத் தயங்கினார்கள். அதை உறுதி செய்கிறது அவர்கள் தம் மகனார் முகம்மது ஹனீபுக்குக் கூறிய இவ்வறிவுரை: ''முகம்மது ஹனீபே! உனக்கு வறுமை வந்து விடுமோ என நான் பயப்படுகிறேன். நீ அதை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடிக்கொள் ! அது மார்க்கப் பற்றைக் குறைக்கிறது. அறிவை மழுங்கச் செய்கிறது. இறப்பை வரவழைக்கிறது. அது இறப்பைவிடக் கொடூரமானது.''

ஒரு சமயம் பாத்திமா (ரலி) அவர்கள் நோய்வாய்ப்பட்டனர். அப்பொழுது அவர்கள் தம் கணவரைப் பார்த்துத் தமக்கு மாதுளம் பழம் சாப்பிடப் பிரியமாயிருக்கிறது என்று கூறினர். இப்படி எதையும் கேட்காத பாத்திமா, நோய்வாய்ப்பட்ட நிலையில் கேட்கிறாரே என எண்ணி அலீ (ரலி) அவர்கள் மாதுளம் பழம் ஒன்று வாங்கப் புறப்பட்டார்கள். அடுத்திருந்த சிற்றூரில்தான் அது கிடைக்கும் என அறிந்து அங்கு சென்று ஒரு பழம் வாங்கிக் கொண்டு வீடு நோக்கி வந்து கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது அவர்களைக் கண்ட ஏழை ஒருவர் தமக்கு அதிகப் பசியாயிருக்கிறது என்றும் அவசியம் தமக்கு ஏதாவது தர வேண்டும் என்றும் வேண்டினார். ''என் வீடு அருகில்தான் இருக்கிறது. என்னுடன் வாரும்! உணவு தருகிறேன். இல்லையேல் பணம் தருகிறேன்!'' என்று அவர்கள் கூறினார்கள். ''எனக்கு நடப்பதற்குச் சக்தி இல்லை. பசிக் கிறக்கம் அதிகமாக இருக்கிறது. தாங்கள் வைத்திருக்கும் மாதுளம் பழத்தைத் தாருங்கள்!'' என்றார் அந்த ஏழை. அவருக்கு என்ன பதில் கூறுவதென்றே அவர்களுக்கு விளங்கவில்லை. தம்மிடம் இருக்கும் பொருள் ஒன்றை ஒருவர்

கேட்டு அதை 'இல்லை' என்று அவர்கள் இதுவரை கூறியதில்லை. எனவே அவர்கள் அந்த மாதுளம் பழத்தை அவரிடம் கொடுத்து விட்டு வீடு வந்து சேர்ந்தார்கள். அவர்களைப் பாத்திமா (ரலி) அவர்கள் முக மலர்ச்சியுடன் வரவேற்றனர். அவர்களின் நோய் பறந்து விட்டிருந்தது. அலீ (ரலி) அவர்கள் மனைவி உளம் மகிழ்வடைய வேண்டும் என்பதற்காகத் தாம் மாதுளம் பழம் வாங்கி வந்ததையும் அதை வழியில் ஓர் ஏழை கேட்க, வழங்கி விட்டதையும் கூறினார்கள். அதைக் கேட்டு பாத்திமா (ரலி) அவர்கள் இவ்விதம் பகர்ந்தனர் : 'தாங்கள் செய்த தர்மத்தால் அல்லாஹ் என் நோயை நீக்கி வைத்தான்.''

ஒரு நாள் அவர்களுக்கு அவர்களின் வறிய நிலையை அறிந்த ஒருவர் ஓர் ஒட்டகைச் சுமைப் பொருள்களை அன்பளிப்பாக அனுப்பி வைத்தார். ஒட்டகையை விட்டுப் பொருள்களை இறக்கக் கூட இல்லை. அதற்குள் அங்கு ஒருவர் வந்தார். தம் வறிய நிலையை வர்ணித்தார். அவரைப் பார்த்து அவர்கள் அந்த ஒட்டகை மீதிருக்கும் பொருள்களில் பாதியை எடுத்துக் கொள்ளும்படி கூறினார்கள். அதை எடுத்துக் கொண்டு, ''இன்னும் கொஞ்சம் தாருங்கள்!'' எனக் கேட்டார் அவர். அடுத்த பாதியையும் எடுத்துக் கொள்ளும்படி அவர்கள் கூறினார்கள். அதையும் எடுத்துக் கொண்டு, ''இன்னும் கொஞ்சம் கொடுங்கள்!'' எனக் கேட்டார் அவர். அந்த ஒட்டகையையும் எடுத்துக் கொள்ளும்படி அவர்கள் கூறினார்கள்.

இப்பொழுது வினோதமான நிகழ்ச்சி ஒன்று நடந்தது. இதுவரை ஒட்டகையைப் பிடித்துக் கொண்டு நின்ற ஒட்டகை ஓட்டி ஒட்டகையை அப்படியே விட்டு விட்டு ஓட்டமெடுத்தான். அவனைப் பிடித்து நிறுத்தி அலீ (ரலி) அவர்கள், ''ஏனப்பா ஓடுகிறாய்?'' எனக் கேட்ட போது அவன் சொன்னான் : ''என்னையும் எடுத்துக் கொள்ளும்படி தாங்கள் சொல்லிவிடலாம் எனப் பயந்துதான் ஓட்டமெடுத்தேன்.''

ஒரு நாள் அவர்கள் அழுது கொண்டிருந்தார்கள். அதைக் கண்டு சிலர் அவர்கள் அழுவதற்கான காரணம் பற்றிக் கேட்டனர். அதற்கு அவர்கள் அளித்த பதில் கேள்வி கேட்டவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. ''ஏழு நாட்கள் ஆகிவிட்டன. இன்னும் ஒரு விருந்தாளி கூட என் வீட்டிற்கு வரவில்லை. அல்லாஹ் என்னை இழிவு படுத்தி விட்டானோ என்னும் கவலையின் காரணமாகத்தான் அழுகிறேன்!'' என்று அவர்கள் கூறினார்கள்.



அப்பொழுது கதவு தட்டப்படும் ஒலி கேட்டது. வேகமாக எழுந்து சென்று அவர்கள் கதவைத் திறந்தார்கள். வெளியே அவர்களின் நெருங்கிய நண்பர் ஒருவர் நின்று கொண்டிருந்தார். அவரை அன்புடன் வரவேற்று, அளவளாவிய பின் அவர் வந்த நோக்கம் பற்றி அவர்கள் கேட்டார்கள். நண்பர், தமக்கு 4000 திர்ஹங்கள் கடன் இருப்பதாயும் அதைக் கொடுக்கத் தம்மிடம் வசதியில்லாததால் அவர்களை நாடி வந்திருப்பதாயும் கூறினார். அக்கணமே அவர்கள் அவரிடம் 4000 திர்ஹங்கள் கொண்டு வந்து கொடுத்து அவரைப் பரிவுடன் வழி அனுப்பி வைத்தார்கள். அவர் சென்ற பிறகு அவர்கள் அழ ஆரம்பித்தார்கள்.

இதைப் பார்த்து பாத்திமா (ரலி) அவர்கள், ''ஏன் இவ்வாறு கொடுத்து விட்டு அழுது கொண்டிருக்கிறீர்கள்?'' என்று கேட்டனர். அதற்கு அவர்கள், ''என் பொருள் போய் விட்டதை நினைந்து நான் கண்ணீர் வடிக்கவில்லை. எனனுடைய நெருங்கிய நண்பரின் தேவையை முன்பே அறிந்து அவருக்கு உதவி புரியாமல் என வீட்டை அவர் நாடிவரச் செய்து விட்டேனே என நினைத்துத்தான் கண்ணீர் வடிக்கின்றேன்!'' என்று கூறினார்கள்.

அவர்கள் எவருக்காவது மரணத் தொழுகை நடத்த நேர்ந்தால், ''அவருக்கு ஏதாவது கடன் உண்டா? என்று கேட்பார்கள். ''உண்டு'' எனறு கூறப்பட்டால், அந்தக் கடனைத் தாமே தீர்ப்பார்கள்.

ஒரு சமயம் அவர்கள் நிலம் வாங்கி அதில் கிணறு தோண்டி னார்கள். கிணற்றில் நீர் பொங்கிக் கொண்டு ஊறியது. அதைக் கண்டதும் ஊருக்குப் பயன்படத் தக்கது அக்கிணறு எனக் கருதி உடனே அதனைத் தானம் செய்து விட்டார்கள்.

இவ்வித ஈகைக் குணம் அவர்களிடம் இருந்ததற்கு, பொருளைப் பற்றி அவர்கள் கொண்டிருந்த இந்தக் கருத்துக்களும் காரணமாக இருந்திருக்கலாம் : ஒரு நாள் அவர்கள் வெள்ளி நாணயம் ஒன்றைத் தம் உள்ளங் கையில் வைத்துக் கொண்டிருந்தார்கள். அந்த நாணயத்தைப் பார்த்து அவர்கள் இளக்காரமாகச் சிரித்தார்கள். அதன்பின் சொன்னார்கள். ''நீ பயனுள்ள ஒரு பொருள்தான். ஆனால் என் கையை விட்டு நீ வெளியே போகும்வரை உன்னால் எனக்கு எந்த நன்மையும் செய்ய இயலாது!'' என்று. இன்னொரு நாள் அவர்கள் வெள்ளி, தங்க நாணயங்களைப் பார்த்துக் கூறினார்கள். ''வெள்ளை நிறத்தையும், மஞ்சள் நிறத்தையும் கொண்ட (வெள்ளி தங்க) நாணயமே! வேறு எவரையாவது போய் ஏமாற்று!'' என்று

## உயர் பண்புகள்

அறிவு, வீரம், தாராளம் ஆகிய தன்மைகளுடன் அலீ (ரலி) அவர்களிடம் இன்னும் பல அரிய பண்புகளும் அமைந்திருந்தன. கர்வம் என்பது அல்லாஹ் ஒருவனுக்கே உரிய ஒன்றாகும். அது தம்மிடம் அணுவளவும் ஏற்பட்டு விடாமல் அவர்கள் பார்த்துக் கொண்டார்கள். ''தன்னைப் பெரியவன் என்று எண்ணிக் கொள் பவனே மனிதரில் இழிவானவர்!'' என்று அவர்கள் சொன்னார்கள். அவ்வித எண்ணம் தமக்கு ஏற்பட்டு விடாவண்ணம் அவர்கள் எச்சரிக்கையுடன் இருந்தார்கள். மரியாதை நிமித்தம் தமக்கு முன் எவரும் நிற்பதையோ, தமக்குப் பின்னால் நடந்து வருவதையோ அவர்கள் அறவே விரும்பவில்லை. அதற்கு ஆதாரமாக அவர்களின் இந்த உரையையும் கூறலாம்; அவர்கள் நடந்து கொண்ட இந்த முறையையும் குறிப்பிடலாம்.

''ஒருவன் நரக வாதியைப் பார்க்க விரும்பினால் எவன் தனக்கு முன் மக்கள் நின்று கொண்டிருக்கத் தான் உட்கார்ந்து கொண்டிருக் கிறானோ அவனைப் பார்த்துக் கொள்ளட்டும்!''

ஒரு நாள் அவர்கள் புரவி மீதேறிச் சென்று கொண்டிருந்தார்கள். அப்பொழுது தம்மை மக்கள் வெறும் காலுடன் பின் தொடர்ந்து வருவதைப் பார்த்து, ''என்ன வேண்டும் உங்களுக்கு?'' என்று கேட்டார்கள். ''உங்களின் பின்னால் நடந்து வருவது எங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது!'' என்று மக்கள் கூறினர். அதைக் கேட்டதும் அவர்கள், ''திரும்பிப் போய் உங்கள் வேலைகளைப் பாருங்கள்! சவாரி செய்பவர் பின்னால் நடந்து வருவதன் மூலம் நீங்கள் உங்களிடம் தாழ்வு மனப்பான்மையை உண்டு பண்ணிக் கொள் கிறீர்கள், எனக்குக் கடுமை ஏற்படச் செய்கிறீர்கள்!'' என்று கூறினார்கள்.

அடக்கம் என்னும் அழகிய குணமும் அவர்களிடம் அதிகம் இருந்தது. ஒரு சமயம் அவர்கள் குத்பாப் பேருரை நிகழ்த்தும்போது அவர்களின் நாவன்மை கண்டு பரவசம் அடைந்தார் ஒருவர். அவரால் தம் உணர்ச்சியை அடக்கிக் கொள்ள இயலவில்லை. உடனே எழுந்து அவர்களைப் புகழ ஆரம்பித்தார். அவரிடம் பேச்சை நிறுத்தும்படி கூறிவிட்டு அவர்கள் அறிவித்தார்கள் : ''என் மக்கள் என்னைப் புகழக் கூடாது. ஏனெனில் எனக்குப் புகழ்ச்சி பிடிக்காது. என்னுடைய தகுதியற்ற நிலை எனக்குத் தெரியும்.''



ஒரு சமயம் அவர்களிடம் ஒருவர் வந்து ஏதோ ஒரு விஷயம் பற்றி விளக்கம் கேட்டார். அவருக்கு அவர்கள் விளக்கம் கூறினார்கள். ஆனால் அதை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. ''அமீருல் முஃமினீன் அவர்களே! தாங்கள் கூறுவது சரியல்ல!'' என்றார் அவர். அவ்விதம் அவர் கூறியதும் உண்மையில் நாம் சொன்னதில்தான் தவறு இருக்குமோ என அவர்கள் சிந்திக்கத் தொடங்கினார்கள். அதன்பின், ''நான் தவறிழைத்து விட்டேன். நீர் கூறுவதை ஏற்றுக் கொள்கிறேன்!'' என்று கூறினார்கள்.

அவர்கள் கலீபாவாக இருந்த போது அவர்களிடம் ஒருவர் வந்தார். எதையோ கூறி அவர்களை நிந்தித்தார். அதைக் கேட்டு அவர்கள் வாயிலிருந்து ஆத்திர வார்த்தைகள் வரவில்லை. இந்த இதச் சொற்கள் வெளிவந்தன : 'அவருக்கு ஆயிரம் பொற்காசுகள் கொடுங்கள்!''

ஒரு நாள் அவர்கள் கடைத்தெருவுக்குப் பேரீச்சம் பழம் வாங்கச் சென்றார்கள். அப்பொழுது அங்கு ஓர் இளம் பெண் அழுதுகொண்டு நிற்பதைக் கண்டு அவளிடம், ''ஏன் அழுகிறாய்?'' என்று கேட்டார்கள். ''என் எசமானருக்காக நான் இந்தக் கடையில் பேரீச்சம் பழங்கள் வாங்கிக் கொண்டுபோனேன். எசமானர் பேரீச்சம் பழங்கள் வேண்டாம் என்கிறார். கடைக்காரரோ பழங்களைப் பெற்றுக் கொண்டு பணத்தைத் திருப்பித் தர முடியாது என்கிறார்!'' என்று கூறினாள்.

அவர்கள் கடைக்காரரிடம் சென்று, ''இதில் இந்தப் பெண்ணின் குற்றம் எதுவும் இல்லையே. இவளிடமிருந்தும் பேரீச்சம் பழங்களை வாங்கிக் கொண்டு பணத்தைக் கொடேன்!'' என்றார்கள். அதைக் கேட்டு அவன் அவர்கள் மீது சீறி விழுந்தான். அவர்களை அவதூறாகவும் பேசினான். அதற்குள் அங்குக் கூட்டம் கூடிவிட்டது. ''நீ யாருடன் பேசுகிறாய் என்பது உனக்குத் தெரியுமா?'' என்று கூட்டத்தினர் கடைக்காரனைப் பார்த்துக் கேட்டனர். ''தெரியாது,'' என்றான் அவன். ''அவர்கள்தாம் அமீருல் முஃமினீன்!'' என்று கூட்டத்தினர் கூறினர்.

அதிர்ந்து போய் அவன் அலீ (ரலி) அவர்களைப் பார்த்து, ''நான் தங்கள் மீது கோபம் கொண்டு விட்டேன். தாங்கள் என் மீது கோபம் கொண்டால் மன்னித்துக் கொள்ளுங்கள்!'' என வினயமாய் வேண்டினான். ''நீ நேர்மையாய்க் கொடுக்கல் வாங்கல் செய்து,

நீதமாய் வாணிபம் செய்தால் நான் ஏன் கோபித்துக் கொள்கிறேன்?'' என்று அவர்கள் கூறினார்கள்.

ஒரு சமயம் அவர்களுக்கும், யூதன் ஒருவனுக்கும் தாவா ஒன்று ஏற்பட்டது. அவர்களின் கவசம் ஒன்று காணாமல் போய்விட்டது. அது அந்த யூதனிடம் இருப்பதைக் கண்டு அவர்கள், ''அது என்னுடையது!'' என்று கூறி அதனைக் கேட்டார்கள். அது தன்னுடையது என்று கூறி அவன் அதனைக் கொடுக்க மறுத்தான். கலீபாவாக இருந்த அலீ (ரலி) அவர்கள் நீதி கோரிக் காஜியிடம் சென்றார்கள். யூதன் அழைக்கப்பட்டான். விசாரணை நடந்தது.

''இந்தக் கவசம் என்னுடையது!'' என்றான் யூதன். அது தம்முடையதுதான் என்றும் அதைத் தாம் அவனுக்குக் கொடுக்கவுமில்லை விற்றதும் கிடையாது என்றும் கூறினார்கள் கலீபா.

''அமீருல் முஃமினீன் அவர்களே! அது தங்களுடையதுதான் என்பதற்குத் தங்கள் சார்பில் சாட்சிகள் உள்ளனரா? என்று காஜி கேட்டார். ''ஆம், என் மகனும், என் அடிமையும் சாட்சிகள்!'' என்றார்கள் கலீபா.

''முடியாது, சட்டப்படி மகன் தந்தைக்காகவும் அடிமை எசமானனுக்காகவும் சாட்சி சொல்வதை ஏற்றுக் கொள்ள முடியாது. வேறு சாட்கள் உண்டா?'' என்றார் காஜி. ''இல்லை'' என்றார்கள் கலீபா.

காஜி வழக்கைத் தள்ளுபடி செய்து விட்டார். காஜியின் நீதியும், அவர் தீர்ப்பை மறு சொல் இன்றிக் கலீபா ஏற்றுக் கொண்ட மாண்பும் யூதன் மனத்தைக் கவர்ந்து விட்டன. உடனே அவன் ஏற்றுக் கொண்டான் இஸ்லாத்தை. அடுத்து ஒப்புக் கொண்டான் கவசம் கலீபாவுடையதுதான் என்னும் உண்மையை.

ஒரு நாள் அவர்கள் கூட்டுத் தொழுகைக்குச் சற்றுத் தாமதமாக வந்தார்கள். அதற்குக் காரணம் வினவப்பட்டபோது அவர்கள் கூறினார்கள். ''வழியில் எனக்கு முன்னால் ஒரு யூத முதியவர் போய்க் கொண்டிருந்தார். அவரை முந்திக் கொண்டு வர நான் விரும்ப வில்லை. அவரோ மெதுவாக நடந்து சென்றார். அதனால்தான் தாமதம்.''

ஒரு முறை அவர்கள் இரண்டு துணிகள் வாங்கினர். தம் அடிமையைப் பார்த்து, ''அவற்றில் எது உனக்குப் பிரியமோ அதை எடுத்துக் கொள் !'' என்றனர்.



மற்றொருமுறை அவர்கள் தம் அடிமையுடன் கடை வீதிக்குச் சென்றார்கள். ''எனக்கு நல்ல துணியாய்ப் பார்த்து எடு!' என்று அடிமையிடம் கூறினார்கள். அவ்விதமே அவன் அவர்களுக்கு நல்ல துணிகளை எடுத்தான். ''உனக்கு வேண்டியதை எடுத்துக் கொள்!'' என்று அடிமையிடம் கூறினார்கள். அவ்விதமே அவன் தனக்குச் சாதாரணத் துணிகளை எடுத்துக் கொண்டான். இரண்டு பேரின் துணிகளும் தனித்தனிப் பொட்டலங்களாகக் கட்டப்பட்டு வீட்டிற்குக் கொண்டு வரப்பட்டன.

வீடு வந்ததும் அவர்கள் தமக்கு எடுத்த நல்ல துணிப் பொட்டலத்தை அடிமையிடம் கொடுத்தார்கள. அடிமைக்கு எடுத்த சாதாரணத் துணிப்பொட்டலத்தைத் தாம் எடுத்துக் கொண்டார்கள். ஆனால் அடிமை தனக்கு அளிக்கப்பட்ட துணிகளை ஏற்க மறுத்தான். ''விலை கூடுதலான ஆடையைத் தாங்கள்தாம் அணிய வேண்டும். ஏனெனில் தாங்கள் தூதர்களை வரவேற்கிறீர்கள். நீதி மன்றங்களை நடத்துகிறீர்கள். மக்களுக்கு உபதேசம் புரிகிறீர்கள். பல்வேறுபட்ட கலீபாக் கடமைகளைச் செய்கிறீர்கள்!'' என்றான் அவன். ''அல்ல. நீ இளமையானவன். என்னை விட உனக்குத்தான் நல்ல துணி பொருத்தமாய் இருக்கும்!'' என்றார்கள் அவர்கள்.

பொறுமையை அவர்கள் புகழ்ந்தும் இருக்கிறார்கள். பூண்டும் இருந்தார்கள். ''ஈமான் என்னும் நாட்டின் தலைநகராகும் பொறுமை!'' என்பது அவர்களின் பொன்மொழியாகும். பிறந்ததிலிருந்து இறக்கும் வரை அவர்களின் வாழ்வு துன்பம் நிறைந்தாய்த்தான் இருந்தது. ''என் வாழ்வின் எந்தச் சமயத்திலும் என்றும் அமைதியை (நான்) அறிந்ததில்லை!'' என்று அவர்களே கூறியிருக்கின்றனர். அவ்விதம் தம் வாழ்வு இருந்தும் அவர்கள் ஒரு பொழுதும் பொறுமை இழந்தது கிடையாது.

அவர்கள் ஒரு சமயம், ''இறைவனே! எனக்குப் பிணியின் மேல் பொறுமையைக் கொடு!'' என்று பிரார்த்திப்பதை அறிந்த அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ''நீர் அல்லாஹ்விடத்தில் அசௌக்கியத்தைக் கேட்காமல் ஆரோக்கியத்தைக் கேளும்!'' என்று கூறினர்.

அவர்களின் சகோதரர் ஜஃபர் (ரலி) இறந்த செய்தியை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அறிவித்தபோது, அந்தப் பெரும் துன்பத்தை அவர்கள் பொறுமையோடு சகித்துக் கொண்டார்கள்.

அவர்களின் ஆதரவாளர்களாய் இருந்த சிலர் துரோகிகளாக மாறி அவர்களுக்கு எதிராகக் கிளம்பினார்கள். அலீ (ரலி) அவர்களை வெளிப்படையாகவே திட்டினார்கள். 'கொலை செய்வோம்' என்று கூட மிரட்டினார்கள். இந்தக் குற்றங்களுக்காக அவர்கள் கைது செய்யப்பட்டால் அலீ (ரலி) அவர்கள் அதனை அங்கீகரிப் பதில்லை. அவர்களை விடுவிக்கும்படி கூறிவிட்டு, கைது செய்த அதிகாரி களைப் பார்த்து அவர்கள் சொல்வார்கள். 'அவர்கள் அரசாங்கத்திற்கு எதிராக உண்மையிலேயே குற்றம் இழைக்காத வரை, வெறும் வசை மொழியைப் பயன்படுத்துவதோ, 'வன் முறையில் ஈடுபடுவோம்' எனப் பயமுறுத்துவதோ அவர்களைச் சிறையில் அடைக்கப் போதுமான காரணங்களாக ஆகமாட்டா.'

ஒரு நாள் அவர்கள் பள்ளியில் சொற்பொழிவு செய்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது காரிஜிகள் எனப்படும் அந்தத் துரோகிகள் குழப்பம் ஏற்படுத்துவதற்காகக் கோஷம் எழுப்பினர். அதைக் கேட்டு அவர்கள் கூறினார்கள் : ''நீங்கள் எங்களோடு இருக்கும் வரை (இறை நிராகரிப்போரோடு நடக்கும் போரில் எங்களுக்கு ஆதரவு தரும்வரை) நீங்கள் அல்லாஹ்வை வணங்கு வதற்குப் பள்ளிவாயிலுக்கு வரும் உரிமையை நாங்கள் மறுக்க மாட்டோம். அரசாங்கப் பொது நிதியிலிருந்து உங்களுக்கு வர வேண்டிய பங்கினையும் நிறுத்த மாட்டோம். நீங்கள் எங்களோடு சண்டைக்கு வராதவரை உங்களுக்கு எதிராக இராணுவ நடவடிக் கையும் எடுக்க மாட்டோம்.''

காரிஜிகள் கலீபா அலீ (ரலி) அவர்களுடன் ஆயுதம் ஏந்திப் போரிட்டதைக் கண்ட ஒருவர், அலீ (ரலி) அவர்களைப் பார்த்து, ''அவர்கள் முஷ்ரிக்குகளா?'' என்று கேட்டார். ''இல்லை,'' என்றார்கள் அவர்கள். ''அவ்வாறானால் முனாபிக்குகளா?'' என்று அவர் கேட்டார். அதற்கும் அவர்கள், ''இல்லை'' என்றே பதில் கூறினார்கள். ''அவர்களின் நிலைதான் என்ன? அதனை நாங்கள் அறிந்து கொள்ள விளக்கவேண்டும்,'' என்று அவர் கேட்டபோது, ''அவர்கள் நம் சகோதரர்கள் : நமக்கு எதிராகக் கலகம் செய்கி றார்கள்!'' என்று அவர்கள் அமைதியாகப் பதில் கூறினார்கள்.

இத்தகைய பொறுமையைத்தான் அவர்களின் பகைவர்கள் பலவீனமாகக் கருதிக் கொண்டனர். முஆவியா (ரலி) அவர்கள் கலீபா அலீ (ரலி) அவர்களின் அதிகாரத்தின் கீழிருந்த எல்லைகளில்



வாழ்ந்த மக்களுக்குத் துன்பம் இழைத்தபோது அவ்விதமே தாமும் அவர்களின் பிராந்தியத்திற்குள் நுழைந்து அங்கிருந்த மக்களுக்குத் துன்பம் கொடுக்க அவர்களின் ஆளுநர் கமீல் பின் ஜியாத் அனுமதி கோரிய போது அதனை அவர்கள் மறுத்து அவருக்கு அளித்த பதில் இது : ''இரண்டு தவறுகள் ஒரு சரியாக ஆக முடியாது. அல்லாஹ்வின் அப்பாவி மக்களைத் துன்புறுத்து வதில் முஆவியா மகிழ்ச்சியடையலாம். அவ்வித நடவடிக்கை களை நான் எப்படி எடுப்பது?''

அலீ (ரலி) அவர்களிடம் மன்னிக்கும் மனிதப் பண்பும் அதிகம் இருந்தது. ஒரு நாள் அவர்கள் தம் அடிமைப்பையனைக் கூவி அழைத்தார்கள். அவன் பதில் கூறவுமில்லை. வரவுமில்லை. மறு முறையும் அவர்கள் அவனை உரத்து அழைத்தார்கள். அப்பொ ழுதும் அவன் பதில் கூறவுமில்லை. வரவுமில்லை. எழுந்து சென்று அவர்கள் அவன் எங்கே இருக்கிறான், என்ன செய்கிறான் என்று பார்த்தார்கள். அவன் அருகில் ஓர் இடத்தில்தான் படுத்திருந்தான். அவனைப் பார்த்து அவர்கள், ''நான் உன்னை அழைத்தேனே, அது உன் காதில் விழவில் லையா?'' என்று கேட்டார்கள். ''விழத்தான் செய்தது!'' என்றான் அவன். ''அப்படியானால் ஏன் நீ பதில் கூறவில்லை?'' என்று கேட்டார்கள் அவர்கள். அதற்கு அவன், ''நீங்கள் மன்னிக்கக் கூடியவர்கள். அதனால் அச்சமின்றி (அவ்விதம்) இருந்து விட்டேன்!'' என்று பதில் கூறினான். உடனே அவனை அவர்கள் விடுதலை செய்தார்கள்.

அவர்களுக்கு எதிராக மக்களை எழச்செய்தவர் மர்வான். அவர் ஒட்டகைப் போரில் பிடிக்கப்பட்டு, தம்முன் கொண்டு வந்து நிறுத்தப்பட்டபோது, அவரை அவர்கள் மன்னித்து அனுப்பி வைத்தார்கள். அவர்களைத் கத்தியால் குத்தி மரண காயம் உண்டு பண்ணியவன் அப்துர் ரஹ்மான் இப்னு முல்ஜம் முராதி. அவன் தம் முன் கொண்டு வந்து நிறுத்தப்பட்ட போது அவனுக்கு உண்ணவும், குடிக்கவும் கொடுக்காதவரை அவன் முன் வைத்துத் தாம் உணவு உண்ண மறுத்து விட்டார்கள்.

அவர்கள் நீதி தவறாதவர்களாயும், நியாயம் தவறாதவர் களாயும் இருந்தார்கள். நீதி தவறி ஆண்ட அரசர்கள் அழிந்த வரலாறுகள் அநேகமும் அவர்களுக்குத் தெரியும். 'அதனால்தான் அவர்கள் நீதியைப் பொருட்படுத்தாத அரசர்கள் பெருந்துன்பத்திற்கு இலக்காக நேரிடும்!' என அறிவித்தார்கள்.

உமர் (ரலி) அவர்கள் கலீபாவாக இருந்த காலம் அது. ஒருவர் அலீ (ரலி) அவர்கள் மீது வழக்கொன்றைக் கொண்டு வந்தார். வழக்கு கலீபா உமர் (ரலி) அவர்கள் முன் வந்தது. குற்றம் சாட்டியவரும் குற்றம் சாட்டப்பட்டவரும் உமர் (ரலி) அவர்கள் முன் உட்கார்ந்திருந்தனர். உமர் (ரலி) அவர்கள் அலீ (ரலி) அவர்களை விசாரணை செய்ய அழைக்கும் போது அவர்களை, ''அபுல் ஹஸனே!'' என விளித்தார்கள். அப்படித் தம்மை உமர் (ரலி) அவர்கள் விளித்ததும் அலீ (ரலி) அவர்கள் விழித்தார்கள். அவர்களின் அழகிய முகம் உடனே வாடிவிட்டது. அதனை உமர் (ரலி) அவர்கள் கவனிக்கத் தவறவில்லை.

இதுபற்றி அலீ (ரலி) அவர்களிடம் உமர் (ரலி) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் கேட்டபோது, அதற்கு அலீ (ரலி) அவர்கள் அளித்த இந்தப் பதில் உமர் (ரலி) அவர்களையே ஆச்சரியத்தில் ஆழ்த்தியது: ''குற்றம் சாட்டப்பட்டவனாக நான் உங்களின் முன் நின்றேன். அப்பொழுது தாங்கள் எனக்கும், என்மீது குற்றம் சாட்டியவருக்கும் இடையே எவ்விதப் பாரபட்சமும் காட்டக்கூடாது. ஆனால் தாங்கள் அப்பொழுது என்னை 'அபுல் ஹஸனே!' என அழைத்தீர்கள். அபுல் ஹஸன் என்பது தாங்கள் என் மீது பிரியத்துடன் இருக்கும் போது அழைக்கும் பெயராகும். அந்தச் சமயத்தில் தாங்கள் என்மீது காட்டிய பிரியம் வழக்குரைக்க வந்த இருவருக்கும் இடையில் பாரபட்சமின்றி நடந்ததாகாது. தாங்கள் தவறு செய்து விட்டீர்களே என எண்ணினேன். என் முகம் வாடிவிட்டது.''

நிதி விஷயத்தில் பலபேர் நீதியாக நடந்து கொள்வதில்லை. அந்த விஷயத்தில் அலீ (ரலி) அவர்கள் எப்படி நியாயமாக நடந்து கொண்டார்கள் என்பதை நிலைநிறுத்த எத்தனையோ நிகழ்ச்சிகள் கூறப்படுகின்றன. ஒரு சமயம் அவர்களின் சகோதரர் அக்கீல், அவர்களிடம் வந்து பொது நிதியிலிருந்து தமக்குக் கொஞ்சம் பணம் தரும்படி கேட்டார். முஸ்லிம்களுக்குப் பொருள் பங்கிடப்படும் வரை பொறுத்திருக்கும்படியும், அப்பொழுது அவருக்குரிய பங்கு கிடைக்கும் என்றும் அவர்கள் அவரிடம் கூறினார்கள். அது அவரை அதிருப்தி கொள்ளச் செய்தது. அவர் தம் கோரிக்கையை மீண்டும் வற்புறுத்தினர். அதைக் கேட்டு அவர்கள், ''பொதுக் கருவூலத்திலிருந்து திருடும்படி அக்கீல் என்னைக் கேட்பதைவிட அவரே கடை வீதிக்குச் சென்று களவாடுவது மேல்!'' என்று கூறினார்கள்.



அதைக் கேட்டு ஆத்திரப்பட்டு அவர் சிரியா சென்று முஆவியா (ரலி) அவர்களுடன் சேர்ந்து கொண்டார்.

ஒரு சமயம் அவர்களின் நெருங்கிய உறவினரான அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி) அவர்கள் பஸ்ராவின் ஆளுநராய் இருக்கும் போது பொது நிதியிலிருந்து தம் சொந்தச் செலவிற்குக் கொஞ்சம் பணம் எடுத்துக் கொண்டனர். அதை அறிந்ததும் அவர்கள் அது பற்றி அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி) அவர்களிடம் கேட்டார்கள். உடனே அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி) அவர்கள் நடுங்கிப் போய்ப் பணத்தைச் செலுத்தினர்.

ஒரு நாள் அவர்களின் புதல்வியிடமிருந்து பொது நிதிக் காப்பாளரான அபூ ராபிவுக்குக் கடிதம் ஒன்று வந்தது. அதில் அவர் பொதுநிதியிலிருக்கும் பொன்னரிய மாலை ஒன்றை மூன்று நாட்களுக்குப் போட்டுக் கொள்வதற்குத் தமக்குத் தந்துதவ வேண்டும் எனக் கேட்டுக் கொண்டிருந்தார். கலீபாவின் புதல்வி என்பதாலும், அதுவும் மூன்று நாட்களுக்குத் தானே என்பதாலும் அபூ ராபி மூன்று நாட்களுக்குள் தந்துவிட வேண்டும் என்னும் நிபந்தனையுடன் அதனைக் கொடுத்தனுப்பினார்.

அலீ (ரலி) அவர்கள் தம் புதல்வியின் கழுத்தில் பொதுநிதியைச் சேர்ந்த பொன்னரிய மாலையைக் கண்டதும், ''அது எப்படி உன் கழுத்திற்கு வந்தது?'' என்று கேட்டார்கள். ''கடனாகப் பெற்றேன் பொதுநிதிக் காப்பாளரிடமிருந்து!'' என்னும் பதில் புதல்வியின் வாயிலிருந்து தயக்கத்துடன் வெளிவந்தது. உடனே அலீ (ரலி) அவர்கள் பொது நிதிக் காப்பாளரை அழைத்து, ''அரசுக்குச் சொந்தமான இந்த மாலையை எப்படிக் கொடுக்கலாம், என் மகளுக்கு? என்று கேட்டார்கள். ''அமீருல் முஃமினீன் அவர்களே! தங்களின் புதல்விக்குத் தானே கொடுத்தேன்!'' என்றார் அபிராபி. ''உம் பொறுப்பில் கொடுத்ததால்தான் என் மகளின் கைக்குக் கேடு வராமலிருக்கிறது. என் மகளே தன் விருப்பத்திற்கு எடுத்திருந்தால் ஹாஷிம் குடும்பத்தில் கை துண்டிக்கப்படும் முதல் பெண்ணாக என் மகளைக் கண்டிருப்பீர்!'' என அபூராபிவைப் பார்த்துக் கூறிவிட்டு அவர்கள் உடனே அந்த மாலையைக் கொண்டு போய்ப் பொது நிதியில் சேர்க்கும்படி, தம் மகளைப் பார்த்துச் சொன்னார்கள்.

ஒரு சமயம் பொது நிதிக்கு ஆரஞ்சுப் பழங்கள் வந்தன. அவற்றில் ஹஸனும், ஹுஸைனும் ஆளுக்கு ஒரு பழம் எடுத்துக்

கொண்டனர். அதைக் கண்டதும் அலீ (ரலி) அவர்கள் அப்பழங்களைப் பறித்து ஏழை முஸ்லிம்களுக்குக் கொடுத்துவிட்டனர்.

ஒரு சமயம் அவர்களின் புதல்வி உம்மு குல்தூம் பொது நிதியிலிருந்து கொஞ்சம் தேன் எடுத்துக் கொண்டதை அறிந்ததும் அதற்கான பணத்தை உடனே செலுத்தினர். பொது நிதிக்கு வரும் பொருள்களை அப்போதைக்கப் போதே மிகவும் நேர்மையான முறையில் பங்கிட்டு மக்களுக்குக் கொடுத்து விடுவது அவர்களின் வழக்கமாகும். ஒரு சமயம் அவர்கள் சகல பொருள்களையும் பங்கிட்டுக் கொடுத்துவிட்டு அந்த இடத்தைத் தாமே பெருக்கி அந்த இடத்தில் இரண்டு ரக்அத் தொழுதார்கள்.

## ஆட்சித் திறன்

அமைதியும், அவகாசமும் அளிக்கப்பட்டிருந்தால் அலீ (ரலி) அவர்கள் தலைசிறந்த ஆட்சியாளராய் அமைந்திருப்பர் என்பதில் ஐயமில்லை. அத்தனை அமளிகளுக்கிடையிலும் அவர்கள் தாம் கலீஃபாவாக இருந்த காலத்தில் ஒரு நல்லாட்சியை நடத்திக் காட்டி ஆட்சித்திறன் தமக்கு உண்டு என்று நிலை நாட்டினார்கள். எவர்மீதும் அநியாயம் புரியக் கூடாது என்பதில் அவர்கள் அதிக அக்கறை எடுத்துக் கொண்டார்கள். அதிகாரிகள் பலவீன மக்கள் மீது அநியாயம் செய்து விடாமல் அவர்கள் பார்த்துக் கொண்டார்கள், வணிகர்கள் அறியாத மக்கள் மீது அநியாயம் புரிந்து விடாமலும் அவர்கள் கவனித்துக் கொண்டார்கள். அதிகாரிகளைக் கண்காணிக்க நம்பிக்கையான ஆட்களை அனுப்பி வைத்தார்கள். அவ்வாறு அவர்களால் கண்காணிக்க அனுப்பி வைக்கப்பட்டவர்களில் ஒருவர் கஃபு இப்னு மாலிக்.

இஸ்தக்ரின் ஆளுநர் முன்தர் பின் ஜரூத் வேட்டையாடுவதில் காலம் கழிப்பதை அறிந்ததும் அவரைப் பதவியிலிருந்து நீக்கினார்கள். இன்னொரு ஆளுநர் ஆடம்பரமாக வாழ்வதை அறிந்ததும் அவரை எச்சரித்தார்கள்.

முஸ்லிமல்லாத மக்களிடம் அம்ர் பின் முஸ்லிமா என்னும் அதிகாரி கடுமையாக நடந்து கொள்கிறார் என்பதை அறிந்ததும் அவருக்கு எழுதினார்கள் : ''அவர்களை நல்ல முறையில் நடத்தும்! அவர்களிடம் கண்டிப்புடன் நடந்து கொள்ள வேண்டாம்! உம் கண்டிப்பு எல்லை கடக்கலாம், அது கொடுமையாக மாறலாம்.''



அவர்கள் இரவில் பிரயாணியைப் போல் உடையணிந்து கொண்டு நகரத் தெருக்களைக் கண்காணிப்பார்கள். அப்பொழுது ஏழைகளின் துயர் அறிந்து அதைக் களைவார்கள். குற்றவாளிகளின் தவறறிந்து அவர்களைப் பிடிப்பார்கள். பகலில் அவர்கள் கையில் சாட்டையுடன் கடைவீதிகளுக்குச் செல்வார்கள். அப்பொழுது வணிகர்களைப் பார்த்து, ''நேர்மையைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்! நல்ல சாமான்களையே விற்பனை செய்யுங்கள்! சிறிய இலாபத்தில் திருப்தியைத் தேடுங்கள்! அதிக இலாபத்திற்கு வழி தேடாதீர்கள்!'' என்று சொல்வார்கள்.

அதிக இலாபம் பெற வேண்டும் என்பதற்காக உணவு தானியங்களைப் பதுக்கி வைப்பதை அவர்கள் அதிகம் வெறுத்தார்கள். ''பதுக்கி வைத்திருப்பவனின் இதயத்தில் இருள் குடி கொண்டிருக்கும். எவரேனும் பதுக்கி வைத்திருந்தால் அதனை எரித்துச் சாம்பலாக்குங்கள்!'' என்று அவர்கள் கூறுவார்கள்.

ஒரு நாள் அவர்களிடம் ஒருவர் வந்து, ''அமீருல் முஃமினீன் அவர்களே! நான் வாணிபம் செய்ய விரும்புகிறேன். என் தொழில் நல்ல முறையில் நடக்க அல்லாஹ்விடம் 'துஆ' செய்யுங்கள்!'' என்று வேண்டிக் கொண்டார். அவரைப் பார்த்து அவர்கள், ''வாணிபம் பற்றி இஸ்லாம் கூறும் வழிமுறைகளை அறிந்திருக்கிறீரா?'' என வினவினார்கள். அதற்கு அவர், ''வாணிபம் புரிவதற்கு மார்க்க அறிவு அவசியம்தானா?'' என்று கேட்டார்.'' நிச்சயமாக மார்க்க அறிவு அவசியமாகும். முதலில் மார்க்க அறிவு, அதன் பிறகுதான் வாணிபம். வாங்கியும், விற்றும் யார் முதலில் வாணிபம் செய்கிறாரோ அவர் வாங்கல், விற்றல் சம்பந்தமாக மார்க்கம் கூறுவதை அறியவில்லையானல் அவரை அவ்வாணிபம் வட்டியுடன் மோதச் செய்துவிடும்,'' என்று அவர்கள் அறிவித்தார்கள்.

மக்கள் ஒழுங்குடன் வாழவேண்டும் என்பதில் அவர்கள் அக்கறை எடுத்துக் கொண்டார்கள். ஒழுங்கு தவறியவர்களைத் தண்டிப்பதற்குத் தனித் துறையையே ஏற்படுத்தினார்கள். மக்கள் ஒருவரை ஒருவர் திட்டிக் கொள்வதையும் அவர்கள் தடை செய்தார்கள். அது அநாகரிகமானது என அவர்கள் கருதினார்கள். ஒரு முறையான காவல் துறையையும் அவர்கள் ஏற்படுத்தினார்கள்.

ஒருமுறை பாரசீகர்கள் அவர்களுக்கு எதிராகக் கலகம் செய்தனர். அவர்கள் கலகம் செய்த பாரசீகர் மீது கடுகளவும் கோபம் கொள்ளாது அவர்களைத் தாராளத் தன்மையுடன் நடத்தினார்கள். அது பாரசீகர்களைப் பரவசம் கொள்ளச் செய்தது. அவர்கள் அலீ (ரலி) அவர்களை அரபி நௌஷெர்வான் என அழைத்தார்கள். நௌஷெர்வான் என்பவர் நீதி நெறி தவறாத பாரசீக அரசர் ஆவார்.

உள் நாட்டில் ஏற்பட்டிருந்த குழப்பங்களால் அரசை விரிப்பதில் அதிகக் கவனம் அவர்களால் எடுத்துக் கொள்ள இயலவில்லை. ஆயினும் அவர்கள் காபூல், சிஸ்தான் ஆகியவற்றில் எழுந்த கலகங்களை அடக்கினார்கள். சிரிய எல்லைகளையும், பாரசீக எல்லைகளையும் பலப்படுத்தினார்கள். ஆயினும் கலீபா அபூபக்ர் (ரலி) அவர்கள் காலத்தில் தொடங்கிய அரசு விரிவு கலீபா உமர் (ரலி) அவர்களின் காலத்தில் உச்ச கட்டத்தை அடைந்து கலீபா அலீ (ரலி) அவர்களின் காலத்தில் தற்காலிகமாகத் தடைப்பட்டு நின்றது.

**மனைவி மக்கள்**

அலீ (ரலி) அவர்கள் பாத்திமா (ரலி) அவர்கள் இறந்ததும் பல பெண்களை மணந்தனர், பல பிள்ளைகளைப் பெற்றனர். பாத்திமா (ரலி) அவர்கள் மூலம் அவர்கள் மூன்று ஆண் குழந்தைகளும், நான்கு பெண் குழந்தைகளும் பெற்றனர்.

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் புதல்வியான ஜைனபு அவர் களின் புதல்வி ஆவார் உமாமா. இவரைத் தம் இறப்பிற்குப் பிறகு மணம் புரிந்து கொள்ள வேண்டும் எனப் பாத்திமா (ரலி) அவர்கள் கூறியிருந்தனர். அவ்விதமே அலீ (ரலி) அவர்கள் செய்தனர்.

அலீ (ரலி) அவர்கள் உம்முல் பனீன் பின்த் ஹிஷாம் என்பவரையும் மணந்து கொண்டனர். அவர் மூலம் அவர்களுக்கு அப்பாஸ், ஜஃபர், அப்துல்லாஹ், உதுமான் ஆகிய குழந்தைகள் பிறந்தனர். அப்பாஸைத்தவிர மற்ற மூவரும் கர்பலாவில் இறந்தனர்.

அலீ (ரலி) அவர்கள் மணந்த மற்ற மனைவியர், லைலாபின்த் மஸ்வூத், அஸ்மா பின்த் உமைஸ், சஹ்பா பின்த் ரபீயா, கவ்லா பின்த் ஜஃபர், உம்மே சஃஈத், மஹ்யா பின்த் உம்முல் கைஸ் ஆகியோர் ஆவர்.

அலீ (ரலி) அவர்கள் 9 பெண்களை மணந்து 11 ஆண் மக் களையும், 15 பெண் மக்களையும் பெற்றனர் என்று சிலரும் 11



பெண்களை மணந்து 14 ஆண் மக்களையும், 17 பெண் மக்களையும் பெற்றனர் என்று இன்னும் சிலரும் கூறுகின்றனர்.

அவர்களின் இறுதிக் காலத்தில் ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதன் தாய் பனீ கிலாப் என்னும் கூட்டத்தைச் சேர்ந்தவர். அந்தக் குழந்தையிடம் அதன் கூட்டப் பெயரைக் கேட்டால் அது நாய் மாதிரி குரைத்துக் காட்டும். அதற்குக் காரணம் கிலாப், கல்ப் என்னும் அரபிச் சொற்களுக்கு நாய் என்று பொருள். கவலை மிகுந்த தம் இறுதிக் காலத்தில் அலீ (ரலி) அவர்களுக்கு அக் குழந்தையுடன் விளையாடுவது சற்று ஆறுதலாயிருந்தது.